# ஸ்ரீவரதராஜ செல்வவிநாயகர் ஆலயம்
## நெதர்லாந்து



இருபத்தைந்து ஆண்டு நிறைவு (1991–2016)

# வெள்ளிவிழா மலர்

வெளியீடு 27.08.2016

**VERENIGING SRI VARATHARAJA SELVAVINAYAGAR**

**NEDERLAND**

# ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் ஆலயம்

## டென்ஹெல்டர் - நெதர்லாந்து



இருபத்தைந்து ஆண்டு நிறைவு (1991 - 2016)

வெள்ளிவிழா மலர் 27.08.2016

Annie Romein Verschoor Laan-32, 1784 NZ Den Helder, Netherland



## பிள்ளையார் வணக்கம்

சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்னவதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே.

மூஷிகவாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விலம்பிக ஸூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாதநமஸ்தே.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

# ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் ஆலயம்

வெள்ளிவிழா மலரில் மலர்ந்தவை


| பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆலய பரிபாலன சபையினரின் வாழ்த்துச் செய்தி | 3 |
| 2. | ஆலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் | 5 |
| 3. | விநாயக வழிபாட்டில் விஞ்ஞான உண்மைகள் | 9 |
| 4. | கோபுர தரிசனம் கோடி புண்ணியம் | 11 |
| 5. | பெருமை மிகுந்த பிரதோஷ விரதம் | 14 |
| 6. | இந்துசமயமும் விஞ்ஞானமும் | 16 |
| 7. | நலமும் வளமும் தரும் விநாயகர் சதுர்த்தி | 17 |
| 8. | தைப்பொங்கல் பண்டிகை | 19 |
| 9. | மகா சிவராத்திரி விரதம் | 21 |
| 10. | பங்குனி உத்தரம் | 24 |
| 11. | சித்ரா பௌர்ணமியின் சிறப்புக்கள் | 26 |
| 12. | ஆலயங்களில் வருடாந்த மஹோற்சவம் | 28 |
| 13. | ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் திருவூஞ்சல் பாடல் | 30 |
| 14. | ஆடி அமாவாசை விரதமும் அதன் சிறப்பும் | 33 |
| 15. | வரலட்சுமி விரதம் | 35 |
| 16. | கிருஷ்ண ஜெயந்தி | 37 |
| 17. | புரட்டாதிச் சனி விரதம் | 39 |
| 18. | நவக்கிரக 108 போற்றித் திருவுரு | 42 |
| 19. | நவராத்திரி விரதம் | 47 |
| 20. | கேதாரகௌரி விரதம் | 50 |
| 21. | தீபாவளி பண்டிகை | 52 |
| 22. | ஸ்ரீ துர்க்கை அம்மன் வழிபாடு | 54 |
| 23. | திருவிளக்குப் பூசை | 56 |
| 24. | ஸ்ரீ பைரவர் அருட்கடாட்சம் பெற அஸ்டமி விரதம் | 58 |
| 25. | பிள்ளையார் பெருங்கதை – விநாயகர் சஷ்டி விரதம் | 60 |
| 26. | கந்தசஷ்டி விரதமும் அதன் சிறப்பும் | 62 |
| 27. | திருவெம்பாவை விரதமும் மார்கழி மாதச் சிறப்பும் | 66 |
| 28. | நவக்கிரக பாடல்கள் | 68 |
| 29. | சனி பகவான் ஸ்தோத்திரம் | 69 |
| 30. | திருவாசகம் | 71 |
| 31. | திருவிசைப்பா | 72 |
| 32. | திருப்பல்லாண்டு | 73 |
| 33. | கௌரி காப்பு பாடல்கள் | 75 |
| 34. | பஞ்சபுராணம் .... ஏழு நாட்களுக்குரியவை | 77 |
| 35. | கந்தர் சஷ்டி கவசம் | 84 |
| 36. | திருவெம்பாவை | 89 |
| 37. | மங்களம் | 92 |

## ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் ஆலய
## பரிபாலன சபையினரின் வாழ்த்துச் செய்தி

ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் நெதர்லாந்தின் டென்ஹெல்டர் பதியினில் கோயில் கொண்டருளி இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்திருப்பதனை நினைத்து ஆலய பரிபாலன சபையினராகிய நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து எம்பெருமான் இந்த மண்ணில் வெள்ளிவிழாக் காண்கின்றார் என்பது நெதர்லாந்தில் வாழும் அனைத்து சைவ மக்களுக்கு மட்டுமல்லாமல் ஐரோப்பா வாழ் சைவத்தமிழ் மக்களுக்கும் இன்னும் சொல்லப்போனால் எமது தாயகமாகிய இலங்கைத்தமிழ் மக்களுக்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுப்பது மட்டுமல்லாமல் பெருமையையும் தருகின்றது.

தாயகத்தை விட்டுப் புலம்பெயர்ந்து அன்னிய மண்ணொன்றில் கால்பதித்த இலங்கைத் தமிழர்களாகிய நாம், இந்த மண்ணிலும் எமது மொழி, கலை, கலாச்சாரப் பண்பாடுகளையும், எமது வாழ்வுக்கு வழிகாட்டியாகத் திகழும் சைவசமயத்தையும், பேணிப்பாதுகாத்து வருகின்றோம் என்ற நிலையில் மகிழ்ச்சியுடன் பெருமைப்படுகின்றோம். இத்தனைக்கும் சான்று பகரும் வகையில் ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் ஆலயம் எழில்மிகு அழகிய இராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிப்பதாகும்.

இந்த ஆலயம் தோன்றிய வரலாறும், அதனுடைய வளர்ச்சியும் பற்றி இம்மலரில் அடுத்து வரும் கட்டுரைகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இந்த ஆலய பரிபாலன சபையும் செயற்பட்டு வருகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜனநாயக அடிப்படையில் பொதுச்சபை உறுப்பினர்களால் இந்தச் சபை தெரிவாகின்றது என்பதை யாவரும் அறிவார்கள். ஆலய பரிபாலன சபையின் உறுப்பினர்களில் அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படினும் ஆலயம் தொடர்பான நோக்கத்திலும், செயற்பாடுகளிலும் எந்தவித மாற்றமும் இல்லாமல் குறித்த இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருப்பதினாலேயே இந்த இருபத்தைந்து ஆண்டு காலப்பகுதியில் இந்துமத ஆகம விதிகளுக்கு அமைவான நிறைவான ஓர் ஆலயத்தைக் காண எம்பெருமான் எமக்கு அருள்பாலித்துள்ளார்.

இந்த ஆலயத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கட்டிடக்கலையும், சிற்பக்கலையும் அத்துடன் அழகிய வர்ண வேலைப்பாடுகளையும் நெதர்லாந்து மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இந்த ஆலயத்தின் சுற்றுப்புறங்களில் வாழ்பவர்கள் மட்டுமல்லாது நெதர்லாந்தின் ஏனைய நகரங்களில் வாழும் ஏனைய மக்களும் பேரூந்துகளில் பெருமளவானவர்கள் அவ்வப்போது இவ்வாலயத்திற்கு வருகை தந்தவண்ணம் உள்ளனர். அவர்கள் முற்கூட்டியே ஆலய சபையுடன் தொடர்பு கொண்டு தங்கள் வருகையை பதிவு செய்து வருவதனால் இந்த ஆலயம் தொடர்பான விபரங்கள் தகவல்களையும் பெற்றுச் செல்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் இவ்வாலயத்தின் சிறப்பினைப்பற்றித் தங்கள் கருத்துக்கள் அபிப்பிராயங்களை பத்திரிகைகள் தொலைக்காட்சிகள் வாயிலாகவும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

1991ம் ஆண்டில் டென்ஹெல்டர் பதியினில் சிறிய ஆலயமாக ஆரம்பமான இவ்வாலயம், இரண்டு இடங்களில் வாடகைக் கட்டிடங்களில் அமைந்திருந்து தற்போது மூன்றாவது இடமாக அதுவும் சொந்தக் காணியில் எம்பெருமான் விநாயகர் தன் விருப்பப்படியே இராஜகோபுரத்துடன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். இந்த நிலையை அடைவதற்கு இந்நாட்டில் வாழும் சைவத்தமிழ் மக்கள் வைத்திருந்த தளராத பக்தியும், ஆலயம் அமைப்பதில்

எடுத்த முயற்சிகளும் அத்துடன் முக்கியமாக நிதிப் பங்களிப்புக்களுமே இவ்வாலயம் அமைவதற்கு பெரும் காரணிகளாகவும் அமைந்தன.

இந்த வகையில் ஆலய பரிபாலன சபையுடன் ஒத்துழைப்புக்களை வழங்கி பேருதவியாக இருந்த அனைத்து மக்களையும் நன்றியுடன் இச்சபை நினைவு கூருகின்றது.

அதுமட்டுமல்லாமல் நெதர்லாந்தில் ஒரு சைவாலயம் அமைய வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயற்பட்டு அவ்வப்போது வேண்டிய உதவிகளைத் தந்தது மட்டுமல்லாமல் நிதியுதவிகளையும் மனமுவந்து அளித்த இலண்டன் மற்றும் ஐரோப்பா வாழ் தமிழ் மக்களையும் அன்புடன் நினைவு கூருகின்றோம்.

சைவசமயத்துடன் தமிழையும் வளர்க்க வேண்டும் என்பதில் எமது பரிபாலன சபை கடந்த ஆண்டுகளில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செயற்படுத்தி வருகின்றது. இந்நாட்டில் பிறந்து வளர்ந்து வரும் எமது எதிர்காலச் சந்ததியினர் தாய் மொழியாம் தமிழ் மொழியையும் கற்க வேண்டும், தமிழ் அறிவினையும் வளர்த்துக்கொள்ள வேண்டும், என்ற நோக்கில் தமிழ்ப் பாடசாலையைத் தொடங்கி தமிழ் வகுப்பக்களை நடாத்தி வருகின்றது. அத்துடன் எமது பாரம்பரியக் கலைகளான பரதநாட்டியக்கலை, கர்நாடக இசைக்கலை என்பனவற்றையும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலமாகக் கொடுத்து வருகின்றது.

இன்னும் தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட எம்தமிழ் உறவுகளுக்கும் ஆலயத்தினால் முடிந்த நிதியுதவிகளை அவ்வப்போது செய்துவருகின்றோம். இந்த வகையில் எல்லா வழிகளிலும் ஆலய பரிபாலனசபைக்குத் தத்தமது பூரண ஒத்துழைப்பக்களை வழங்கி வருகின்ற அனைத்து அன்பர்களுக்கும் இச்சிறப்பு மிக்க வெள்ளிவிழாக் காணும் நன்நாளில் நன்றிகளையும் மனமுவந்த வெள்ளிவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"மேன்மைகொள் சைவநெறி விளங்குக உலகமெல்லாம்"

ஆலய பரிபாலன சபை.

## இறைவன் இருக்கிறான்

இறைவன் இருக்கிறான். அவன் செயல்களை கவனித்துக் கொள்கிறான் என்று இவ்வுலக மக்கள் நம்புவதால்தான் தனிமனித ஒழுக்கம் ஓரளவாவது கட்டுப்பாட்டில் இருக்கிறது. மனிதர்களின் தவறுகளை கண்டிக்கும் தலைவனாகவே அவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான். அவனின்றி ஓரணுவும் அசையாது மற்ற உயிர்கள் அனைத்தும் இயற்கையின் விதிப்படி அடிபிறழாமல் நடக்கின்றன. மனிதன் ஆறறிவு பெற்றவன் என்பதால் அவனால் சுலபமாக இயற்கையின் விதிகளை சுலபமாய் மீற முடிகிறது. ஒழுக்கக் கேட்டவனை உண்டாக்குகிறான். இதனால் தான் தனிமனித ஒழுக்கத்தை கட்டுக்குள் வைக்க ஆலயம் தொழுவது சாலவும் நன்று என முன்னோர்களும் வேதங்களும் சித்த புருஷர்களும் கூறுகின்றனர். மனதை அடக்கி அமைதியுடன் வாழ பல வகையான மந்திரங்களையும் சுலோகங்களையும் விரதங்களையும் பிராத்தனைகளையும் நம் வேத நூல்களும் மகான்களும் வழங்கியுள்ளனர். மனம் எனும் குரங்கினை இறைவழிபாடு ஒன்றே நல்வழிப்படுத்தும். பேராசைகளையும் பெருதுன்பங்களையும் மந்திரங்களும் விரதங்களும் சீர்படுத்தும். வறுமையை நீக்கி செல்வத்தை பெற இறைவன் துதியோ கை கொடுக்கும். ஒப்பில்லா இறைவனை மனதில் நிரப்பி கள்ளமில்லாத வாழ்வை பெற்று அன்புருவமாய் திகழும் இறைவனோடு கலப்போம்.

# ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் ஆலய வரலாறு

## டென்ஹெல்டர் - நெதர்லாந்து

ஆயிரம் கண்கள் கொண்டு தரிசித்தாலும் ஐயனே! நீ அருளோடு வீற்றிருக்கும் திருக்கோயிலின் அழகத்தனையும் திக்கெட்டும் நின்று பார்த்தாலும் விண்ணில் ராஜகம்பீரமாக உயர்ந்து பஞ்சவர்ணத்தில் பட்டொளி வீசிப்பளபளக்கும் எழில்மிஞ்சக் காட்சி தரும் ராஜகோபுரத்தின் சிறப்பத்தனையும் கூறிவிட முடியவில்லை. கருணையே உருவான தெய்வமே! நீ அருள்மழை பொழிய அடியவர் நாமின்று ஆனந்தம் கொண்டோம். சொர்க்கத்தில் உன்னைத் தரிசிக்கின்றோமோ என்று சொக்கி மனம் துதிக்க நிற்கின்றோம். துதிக்கையானே உந்தன் திருவருளை எண்ணி மனம் வியக்கின்றது. அதிசயமாய் நீயிங்கு அருளாட்சி செய்கின்ற பேருளை எண்ணி மனம் பேருவகை கொள்கின்றது.

ஸ்ரீவரதராஜ செல்வவிநாயகரே 1991 ஆம் ஆண்டு தெடக்கம் நெதர்லாந்தில் வாழ்கின்ற தமிழ் மக்களிற்கு அருள் செய்யத் திருவுளம் கொண்டுவிட்டீர். இதனால் இன்றைக்கு பல்லாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த வரலாறு உனக்கில்லை. என்றாலும் ஒவ்வொரு நாளும் நீ நிகழ்த்தும் அற்புதங்கள் இக்கலியுகத்தில் கணக்கிலடங்காது. உன்னைக் காணவந்த பக்தர்கள் அனைவரிற்கும் நீ காட்சி தந்த திருவருள் உன்னருளாட்சியின் சிறப்பாகும். ஏட்டிலும், எழுத்திலும் அடக்கி வைக்க முடியாது உந்தன் அற்புதத்தை இன்னும் எத்தனை யுகங்களிற்கு உன் அருளாட்சி இவ்வாலயத்தில் தொடர்ந்திருக்குமோ அது எதனையும் நாமறியோம். ஆனாலும் ஐங்கரனே! எங்கள் நெஞ்சம் உறைந்தவனே! உன் ஆலயத்தின் வரலாறு எங்களை அதிசயிக்க வைக்கின்றது.

ஐரோப்பாக் கண்டத்தின் கடல்நீர் மட்டத்திற்குக் கீழே தாழ்ந்து கிடக்கும் நாடாகிய ஆதிகாலத்தில் ஒல்லாந்து என்றும், தற்போது நெதர்லாந்து என்றும் அழைக்கப்படுகின்ற நாட்டின் கண்ணே அதன் வட பகுதியிலே மூன்று பக்கங்களும் கடலாலும் சமுத்திரத்தாலும் சூழ்ந்த பழமை மிக்க டென்ஹெல்டர் என்னும் பதியினிலே அமைந்த பல சிறப்புக்களைக் கொண்ட ஆலயமாகும். இது இறைவனின் திருவருளால் எல்லோரும் வியக்க அபரிதமான வளர்ச்சி கண்ட ஆலயமாகும்.

இலங்கையில் தொடங்கிய இனக்கலவரத்தால் தாய்மண்ணில் செந்நீராறு ஓடியபோது, திக்குத் தெரியாது தறிகெட்டு நாலாபுறமும் சிதறியோடிய எம்மவர்கள் எங்கு போகிறோம் என்று தெரியாமல் ஒல்லாந்தில் கரை சேர்ந்தபோது, அவர்கள் இந்நாட்டில் எதிர்கொண்ட சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. காலநிலையின் கடும் குளிர் வாட்டாமல் வாட்டியது. புரியாத மொழி மூளையினைப் பிய்த்தெடுத்தது. உரைத்து விடக்கூட தமிழ் உறவு கிடைக்கவில்லை. வெள்ளி தெரியாது, வியாழன் தெரியாது, ஆடி தெரியாது, அமாவாசை தெரியாது, தவியாய்த் தவித்தார்கள். இறைவழிபாடு செய்ய விரும்பியபோது டென்ஹெல்டர் புனித நிக்கொலாஸ் தேவாலயத்தின் குருவானவர் விடுதியின் சிறிய அறையொன்றை இடமாகக் கொடுத்தார்.

அன்று இங்கிருந்த மெய்யன்பர்களிற்கு அருள்புரிய திருவுளம் கொண்ட எம்பெருமான் அருள்நிறை கணபதியாக 1991 ஆம் ஆண்டு விக்ர வடிவில் நெதர்லாந்தின் டென்ஹெல்டர் பதியினில் எழுந்தருளினார். 29-03-1991 பிரசோற்பதி வருடம் பங்குனி மாதம் உத்தர நட்சத்திர தினம் வெள்ளிக்கிழமையன்று நெதர்லாந்து வாழ் அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்றுகூடி சைவசமய விதிமுறைகளுக்கமைய குருமார்களினால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வினைகள் நீக்கி நலம் நல்கும் விநாயகருக்கு ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் என்ற நாமம் சூட்டி வழிபட்டனர்.

மூலவிக்கிரகமான விநாயகரும் பரிவார மூர்த்திகளாக மகாலட்சுமி, கண்ணபெருமான், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான், வைரவர் போன்ற தெய்வங்களுடன் காட்சிதரும் இவ்வாலயம் தன்னை நாடிவரும் பக்தர்களின் குறை களைந்து நிறைவான வாழ்வளிக்கின்றது. விநாயகர் அடியார்களின் மனங்களிலெல்லாம் நிறைந்து செல்வவிநாயகராக வீற்றிருந்து அருள் நல்கி வருவதோடு இங்கு சைவமும் தமிழும் தழைத்தோங்க அருள்பாலிக்கின்றார். எத்தனை தடைகள் ஏற்படினும் நிர்வாகத்தினர்க்கு உறுதுணையாக நின்று அத்தனை தடைகளையும் உடைத்து துணை நிற்கின்றார். நாளுக்கு நாள் தன்னை நாடிவரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையாலும் அங்கு ஏற்பட்டட வசதியீனங்களினாலும் தனக்கென வேறு ஒரு இடம் வேண்டும் என்று எம்பெருமான் விரும்பியமையாலும், Elzenstraat-36 என்ற பழைய பாடசாலைக் கட்டிடத்தை தெரிவு செய்து வாடகைக்கு குடியேறினார்.

இவ்விடத்தினை தமிழ் மக்களிற்குத் தனியிடமாக ஒதுக்குவதற்கு ஆலய நிர்வாக சபையினருக்கு டென்ஹெல்டர் அகதிகள் சங்கம் செய்த உதவிகளும் ஒத்தாசைகளும் போற்றுதற்குரியதாகும். அத்தோடு எமது நிர்வாகம் 01-08-1992 அன்றிலிருந்து நெதர்லாந்து நாட்டின் சட்டதிட்டங்களுக்கமைய ஒரு பதிவு செய்யப்பட்ட அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டு தொடர்ந்து இயங்கி வருவதற்கான அனுமதியும் சட்டபூர்வமாக கிடைக்கப்பெற்றது. 17-08-1992 திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் பரிவாரமூர்த்திகளுடன் பக்தர்கள் புடைசூழ வீதிவலம் வந்து பிரவேசம் செய்த செல்வவிநாயகர், 11-09-1992 வெள்ளிக்கிழமை பகல் 12.15 முதல் 1.35 வரையுள்ள பூரணை திதியும் சதய நட்சத்திரமும் சித்தயோகமும் தனு லக்கினமும் கூடிய மங்கள சுபமுகூர்த்த வேளையில் சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் கண்டபோது அவரின் அருள் பலமடங்கு அதிகரித்து பெருகியது.

1996 ஆம் ஆண்டு அரசின் கட்டிடங்கள் புனர்நிர்மாணம் செய்யும் திட்டத்தின் கீழ் இவ்வாலயத்தின் கட்டிடமும் பழுது பார்க்கப்பட்டபோது மீண்டும் பாலஸ்தானம் செய்யப்பட்டது. அச்சமயம் விநாயகரின் மூலவிக்கிரகம் சிறிதாக இருந்தமையால் உருவத்தில் பெரிதான விநாயகர் விக்கிரகம் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டதோடு மூலமூர்த்தி மகாலட்சுமி, கண்ணபெருமான், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான், வைரவர் போன்ற மூர்த்திகளுக்கு தனித்தனியான பீடங்கள் அமைக்கப்பட்டு மங்களகரமான தாதுவருடம் பங்குனி மாதம் 10 ஆம் நாள் 22-03-1997 ஞாயிற்றுக்கிழமை காலை 8.46 மணி முதல் 10.18 வரையுள்ள பூரணை திதியும் பங்குனி உத்தர நட்சத்திரமும் சித்தமிர்தயோகமும் இடப லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில் மீண்டும் மூலமூர்த்திகளிற்கும், பரிவாரமூர்த்திகளிற்கும் புனராவர்த்தன பிரதிஸ்டா மகாகும்பாபிஷேகம் ஆகமமுறைப்படியும் மிகுந்த ஆசாரத்துடனும் செய்யப்பட்டது. பல சிறந்த சிவாச்சாரியார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று பூர்த்தியாக சங்காபிஷேகம் நடைபெற்றது.

விநாயகப்பெருமான் நீண்டநாட்கள் வாடகைக் கட்டிடத்தில் இருப்பதற்கு விரும்பாமையோ அல்லது இந்த ஒல்லாந்து நாட்டில் தனக்கு ஓர் இடம் நிரந்தரமாக அமையவேண்டும் என்று விரும்பினாரோ அவரின் பார்வையிலே எமக்கு மீண்டும் சிக்கல்கள் ஏற்பட்டது. அரசின் பழைய கட்டிடங்களை இடித்து புதிய நகர் நிர்மாணத் திட்டத்தின்கீழ் ஆலயம் அமைந்துள்ள இடங்களிலுள்ள கட்டிடங்களையும் விரைவில் அகற்றவேண்டிய நிலையேற்பட்டது.

13 ஆண்டுகளாக சிறுகச் சிறுக சேர்த்து வளர்த்த எமது ஒரே ஒரு சொத்தான இவ்வாலயம் கைநழுவிப் போய்விடுமோ என்று கதிகலங்கி பக்தர்கள் நின்றவேளையில் எம்பெருமானின் பேரருளினால் ஆலயம் அமைப்பதற்கு உகந்த நிலமொன்றை வாங்கக்கூடிய வாய்ப்புக் கைகூடியது. பல சிரமங்களின் பின்னர் கைகூடிய அந்த நிலத்தை வாங்குவதற்கு போதிய பணமின்றி நிர்வாகத்தினர் தவித்தபொழுது இந்த சிறிய நாட்டில் சிறிய எண்ணிக்கையில் வாழ்ந்த தமிழர்கள் நான் முந்தி நீ முந்தியென தங்களால் முடிந்த பொருளுதவியை செய்ய முன்வந்தார்கள்.

அது மட்டுமல்ல லண்டனில் நடைபெற்ற சைவ மகாநாட்டிலே ஆலய நிர்வாகத்தினர் தங்கள் பிரச்சினையினை எடுத்துச் சொன்னபோது அங்கிருந்த அனைவரும் கருத்தொருமித்து இவ்வாலயத்திற்கு நிதியுதவி செய்வதெனத் தீர்மானித்தார்கள். அங்குள்ள இந்து ஆலயங்களும் புண்ணிய சீலர்களும் இவ்வாலயத்திற்கு நிதியை வாரி வழங்கினார்கள். அதுமட்டுமல்ல ஐரோப்பாவில் உள்ள ஏனைய ஆலயங்களும் தங்களால் முடிந்த உதவியை செய்ய முன்வந்தனர். இதில் Hamm காமாட்சிஅம்பாள் ஆலயமும் அதன் பிரதமகுருவும் குறிப்பிடத்தக்கவர்கள்.

எம்பெருமானின் பேரருளினாலும் பெருங்கருணையினாலும் மிகக்குறுகிய கால நிதி திரட்டலோடு ஒல்லாந்து நாட்டிலே ஓங்கியெழுந்த இராஜகோபுரத்துடன் கூடிய ஆகம விதிகளிற்குட்பட்ட விநாயகர் ஆலயம் அமைப்பதற்கு மிகவும் உகந்த நிலம் 01-09-2000 ஆம் ஆண்டு விநாயகருக்குகந்த ஆவணி சதுர்த்தி தினத்தில் ஆலயத்தின் பெயரால் அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. பக்தர்கள் எல்லோரும் விநாயகருக்கு ஆலயம் விரைவாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தை தம் சிந்தையில் சுமக்கத் தொடங்கி நீண்ட நாட்களாகின்றது.

ஸ்ரீ மங்களகரமான விஷேச வருடம் ஆவணித் திங்கள் 6ஆம் நாள் 22-08-2001 புதன்கிழமை விநாயகருக்கு மிகவும் உகந்ததாகிய ஆவணி சதுர்த்தி தினத்தில் பகல் 12.00 மணி தொடக்கம் 1.00 மணி வரையுள்ள சுபமங்கள வேளையில் வேண்டுவோர்க்கு வேண்டுவதை வாரி வழங்கும் ஸ்ரீ வல்லாம்பிகா சமேத ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகப் பெருமானுக்கு நெதர்லாந்திலே, காலத்தால் அழியாத விண்ணைத்தொடும் இராஜகோபுரத்துடன் ஆகமவிதிகளுக்குள் அமைந்த ஆலயம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. எத்தனையோ இடையூறுகள் சிரமங்கள் பண நெருக்கடிகள் ஏற்பட்டாலும் அத்தனையும் எம்பெருமான் தன் அருட்பார்வையால் தகர்த்து நாம் வணங்க தான் எழுந்தருளும் ஆலயம் அமைய அருள் பாலித்துள்ளார்.

எம்பெருமானின் பேரருளால் மங்களகரமான சுபானு வருடம் உத்தராயணம் ஆனித் திங்கள் 22ஆம் நாள் 06-07-2003 ஞாயிற்றுக்கிழமை பூர்வபட்சமும் சப்தமி திதியும் உத்தர நட்சத்திரமும் கன்னி லக்கினமும், ஆனி உத்தர திருநாளும் கூடிய சுபமங்கள நாளில் பகல் 12 மணி 12 நிமிடம் வரையுள்ள சுபவேளையில் ஸ்ரீ வல்லாம்பிகா சமேத ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகப் பெருமானிற்கும், பரிவார மூர்த்திகளுககும், அநாவர்த்த பிரதிஷ்டா நூதன ஆலய பஞ்சகுண்ட மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் அதன் பூர்த்தியாக சங்காபிஷேகமும் எம்பெருமானின் திருவருளால் நிறைவேற்றுகையில் இறைவனின் திருவருளும் மிகச் சிறப்பாகப் பெருகிவர கும்பாபிஷேகம் நடந்தேறியது.

இதுவரை எம்பெருமானிற்கு ஆண்டுதோறும் நடைபெற்று வந்த அலங்கார உற்சவம், மகோற்சவமாக திருவருள் பெருகியது. இம் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 6 ஆம் நாள் மாம்பழத் திருவிழாவும், 7 ஆம் நாள் கப்பல் திருவிழாவும், 8 ஆம் நாள் சப்பறத் திருவிழாவும், 9 ஆம் நாள் தேர்த் திருவிழாவும், 10 ஆம் நாள் தீர்த்தத் திருவிழாவும், இரவு திருவூஞ்சல், 11 ஆம் நாள் பூங்காவனத்

திருவிழாவும் தொடர்ந்து வைரவர் மடையுமாக, மண்டபப்பூசைகளுடன் ஆகம விதிகளிற்கமைய இலங்கை, இந்தியாவிலுள்ள அருள் ஆலயங்களில் நடைபெறுவது போன்று மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது.

2004ம் ஆண்டில் எம்பெருமானிற்கு அழகிய சித்திரத்தேர் அதி அற்புதமாக அமையப்பெற்றது. அடியார்கள் மெய்சிலிர்த்து மகிழ இந்நாட்டில் வாழும் ஏனைய இன மக்களும் பக்தி கொண்டு பரவசம் கொள்ள பஞ்சமுக விநாயகராக எம்பெருமான் சித்திரத்தேரேறி மங்கல வாத்தியங்கள், பக்தி, பஜனைப் பாடல்கள், வேத மந்திரங்கள், காவடிகள், கற்பூரச்சட்டிகளோடு ஆனந்த சொருபனாக அவனியில் தன்னாட்சி செழித்திட டென்ஹெல்டர் வீதியில் வலம் வந்த திருக்காட்சி நெஞ்சத்தில் பதிந்து நெகிழ்ந்து மனமுருகச் செய்தது.

இறைவனின் பெருங்கருணையினால் தொடர்ந்து வந்த ஆண்டுகளிற்குள்ளே ஆலயத்திற்கு அடுத்ததாக கல்யாண மண்டபமும், அதனுடன் கூட சிவாச்சாரியார்களும் தங்குவதற்கு வேண்டிய இடங்களும் அமைக்க முடிந்தது. இடைவிடாது பக்தர்களின் வேண்டுதல்களாலும், பூசைகளாலும், இறைவன் ஆலயத்தில் இலட்சுமி கடாட்சம் பெருகி திருவருளும் பெருகிவரத் தலைப்பட்டது. ஆலயத்தில் பூர்வபக்க, அபரபக்க சதுர்த்திப் பூசைகள் முதற்கொண்டு நவராத்திரி, கேதாரகௌரி, கந்தஷஷ்டி, திருக்கார்த்திகை பிள்ளையார் பெருங்கதை, திருவெம்பாவை போன்ற விரதம் அனுட்டிப்பதற்குரிய பூசைகள் வரை அனைத்துமே சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அத்தோடு தினமும் மூன்று காலப்பூசைகள் நடைபெறுவதோடு, வெள்ளி, செவ்வாய், ஞாயிறு தினங்களில் விஷேச சிறப்பு வழிபாடுகளும் நடந்தேறி இறைவன் அடியவர்களிற்கு அருள்பாலித்து வருகின்றார்.

எம்பெருமானின் பேரருளால் 2011 ஆம் ஆண்டு ஆவணி சங்கடகர சதுர்த்தியன்று இராஜகோபுரம் அமைப்பதற்கான பணி தொடங்கப்பட்டது. இதனை இந்நாட்டின் கட்டிடக்கலை நிர்மாணிப்பாளர்கள் ஆரம்பித்து இராஜகோபுரத்தின் அடுக்குத் தட்டுகளை மிகச்சிறப்பாகவும், உறுதியாகவும் அமைத்துத்தர, இந்தியாவின் சென்னையைச் சேர்ந்த சிற்பகலா நிலையம் இராஜகோபுரத்தை முழுமையாக்கி, சிற்பங்களைக் கொண்டு அற்புதமாய் அழகு கொண்ட இராஜகோபுரமாக வடிவமைத்திருந்தார்கள். இதில் 17 கலைஞர்கள் இரவுபகல் பாராமல் கடும் குளிராலும், உறைந்து கிடந்த பனியிலும் நின்று பணியாற்றினார்கள். இந்த இராஜகோபுரம் அமைக்கின்ற திருப்பணியில் அனைவரையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்ற பெரும் நோக்கில் அனைவரிடமும் சென்று திருப்பணி நிதி திரட்டியிருந்தார்கள்.

இதற்காக நிர்வாக சபைத் தொண்டர்கள் மட்டுமன்றி மெய்யடியார்களும் சிரமத்தைப் பாராது எம்பெருமான் ஆலயமும், இராஜகோபுரமும் சிறப்புடன் அமைய வேண்டுமென்ற எண்ணத்தை சிரமேற் கொண்டு பணியாற்றினார்கள். இராஜகோபுரப் பணிகளோடு ஆலயத்தின் உட்புறமும் மறுசீரமைத்து வர்ணங்கள் தீட்ட வேண்டி இருந்தமையாலும் 2013 ஆம் ஆண்டு தை 10 ஆம் நாள் புதன்கிழமை (23.01.2013) மிருகசீரிட நட்சத்திரமும், துவாச திதியும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எம்பெருமானின் பெருங்கருணையால் அவருக்குப் பாலஸ்தானம் செய்யப்பட்டது.

ஆலயத்தின் உட்புறச் சந்நிதானங்கள் முழுமையாக புதிதாக அமைக்கப்பட்டபோது இதன் ஒவ்வொரு சந்நிதானங்களும் அமைவதற்கான நிதியுதவியை ஒவ்வொரு இடங்களில் வாழும் மக்கள் அனைவருமாகவோ இல்லை சில குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்தோ சிறப்பாக உள்ளாலயம் அமையக் காரணமானார்கள். பாலாலயத்தில் பக்தி பொங்க குருமார்கள் நிகழ்த்திய பூசைகளின் பலனும் ஒன்று சேர, பார்த்த விழிகள் கண்மூடித்திறக்கு முன்னே நேர்த்தியாக ஆலயம் நிறைவேறிவர, நித்தமும் பெரும் அடியவர்கள் கூட்டம் உழவாரப் பணியை ஆற்றி முடிக்க, இலங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த கலாபூசனம் க. சுந்தரலிங்கம் குழுவின் வர்ணவேலைக் கலைஞர்கள் மிகச் சிறப்பான முறையில் வர்ணங்களைத் தொடுத்து, பார்த்தவர்கள் பார்த்து விழிமூட மறந்து வியத்திருக்கும் வண்ணம் அதி அற்புதமாய் வர்ணம் தீட்ட, எம்பெருமானின் இராஜகோபுரம் ஐரோப்பாவின் முதலாவது பஞ்சதல பஞ்சவர்ணத்துடன் கூடிய இராஜகோபுரம் என்ற பெருமையைப் பெற்று, இந்த அழகு நிறை ஆலயம் நெதர்லாந்திற்கு மட்டுமல்ல ஐரோப்பாவிற்கே பெருமை சேர்க்கின்றது என்று பெருமை பாராட்டி, இந்நாட்டவர் தம் பத்திரிகைகளில் வியந்து பேசவைத்து ஐரோப்பாவின் அழகுப் பொக்கிஷம் என்ற கண்ணோட்டத்துடன் காண்பவர்களிடம் பெருமை பெற்றது.

எம்பெருமான் ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகப் பெருமானிற்கு நூதன இராஜகோபுர புனராவர்த்தன ஜீர்ணோர்த்தாரண மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் செய்ய விஜய வருடம் ஆவணி மாதம் 31 ஆம் நாள் (16.09.2013) திங்கட்கிழமை துலா லக்கினமும், துவாத சித்திதியும், திருவோண நட்சத்திரமும், அமிர்த யோகமும் கூடிய காலை 10.30 மணி முதல் 11.55 மணிவரையுள்ள சுபதினத்தில் நாட்குறித்து இறைவனின் அனுக்ஜை வேண்டி பூசைகள் நடாத்தி கும்பாபிஷேகப் பணிகளை எமது ஆலயக் குருக்கள் பிரதம குருவாக பொறுப்பேற்க, இலண்டன், இந்தியா உட்பட ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வருகை தந்த அனுபவம் நிறைந்த பத்தொன்பது சிவாச்சாரியப் பெருமக்களும் கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய திரவியங்கள் சேர்ப்பது முதற் கொண்டு அனைத்து வேலைகளையும் ஆரம்பித்திருந்தார்கள். ஐந்து நாட்கிரியைகளின் அனைத்துக் கிரியைகளும் சிறப்பாகவும், பக்தியோடும் நடைபெற்று வர, கும்பாபிஷேக தினத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை இந்த நாட்டிற்கேயுரிய கடுங்குளிரும், பெருங்காற்றும், பெருமழையும் தலைவிரித்தாடத் தொடங்கியது.

காலநிலையின் கண்மூர்க்கத்தனமான நிலைகண்டு அனைவரும் கதிகலங்கிப் போனார்கள். பஞ்சகுண்ட யாக மண்டபத்தை கண் மூடாது காத்திருந்தார்கள். அதற்குள்ளும் மெய்யடியார்கள் மனம் தளரவில்லை. எங்கள் விநாயகப் பெருமான் மிகவும் சக்தி படைத்தவர். விக்கினங்களைக் கொடுத்து விளையாடுவது அவர்

திருவிளையாடல். ஏனென்றால் அவர் முதன் முதலாக இலண்டனில் இருந்து திருவுருவச் சிலையாக இங்கு எழுந்தருளிய போதும் இவ்வாறுதான் வாகன நெரிசலுக்குள் தம்மை சிக்க வைத்து காலதாமதமாக்கி திருவுருவச் சிலையை எடுத்து வந்த மெய்யடியார்கள் கலங்கி நின்றபோது, இன்னோர் இடத்தில் புறப்படவிருந்த வள்ளத்தையும் காலதாமதமாகப் புறப்பட வைத்து தன்னருள் விளையாட்டின் அற்புதத்தை நிகழ்த்தியவர். அதன் பின்னரும் அவ்வாறு பலஅற்புதங்களை நிகழ்த்தியவர்.

எனவே எம்பெருமானிற்குத் தெரியும் எல்லாவற்றையும் நிகழ்த்த என்று மெய்யடியார்கள் மெய்சிலிர்த்து அவரின் அருளைப் பேச, என்ன அதிசயமோ கும்பாபிஷேக தினமன்று கடுங்குளிர் குறைந்து, வீசிய பெருங்காற்றையும் புறமுதுகிட்டோட வைத்து, வானவீதியை நீல வண்ணத்தால் கோலம் போட்டு, அற்புதக் காட்சியாக்கி, அந்தணப் பெருமக்கள் சிவாகம முறைப்படி வேத மந்திரங்களை ஓத மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, பக்தர்கள் பரவசத்தில் உச்சிமேல் கைதூக்கி ஓங்கார நாதனைத் துதிக்க சக்தி சிவன் பாலனின் நூதன இராஜகோபுரம் வானவீதியில் தேவர்கள் சூழ்ந்திருக்க குடமுழுக்காடியது.

தேவலோகத்திலிருந்து பூவுலகிற்கு தேவாமிர்தம் சிந்துதல் போல் குடமுழுக்காடிய நீர் பூமிக்கு வந்த தோற்றம் மெய்சிலிர்க்க வைத்தது. அதனைத் தொடர்ந்து எம்பெருமான் மூலாலயத்தில் குடமுழுக்காட்டு வைபவமும் பக்தி பெருக நிறைவேறியது. கருணைக் கடலான கணபதி வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயத்தில் வீற்றிருந்து எமக்கு அருள் பாலிக்கின்றார். பூர்வ ஜென்மத்தில் நாம் செய்த புண்ணியத்தால் பாவங்களை அறுத்தெறியும் பரமன் திருக்குமாரனின் குடமுழுக்கை நாம் எம் வாழ்வில் கண்டுகொண்டோம். மங்கல வாத்தியங்கள், சங்குகள் ஒலிக்க பூதகணங்கள் புடைசூழ பக்தர்கள் வெள்ளம் திரண்டிருக்க பார்வதி மைந்தன் ஆலயத்தில் குடி புகுந்து அருளாட்சி செலுத்துகின்றார். நாமெல்லாம் அவரின் பாதார விந்தங்களை வணங்கிப் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவதற்காய் இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய பூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

நித்திய பூஜைகளாக நிதமும் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் மாலை 7 மணிக்கும் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமைகளிலும் விஷேட தினங்களிலும் கூட்டுப்பிரார்த்தனைகளும், விஷேட சமய சொற்பொழிவுகளும் சிவாச்சாரியர்களினால் நடாத்தப்பட்டு வருகின்றது. மாதந்தோறும் பூர்வபக்க அபரபக்க சதுர்த்தி தினங்களில் எம்பெருமான் விநாயகப் பெருமானுக்கு மிகசிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதோடு சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறுகின்றது. பிரதோஷ தினங்களில் சுந்தரேசப் பெருமானுக்கு மிக சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றது. நவராத்திரி தினங்களில் 10 நாட்களும், கோதாரகௌரி விரதகாலத்தில் 21 நாட்களும் கந்தசஷ்டி விரதகாலத்தில் 6 நாட்களும் பிள்ளையார் பெரும்கதை காலத்தில் 21 நாட்களும், திருவம்பாவை காலத்தில் 10 நாட்களும், சிவராத்திரி தினங்களில் நான்கு ஜாமமும் பூஜைகள் நடைபெறுகின்றன.

சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை தினங்களில் நடைபெறும் பூஜைகளின் பின்னர் முன்னோர்களின் ஆத்ம சாந்தி வழிபாட்டு கிரிகைகள் அடியயர்களுக்கு சிவச்சாரியர்களினால் நடாத்தி வைக்கப்படுகின்றது. தைபூசம், மாசிமகம், வைகாசி விசாகம், கார்த்திகை மார்கழியில் திருவாதிரை போன்ற விஷேட நட்சத்திர தினங்களிலும் பூஜைகள் நடைபெறுவதுடன் பங்குனி உத்தரம், ஆனி உத்தரம், ஆவணி சதுர்த்தி போன்ற தினங்களில் விஷேட சங்காபிஷேக வழிபாடும் நடைபெறுகின்றது. அத்துடன் இவ்வாலயத்திற்கு மகுடம் வைத்தாற்போல் இவ்வாலயத்தில் நடைபெறும் 10 நாட்கள் மகோற்சவ வழிபாடு மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது. கணபதி நாதன் இவ்வாலயத்தில் அமர்ந்திருந்து அற்புதமாய் அருளாட்சி செய்கின்றான். மறுமையிலும் அவன் அருள் பெறும் பாக்கியத்தை பெறவுள்ளோம்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம். அனைவரும் வருக அருளினைப் பெறுக
சரணம் சரணம் விநாயகா சரணம் சரணம் விநாயகா
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

மகோத்ஸவ தினங்கள் பத்தினாலும் உணர்த்தப்படுவது யாது?

முதல்நாள் - தூலநீக்கத்தையும், இரண்டாம்நாள் - ஸ்தூல சூக்குமநீக்கத்தையும், மூன்றாம்நாள் - மூவினை முக்குணம் முக்குற்றம் முப்பற்று முப்பிறப்பு நீக்கத்தையும், நான்காம்நாள் நாற்கரணம் நால்வகைத்தோற்ற நீக்கத்தையும், ஐந்தாம்நாள் ஐம்பொறி ஐந்தவத்தை ஐம்மல நீக்கத்தையும், ஆறாம்நாள் காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரிய மென்னும் ஆறுகுற்ற நீக்கத்தையும், ஏழாம்நாள் எழுவகைப்பிறப்பு நீக்கத்தையும், எட்டாம்நாள் எண்குண விளக்கத்தையும், ஒன்பதாம் நாள் நவபேத விளக்கத்தையும், பத்தாம்நாள் பரானந்தக் கடலிற் படிவதையும் உணர்த்தும்.



புனித நிக்கொலாஸ்
கிறிஸ்தவ தேவாலாயத்தின்
அறையொன்றினில்
ஆலயம் ஆரம்பித்தது
1991



Elzen Straat-36
என்ற பழைய பாடசாலைக்
கட்டிடத்தில்
அமைத்து கும்பாபிஷேகம்
செய்து வைக்கப்பட்டது
1992

# ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகரின் புதிய ஆலயம்

கும்பாபிஷேக நிகழ்வின்போது







விநாயகர் தேரேறி வீதியுலா வரும் காட்சி

## விநாயக வழிபாட்டில் விஞ்ஞான உண்மைகள்

உலகம் முழுவதும் அதிகமாகக் காணப்படும் வழிபாடுகளில் விநாயக வழிபாடு முதன்மை பெறுகிறது.

இல்லங்களில் இருந்து ஆலயங்கள் வரைக்கும் இது பரவி விரவி நிற்கிறது. குட்டிக் கும்பிடுவதும் தோப்புக்கரணம் போடுவதும் பிள்ளையார் வழிபாட்டின் ஆரம்ப செயல்களாக இருக்கின்றன. எழுதும்போது பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது இன்னொரு செயல். உடலியல் ரீதியாக குட்டிக் கும்பிடுவது எமது நினைவு ஆற்றலை வளப்படுத்துகிறது. இதனை விஞ்ஞான உலகமும் ஏற்றுக்கொள்கிறது. தோப்புக்கரணம் போடுவது super brain yoga என அமெரிக்க நிபுணத்துறை தெரிவிக்கின்றது. பிள்ளையாரின் ஆரம்ப வடிவே விஞ்ஞான தொடர்புகள் உள்ளது என்பது புலனாகிறது.

குட்டிக் கும்பிடும்போது நேராக இருபக்கமும் குட்டிவிட்டு பின்புதான் தோப்புக்கரணம் போடும்போது கையை மாற்றி பிடிக்க வேண்டும். அதாவது வலது நெற்றியை வலக்கையாலும் இடது நெற்றிப் பக்கத்தை இடது கையாலும் குட்டிவிட்டு பின்பு இடது கை கீழாகவும் வலதுகை மேலாகவும் குறுக்காக வைத்த இடதுகையால் வலதுகாதையும் வலது கையால் இடது காதையும் பிடித்து முழங்கால் மடித்து எழுந்து தோப்புகரணம் செய்ய வேணடும். கையை நேலாக பிடித்து குட்டுவதை தேவ குட்டு என்பார்கள். அதுவே சரியான முறையாகும். தோப்புக்கரணம் போடும் முறையில் எமது உடலியல் அமைப்பு வெளிப்படுத்தப்படுகிறது. எமது வலப்பக்க இணைப்புக்கள் மூளையின் இடப்பக்கத்திலும் இடப்பக்க இணைப்புக்கள் வலப்பக்கத்திலும் பிணைக்கப்பட்டிருப்பதை உடலியல் விஞ்ஞானம் விளக்குகிறது. அதனை நாம் விநாயகர் வழிபாட்டில் வெளிப்படுத்துகிறோம்.

பிள்ளையார் சுழி என்பது வட்டமும் நேல் கோடும் சேர்ந்த வடிவம். நாதம் விந்து இரண்டும் இல்லாமல் உலகில் எதுவும் இல்லை. நாதம் சிவ வடிவமாகவும் விந்து சக்தி வடிவமாகவும் போற்றப்படுகிறது. ஒலியும் ஒளியும் சேர்ந்ததுதான் அனைத்தின் செயற்பாடுகளும் நடைபெறுகிறது. வட்டம் ஒலியாகவும் நேர்கோடு ஒளியாகவும் குறிக்கலாம். நாம் உபயோகிக்கும் தொலைக்காட்சியாக இருக்கலாம் அல்லது தொலைபேசியாக இருக்கலாம் அனைத்தும் ஒலி ஒளி வடிவமேயாகும். எழுத்து வரிவடிவம் சப்தத்தின் வடிவம் அதற்கு நாம் ஒலி கொடுப்போம். அதேவேளை ஒளி இருந்தால்தான் பார்க்க முடியும். இவ்விரண்டையும் அடையாளப்படுத்தியுள்ளது பிள்ளையார் சுழி. விஞ்ஞான உண்மையை பிள்ளையார் சுழியே போட்டுக் காட்டுகிறது.

வாழும் உயிர்களுக்கு நீண்ட ஆயுள் அத்கமாக இருக்கவேண்டும் எனின் பிராணசக்தி வேண்டும். விநாயகர் உருவத்தில் யானை முகம் பல கருத்துக்களை வெளிப்படுத்துகிறது. பெரிய காது நீண்ட மூக்கு அதாவது துதிக்கை காட்டுகிறது. பெரய வயிறு எந்நாளும் உணவுக்குப் பஞசம் இல்லாமல் இருக்க வேண்டும் எனக்காட்டுகிறது. அதுமட்டுமின்றி பெரிய வாயை துதிக் கையினால் பொத்தி வைத்திருக்கும் அமைதி நிலை. ஆகவே அமைதியை நாம் ஆலயத்தில் கடைப்பிடிக்க வேண்டும்.

யானை மிகவும் புத்திக் கூர்மையானது. ஞாபக சக்தி அதிகமாக உள்ள மிருகம். அந்த ஆனை முகத்துடன் காட்சி அளிக்கும் எம்பெருமானை நாம் வணங்கும் போது நல்ல ஞாபக சக்தியும் புத்திக்கூர்மையும் நமக்கு கிடைக்கிறது. ஆதலால் நல்ல புத்தியும் சித்தியும் கிடைக்கும். இதனால் விநாயகருக்குப் புத்தியும் சித்தியுமாக இரு சக்திகளை மேலதிகமாக சொல்வார்கள்.

அவருக்கு வல்லபை என்னும் சக்தியும் சேர்த்துச் சொல்வார்கள். இவையெல்லாம் மனைவி என்று நாம் சொல்வதைவிட ஒரு மனிதனும் கிடைக்க வேண்டிய பேறுகள் என்று சொல்லலாம். யானை கல்வி செல்வம் வீரம் பொருந்திய தெய்வீக மிருகம். அதனால் யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்று கூறும் மரபு உண்டு. அதனது தந்தம் பெறுமதியானது. மிகவும் வீரம் பொருந்தியது. சிறிய ஊசியையும் எடுக்கும் பெரிய மரத்தையும் முறிக்கும். எனவே யானைமுகக் கடவுளை வழிபட்டால் கல்வி செல்வம் வீரம் என்பவற்றுடன் நல்ல சுபம் கிடைக்கும். நல்ல லாபம் உண்டாகும் என நம்புவார்கள் அத்துடன் சந்தோசம் உண்டாகும் என்பதால் பிள்ளையாரின் புதல்வியாக சந்தோஷி மாதா எனச் சிலர் சொல்வதுண்டு.

விநாயகர் கையில் மோதகம் பாசம் அங்குசம் போன்ற அம்சங்கள் உண்டு. மோதகம் என்றாலே மகிழ்ச்சிதான். எமக்கு மகிழ்ச்சி இனிப்பு போன்றது. ஆலயத்திற்குப் போனால் மகிழ்ச்சி கிடைக்கும். இதனால் அவருடைய முதல் நாமம் சுமுகாய நமஹ. சுமுகம் என்றால் மகிழ்ச்சியான முகம் என்பதாகும். அப்படி இருந்தால் எல்லாக் காரியமும் சுமுகமாக முடியும்.

பாசம் என்பது எம்மைக் கட்டுப்படுத்தும் கயிறு. அருள் கட்டாக எம்மை அவர் பாதுகாப்பார். யானை மதம் கொள்ளும் போது யானைப் பாகன் அங்குசம் என்னும் கருவியால் அதனைக் கட்டுப்

படுத்துவார். தன்னைத் தானே கட்டுப் படுத்த வேண்டும் என்னும் கோட்பாட்டை உணர்த்தும் படியாக விநாயகர் ஆகிய யானை முகக் கடவுள் தானே தன்கையில் அங்குசத்தை வைத்திருக்கிறார்.

மற்றும் ஒரு விசேடமாக விநாயப் பெருமானை மூலாதாரத்திற்கு உரிய கடவுளாக போற்றுவார்கள். எமது உடம்பு சக்கரங்கள் ஆறில் எல்லாவற்றுக்கும் மூல ஆதாரமாக இருப்பதால் மூலஆதாரம் எனச் சொல்லுவார்கள். இம் மூலாதாரம் பழுதடைந்தால் எம்மால் நடக்க முடியாது. இருக்க முடியாது. எனவே நாம் ஒழுங்காக நடக்க வேண்டும். அவர் மூலாதார மூர்த்தியல்லவா.

இன்னுமொரு விசேட தன்மையை விநாயகர திருவுருவம் தருகிறது. அவரது முகம் யானை இது குறிக்கும். வேகமும் விவேகமும் இருந்தால் நாம் பெருமை அடையலாம். எதிலும் வெற்றி அடையலாம். மேலும் இந்தப் பெரய யானை எவ்வாறு சிறிய எலியில் ஏறியிருக்கும் எனச் வினாவுவார்கள். மிருகக் காட்சி சாலையில் யானை ஒரு சிறிய மேசையில் தனது உடம்பை தாங்கி நிற்கும் காட்சியை நேரடியாக காண்கிறோம். அதேபோல் விநாயகப் பெருமான் பாதத்தை நாம் அடைந்தால் எமக்குப் பாரமாக அவர் இல்லாமல் எமது பாரத்தை அவர் இறக்கி வைப்பார்.

அடுத்து அவர் அணிந்திருக்கும் பாம்பு குண்டலினி சக்தியைக் குறிக்கும். இதனையே அவ்வையாரும் மூலாதாரத்து மூண்டெழு கனலை காலால் எழுப்பும் கருத்தறிவித்து என பாடினார். எமக்குள் பாம்பு போல் சுருண்டுபோய் இருக்கும் யோக சக்தியை நாமே பிராணாயமம் செய்து எழுப்பலாம். எனவே யோகாசனத்தின் மூலக் கடவுளாகவும் விநாயகர் அமைகிறார். பிராணாயமம் யோகாசனம் இன்றைய விஞ்ஞான உலகின் அறிவியல் சிந்தனைச் செய்திகள்.

அவர் தனது தந்தத்தை இருமுறை உடைத்ததாக வரலாறு உண்டு. அது வேறு வேறு கல்பங்களில் நடைபெற்றவை எவ்வாறு இருந்தாலும் ஒன்று மகா பாரதத்தை எழுதவும் மறுமுறை கஜமுகாசுரனை சம்ஹாரம் செய்யவும் பயன்படுத்தப்பட்டது. ஒன்று அறிவு விருத்திக்காகவும் மற்றது தீமையை அளிக்கவும் உபயோகப்பட்டது. அதுவே ஒருமுறை அறிவுக்காகவும் மறுமுறை தீமைக்காகவும் தந்தம் செயலாற்றியது. நாம் நல்லறிவு பெற வேண்டுமாயின் எமது மனத்தில் தீயனவற்றை அழிக்க வேண்டும் என்பதைக் காட்டும் அறிய தத்துவம். அத்துடன் தந்தம் யானைக்கு அழகு அப்படியிருந்தும் அதனை ஒடிப்பது தியாகத்தின் அடையாளம். நாமும் சில தியாகங்களை மற்றவர்களுக்காகச் செய்ய வேண்டும் என்பதை விநாயகர் அறிவுறுத்துகிறார்.

நிறைவாக அவருக்கு நாம் பூஜையில் பயன்படுத்தும் அறுகு சிறந்த மருத்துவ மூலிகை. உடலில் உள்ள வெப்பம் குளிர் என்பவற்றை சமப் படுத்தும் இயல்பு அறுகுக்கு உண்டு. இன்றும் ருது சோபனம் அல்லது கலயாண நாட்களில் பால் அறுகு வைக்கும் பணி நடைபெற்று வருகிறது. எமது உடல் நல்ல நிலையில் ஆரோக்கியமாக இருக்க விநாயகருக்கு அறுகினால் அர்ச்சிக்கிறோம்.

இதனால் ஆசீர்வாதம் பண்ணும் நிகழ்வை அறுகரிசி தூவுதல் என்பார்கள். நீண்ட ஆயுள் நல்லாரோக்கியம் என்பவற்றை வேண்டி வாழ்த்துவார்கள். அறுகு போல் தழைத்து என்பார்களா. காய்ந்து போனாலும் மீண்டும் நாம் இன்பமாகி வளர்வோம் என விநாயகர் நமக்கு அருள்வார்.

**அபிராமியம்மைப் பதிகம்**

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாது அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாதி
அருள்வாயி அபிராமியே.

# நலமும் வளமும் தரும் விநாயகர் சதுர்த்தி

"ஓம்" எனும் பிரணவ மந்திரம் எல்லாவற்றுக்கும் மூலமாக அமைந்துள்ளது. "ஓம்" எனும் வடிவமாகவும், பிரணவப் பொருளாகவும் விநாயகர் விளங்குகிறார்.

"விநாயகர்" என்றால் "தனக்கு மேலே வேறொரு தலைவன் இல்லாதவன்" என்று பொருள். விநாயகர் முழுமுதற் கடவுள் ஆவார். குணங்களின் தலைவரான கணபதியை உள்ளன்போடு வணங்குபவர்களுக்கு, வருகின்ற விக்கினங்கள், வில்லங்கங்கள், இடர்கள் இடையூறுகள் அனைத்தும் விலகி ஓடும். எனவே தான் அன்று தொட்டு இன்றுவரை அனைவரும் விநாயகர் பூஜையை முதலில் கொண்டாடி வருகிறோம்.

"சதுர்த்தி" என்பது ஒரு 'திதி". ஒவ்வொரு மாதமும் வளர்பிறையிலும், தேய்பிறையிலும் வருகிற நான்காவது நாள் சதுர்த்தி ஆகும். சதுர்த்தியன்று விநாயகப்பெருமானை நோக்கி விரதம் அனுசரிப்பது இந்துக்களிடையே வழக்கமாக உள்ளது.

ஆவணி மாதத்தில் வளர்பிறையில் நான்காம் நாளன்று விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. இது விநாயகப் பெருமான் பிறந்த தினமாகும். விநாயகர் அவதாரம் மகிமை வாய்ந்தது. கயமுகன் என்ற அரக்கன் சிவபெருமானிடம் வரங்கள் பல பெற்று இருந்தான். அந்த வரத்தின் மகிமையால் தேவர்களையும், மனிதர்களையும் கொடுமைப்படுத்தி வந்தான்.

தேவர்களை பூண்டோடு அழித்தொழிக்க எண்ணினான். அவன் கொடுமை தாங்காத தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். கயமுகனை சம்ஹாரம் செய்து தேவர்களைக் காப்பாற்றுவதற்காக விநாயகப்பெருமான் சதுர்த்தியன்று அவதரித்தார். விநாயகர் கயமுகனுடன் போர்புரிந்த போது ஆயுதங்களால் அழியாத வரம் பெற்ற கயமுகன் பெருச்சாளி உருவம் கொண்டு விநாயகரை தாக்கினான். விநாயகர் அவனை தன் வாகனமாக்கி அருள்புரிந்தார்.

இனி....விநாயகர் அவதாரம் குறித்து புராணத்தில் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

ஒரு முறை கயிலாயத்தில் பார்வதி தேவி நீராடிக்கொண்டு இருந்தார். அப்போது தனக்கென்று ஒரு காவல் தெய்வம் வேண்டும் என்று விரும்பினார். அப்போது குளியலுக்கு பயன்படுத்தும் மஞ்சளை குழைத்து அதில் அழகிய உருவம் செய்து, உயிர் கொடுத்து விநாயகப்பெருமானை தோற்றுவித்தார்.

விநாயகரை வீட்டுவாசலில் இருக்க வைத்து "நான் குளித்து கொண்டு இருக்கும் போது, எவரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது"என்று கூறிச் சென்றார். அந்தநேரம் பார்த்து வீட்டுக்கு திரும்பி வந்த சிவபெருமானை, விநாயகர் வாசலில் தடுத்து நிறுத்தி விட்டார். கோபம்கொண்ட சிவபெருமான், விநாயகரை "யாரோ"என்று நினைத்து அவரது தலையை துண்டித்து விட்டார். இதை பார்த்த பார்வதி மிகவும் வருத்தப்பட்டார். அவரை சமாதானப்படுத்தும் முயற்சியில் வடக்கு நோக்கி தலைவைத்து தூங்கிக்கொண்டிருக்கும் உயிரினத்தின் தலையை வெட்டி கொண்டு வரும்படி தன் சேவகர்களுக்கு உத்தரவிட்டார். அவ்வாறே சேவர்களும் வடக்கு நோக்கி தலைவைத்து தூங்கிக்கொண்டிருந்த ஒரு யானையின் தலையை வெட்டி சிவனிடம் கொடுத்தனர்.

சிவபெருமான் விநாயகரது உடலுடன் யானைத் தலையை பொருத்தினார். பூத கணங்களுக்கு அவரை தலைவனாக்கி மகிழ்ந்தார். அனைத்து மங்கள நிகழ்ச்சிகளுக்கும் தொடக்கத்தில் தமது மகனை வழிபட வேண்டும் என்று அவர் ஏற்பாடு செய்தார். விநாயகர் பல திருவிளையாடல்களை செய்துள்ளார். காக்கை வடிவம் கொண்டு அகத்தியரின் கமண்டலத்தில் இருந்து காவிரி நதியை கவிழ்த்து பெருகி ஓடச் செய்தார். விபீஷணன் இலங்கைக்கு எடுத்துச் சென்ற ரெங்கநாதர் சிலையை தடுக்கும் விதத்தில் பாலகன் வடிவில் வந்து லீலைகள் புரிந்து சிலையை ஸ்ரீரங்கத்தில் பிரதிஷ்டை செய்தார். முருகன் வள்ளியை மணம் புரிவதற்கு யானை வடிவில் சென்று உதவி செய்தார். அனலாசரன், சிந்துாரன் ஆகிய அசுரர்களை விநாயகர் விஸ்வரூபம் எடுத்து அழித்தார். வியாசர் சொல்ல, சொல்ல மகாபாரதத்தை எழுதினார்.

"கோலக் கோபுரக் கோகரணஞ் சூழா
கால்களாற் பயனென்"

எனவும் அப்பர் சுவாமிகள் கோபுரச் சிறப்பைப் பற்றிக் கூறுகிறார். "கோகுலக் கோபுரம்" என அப்பர் சுவாமிகள் குறிப்பிடுவதிலிருந்து கலை அம்சம் பொருந்திய சிறப்பினை நாம் கோபுர தர்சனத்தில் காணலாம்.

கோபுரங்கள் என்ற வகையில் மாடங்களும் இருக்கும். இதனால் கோபுரங்களை நெடுமாடம் எனவும் அழைக்கலாம்.

வானளாவிய உயர்ந்த மாடம் உடைய திருமருகல் தலத்தைப் பற்றிச் சம்பந்த சுவாமிகள் தமது திருமுறை ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

"மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய
மைந்த சொல்லாய்"

என வரும் பாடலில் சந்திரனைத் தொடக்கூடிய அளவிற்கு உயரமுடைய மாடம் என்பது அவரது வர்ணனையாகும்.

கோவில்களில் நான்கு திக்குகளுக்கும் நான்கு கோபுரங்களும், நடுவில் ஒரு கோபுரமாகப் பஞ்ச கோபுரங்கள் கட்டலாம் எனச் சிற்ப நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இவற்றை விட கோவிலைச் சுற்றியுள்ள பிரகாரங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே கோபுரங்கள் கட்டவும் மானசாரம் என்ற நூல் அறிவுறுத்துகிறது.

பொதுவாக ஒரு சில கோவில்களைத் தவிர இலங்கையில் உள்ள கோவில்கள் யாவும் இரண்டு வீதிகள் மட்டுமே உள்ளன. இந்தியாவில் மூன்று முதல் ஏழு வரையான வீதிகள் உள்ளன. ஒரு கோவிலுக்குப் பல கோபுரங்கள் உள்ள கோவில்களும் உள்ளன. தென்னிந்தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சிதம்பரம் போன்ற திருத்தலங்கள் பல கோபுரங்களுடன் காட்சி அளிக்கின்றன.

ஒவ்வொரு வீதியின் வாசலிலும் கோபுரங்கள் அமைப்பது பற்றியும், சிற்ப நூல்கள் கூறுகின்றன. முதலாவது கோபுரம் துவார சோபை எனவும், இரண்டாவது கோபுரம் துவாரசாலை எனவும், மூன்றாவது கோபுரம் துவாரப் பிரசாதம் எனவும், நான்காவது கோபுரம் துவார ஹர்மியம் எனவும், ஐந்தாவது கோபுரம் மஹாமர்யதை எனவும் பெயர்பெறும்.

இவ்வகை அமைந்த கோபுரமே மகா கோபுரம் எனவும், ராஜ கோபுரம் எனவும் சிறப்புப் பெயர் பெறுகிறது. பொதுவாக மகா கோபுரம் எனப்படும் ராஜ கோபுரமே கோவில்களில் காணப்படும்.

கோபுரங்களின் தோற்றம், அமைப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல பெயர்களால் அவை அழைக்கப்படுகின்றன. வல்லீ, கவாக்ஷம், ஸ்வஸ்திகம், நாகபந்தம், சர்வதோபேதம், நந்தியாவர்த்தம், புஸ்பதந்தம் முதலியன சிலவாகும். கோபுரம் என்பதற்கு இறைவனை நோக்கி ஆன்மாக்கள் செல்லும் வழி எனப் பொருள் கூறுவார். கருவறையின் மேல் உள்ள விமானம் சிரசாகவும், கோபுரம் இறைவனின் திருப்பாதமாகவும் கூறப்படும். திருமூலர் திருமந்திரத்தில் பின்வரும் பாடல் ஒன்றின் மூலம் இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்துகிறார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தாரக்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

இறைவனுடைய ஆலயத்திற்கு செல்வதற்கு திருக்கோபுரம் எமக்கு வாசலாக இருப்பது போல் எமது தூய்மையான மனத்திற்குள் இறைவன் வருகை தருவதற்கு, எமது வாய் கோபுர வாசலாக இருக்கும். அதாவது இறைவனது நாமங்களை நாம் மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும் என்ற மறைமுகக் கருத்தும் உள்ளது.

கோவிலின் கருவறையில் இருப்பது சூட்சுமலிங்கம் எனவும், ஆலயத்தின் நடுவிலிருப்பது பத்திரலிங்கம் அதாவது பலிபீடம் எனவும், ஆலயத்தின் முகப்பு வாசல் இருப்பது ஸ்தூலலிங்கம் எனப்படும் ராஜகோபுரம் எனவும் அழைக்கப்படும்.

லிங்கம் என்றால் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமான இடம் எனக் குறிப்பிடப்படும். எமது புலன் ஒடுக்கத்திற்கும் இறையுணர்வின் தோற்றத்திற்கும் காரணமாக ஸ்தூலலிங்கம் முதல் அனைத்து லிங்கங்களும் இடமளிப்பதாக யாம் கருதலாம்.

இவ்வாறு லிங்கங்களுடன் தொடர்புபடுத்தி மேற்படி இடங்களை குறிப்பிடுவது போல் ஆத்மாவோடு தொடர்புபடுத்தி மேற்படி இடங்களை குறிப்பிடுவர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கோபுரம் | - | பூதாத்மா | பலிபீடம் | - | அந்தராத்மா |
| துவஜஸ்தம்பம் | - | தத்தவாத்மா | லிங்கம் | - | ஜீவாத்மா |
| குரு | - | மந்திராத்மா | விமானம் | - | பரமாத்மா |

இவ்வாறு சர்வஞானோத்தர ஆகமம் குறிப்பிடுகிறது.

எனவே இறைவனும் ஆத்மாவும் இணையும் இடமாக ஆலயமும், அங்குள்ள புனித அடையாளங்களும் விளங்குகின்றன என்பதை நாம் உணரலாம்.

ராஜகோபுரம் என்பது மிகப்பெரிய கோபுரம் என்பது கருத்தாகும். உமாபதி சிவாச்சாரியார் கொடிக்கவி என்னும் பாடலில் கோபுர வாசற் சிறப்பினைப் பற்றிக் கூறுகின்றார்.

"பொருளாம் பொருளேது போதேது கண்ணே(து)
இருளாம் வெளியே திரவே(து) — அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி"

இறைவா நீதான் அனைத்தையும் ஆளும் நாதன். நீ பாதுகாக்காத உலகம் எங்குள்ளது. உன் அருள் இல்லாமல் யாம் எதையும் அறிய முடியாது. நீயே எல்லாமாக இருந்து எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருப்பதால் நீ காண உன் கோபுர வாசலில் கொடி கட்டினேன். எனக் கூறுவதைக் காணலாம். எனவே, கோபுரமானது இறைவனே அனைத்தையும் ஆளுகின்ற தன்மை உடையவன் என்பதைக் குறிப்பாக உணரலாம். இதனால் ராஜ கோபுரம் எனக் கூறுவது பொருந்தும்.

கோபுரங்களில் காணப்படும் சிற்பங்கள் புராணங்கள் கூறும் தெய்வீக வரலாற்றையும், ஆலய வரலாற்றையும் உள்ளடக்கியதாக இருப்பதை நாம் கவனிக்கலாம்.

"வரம்பிலின்பமுடையான் தாள் வாழ்த்தி வணங்குவோம்"

## கொடியேற்றத்தின் தத்துவம் யாது?

(அ) சமம், விசாரம், சந்தோசம், சாதுசங்கமாகிய நான்கு குணங்களையும் கால்களாக உடையது நந்தி. அது வெள்ளை நிறம் பொருந்திய பரிசுத்த தர்ம தேவதை. அதனை ஒப்ப ஆன்மாக்கள் தூய்மை உடையவர்களாகி, அந்நான்கு குணங்களையும் உடையவர்களானால், அவர்களை இறைவன் அவர்களிருக்கும் நிலையிலிருந்து மிக உயர்த்திவிடுவான் என்பதை இது குறிக்கிறது.

(ஆ) திருவிழாவின் முதல்நாளில் இக்கொடி ஏற்றுதலின் நோக்கமாவது, திருவிழாவிற்கு வரும் அடியார்களை உயர்பதம் அடையச் செய்வதற்காக இறைவன் இவ்விழா நாட்களில் சிறப்பாக எழுந்தருளி அருள் செய்யப் போகின்றான் என்பதாம்.

## பெருமை மிகுந்த பிரதோஷ விரதம்.

சிவபெருமானுக்குரிய விரதங்களுள் மிகவும் விசேஷமானது பிரதோஷ விரதமாகும். தோஷம் என்றால் குற்றம் என்றும், பிரதோஷம் என்றால் குற்றமற்றது என்றும் பொருள் தரும். மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையிலான காலம் பிரதோஷ காலமாகும். இதை சந்தியாகாலம் என்றும் அழைப்பார்கள். ஒவ்வொரு மாதமும் வளர்பிறை தேய்பிறை என்னும் இரண்டு காலங்களிலும், திரியோதசி திதியில் வருவது பிரதோஷ தினமாகும். இந்த வேளையில் சிவபெருமானை வழிபாடு செய்வதே இந்த விரதத்தின் நோக்கம். பிரதோஷ வேளையில் இறைவனை வழிபடுவதால் நமது முற்பிறவி குற்றங்கள், சகல தோஷங்கள் நீங்கி நலம் கிடைக்கும். பாவம் விலகி புண்ணியம் சேரும். வறுமை அகலும். பயம், மரண வேதனை நீங்கும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் மகப்பேறு பெறுவர். பிறவி ஒழித்து முக்தி பேற்றினை அடைவர். கல்வியில் மேன்மை பெறுவர்.

"நந்தியம் பெருமான் தன்னை நாடொறும் வணங்குவோருக்கு
புந்தியில் ஞானம் சேரும், பொலிவுறு செல்வம் கூடும்
குலமுறை தழைத்தே ஓங்கும், குணம் நிறை மக்கள் சேர்வர்
சிந்தையில் அமைதி தோன்றும், சிறப்புறும் வாழ்வுதானே."

என்ற பாடல் பிரதோஷ மகிமையை வலியுறுத்தும்.

பிரதோஷ வேளையில் அனைத்து தேவர்கள், முனிவர்கள், சிவாலயத்தில் ஒன்று சேர்வதால் பிரதோஷ வழிபாடு அனைத்துக் கடவுள்களையும் ஒன்றாக வழிபட்ட புண்ணிய பலனை வழங்கும்.

### பிரதோஷ வரலாறு

முன்னொரு காலத்தில் மரணமில்லாத வாழ்வைத்தரும் தேவாமிர்தத்தினைப் பெறுதல் வேண்டி தேவர்களும், அசுரர்களும், ஒருங்கிணைந்து திருப்பாற்கடலை கடைந்தார்கள். வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும், மந்தரமலையை மத்தாகவும் பயன்படுத்தினர். அப்போது வாசுகி பாம்பு விஷத்தை உமிழ்ந்தது. அனைவரும் அஞ்சி நடுங்கும் அளவில் பாற்கடலில் ஆலகால விஷம் பரவியது. அது அனைவரையும் எரித்து துன்புறுத்தியது. இதனால் அஞ்சி ஓடிய தேவர்கள் "தேவதேவா! மகாதேவா! அருட்கடலே சரணம். கருணைக்குன்றே காத்தருள வேண்டும்" என்று ஓலமிட்ட வண்ணம் இடமாகவும், வலமாகவும், சிவன் சந்நிதியில் ஓடி சிவனைத் தஞ்சமடைந்தனர்.

தேவர்களின் துயர் போக்க எண்ணிய சிவபெருமான், சுந்தரரை அனுப்பி அக்கொடிய விஷத்தை கொண்டுவரப் பணித்தார். அவர் கொடிய விஷத்தை நாவல்பழம் போலத் திரட்டி, உருட்டி கொண்டு வந்து சிவபெருமானிடம் கொடுத்தார். அந்த நஞ்சினை அவர் அமுதம் போல் உண்டார். அந்த விஷம் சிவனின் உடலுக்குள் சென்றதால், உலக உயிர்கள் அழிந்து விடும். அதனால் உண்ணாமலும், உமிழாமலும் கண்டத்தில் நிறுத்திக் கொண்டார். இதனால் திருநீலகண்டர் என்ற பெயர் பெற்றார்.

தேவர்கள் சிவனின் அனுமதியுடன் மீண்டும் பாற்கடலை கடைந்த போது அமிர்தம் தோன்றியது. அதை உண்டு ஆனந்தம் அடைந்தனர். அமிர்தம் உண்ட தேவர்கள் வேண்டுதலுக்கு இணங்க, சிவபெருமான் திருநடனம் புரிய முன்வந்தார்.

சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் வாசித்தான். பிரம்மன் தாளம் போட்டார். லட்சுமி தெய்வீக பாடல்கள் பாட, திருமால் மத்தளம் வாசித்தார். தேவர்கள், முனிவர்கள், யட்சர்கள், கின்னரர்கள், திசைபாலகர்கள் முதலிய அனைவரும் வந்து பிரதோஷ காலத்தில் இறைவனை வழிபட்டனர். சிவபெருமான் உமாதேவியார் காண நந்திதேவரின் இருகொம்புகளுக்கு இடையே திருநடனம் புரிந்தார். சிவபெருமான் தேவர்களுக்கு திருநடனத் தரிசனம் கொடுத்தது சனிக்கிழமை மாலை நேரத்தில் (பிரதோஷ வேளையில்) ஆகும். எனவே சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம் விசேஷமானதாக கருதப்படுகிறது.

### விரதமுறை

பிரதோஷ விரதம் இருக்க விரும்புகிறவர்கள் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் ஒன்றில் வரும், சனிக்கிழமை பிரதோஷ நாளாக பார்த்து இந்த விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். பிரதோஷ தினத்தன்று அதிகாலையில் நீராடி காலைக்கடன்களை முடிக்க வேண்டும். சிவன் கோவிலில் சுவாமிக்கு முன் உள்ள நந்திக்கு அருகம்புல் மாலை சாத்தி, சிவப்பு அரிசி நைவேத்தியம் செய்ய வேண்டும். நெய்விளக்கு வைத்து வழிபடுவது நல்லது. முதலில் சிவபெருமானையும், ரிஷப (நந்தி)

தேவரையும் வணங்க வேண்டும். பின்னர் இடமாக (பிரதட்சணமாக) சென்று சண்டிகேசுவரரை வணங்கி விட்டு சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் சிவன் நந்தியை தரிசிக்க வேண்டும். வழக்கம் போல் ஆலயத்தை வலமாக சுற்றிவரும் போது, நந்திதேவரிடம் வந்து நின்றபடி அவருடைய கொம்புகளுக்கு நடுவே சிவலிங்கத்துக்கு தீபாராதனை காட்டுவதை கண்டு வழிபட வேண்டும். இதுமாதிரி மூன்று முறை பிரதட்சணம் செய்ய வேண்டும்.

பின்னர் ரிஷப வாகனத்தில் சிவன், பார்வதி வலம் வரும்போது, உடன் சென்று பிரதட்சணம் செய்ய வேண்டும். அன்று முழுவதும் உணவின்றி உபவாசம் இருக்க வேண்டும். விபூதியை நெற்றியில் அணிந்து கொண்டு, சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யப் பயன்படுத்தப்பட்ட புனிதநீரை அருந்த வேண்டும். வீட்டுக்குச் சென்று யாராவது ஏழைக்கு அன்னதானம் வழங்குவதும் நன்மை அளிக்கும்.

மகா பிரதோஷ விரதம்

சிவபெருமான் விஷம் உண்ட தினம் கார்த்திகை மாதம் திரியோதசி திதி ஆகும். எனவே சனிக்கிழமையும் திரியோதசி திதியும் சேர்ந்து வருகின்ற பிரதோஷம் மகாபிரதோஷம் ஆகும். மாசி மாதம் வரும் மகாசிவராத்திரிக்கு முன்னர் வரும் பிரதோஷமும், மகாபிரதோஷம் எனப்படும். அன்று சிவதலங்களில் வழிபாடு செய்வது சிறப்பானதுசனிப்பிரதோஷ வழிபாடு செய்தால் ஐந்துவருடம் தினமும் ஆலயம் சென்ற பலன் கிட்டும். மேலும் பஞ்சமகா பாதகங்களினால் ஏற்படும் பாவங்களைத் துடைத்து நன்னெறி அடைய சனி மகாபிரதோஷ விரதம் துணைபுரியும்.

## உருத்திராக்ஷம்

விபூதி தரித்துக்கொண்டாலே போதுமே, உருத்திராக்ஷமுந் தரித்துக்கொள்ள வேண்டிய தென்ன? விபூதி உருத்திராக்ஷமும் சிவ சின்னமாகையால் அவ்விரண்டுமே தரிக்கவேண்டும். இதுவுமின்றி விபூதியானது சிலவேளை வியர்வை மழை முதலியவற்றால் மறைந்துபோனாலும் உருத்திராக்ஷமிருந்தால் தோஷமில்லை. ராக்ஷதரால் பீடிக்கப்படுகிற பாபம் அணுகாது.

உருத்திராக்ஷம் எவ்விடத்தில் எவ்வாறு உண்டாயது? தேவர்கள் திரிபுரத்து அசுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பம் செய்துகொண்ட பொழுது, திருக்கயிலை உடையாரின் மூன்று திருக்கண்களினின்றும் பொழிந்த நீரில் தோன்றிய மணியாம். இந்தக் காரணத்தினால் அதற்கு உருத்திராக்ஷம் என்கிற பெயருண்டாயது. (உருத்திரன் - சிவன், அக்ஷம் - நேத்திரம். ) அதற்குச் சிவ கண்மணியென்றும் பெயர். சிவபூசை செய்கிறவர்கள் கழுத்தில் உருத்திராக்ஷ மில்லாமல் பூசித்தால் அந்தப் பூசையைப் பரமசிவன் அங்கீகரித்துக் கொள்ளமாட்டார். ஆதலால் சிவபூசை செய்கிறவர்கள் உருத்திராக்ஷ கண்டிகை அவசியம் தரித்துக்கொள்ள வேண்டும்.

உருத்திராக்கம் அணிவதற்கு தகுதியானவர் யார்?

மதுபானமும், மாமிச உண்டியும் இல்லாதவராய், ஆசாரம் உடையவராய் உள்ளவர்.

உருத்திராக்கம் தரித்துக்கொண்டு மதுபானம், மாமிச உண்டி முதலியவை செய்தவர் யாது பெறுவர்?

நரகத்தில் வீழ்ந்து, துன்பத்தை அனுபவிப்பர்.

குளிக்கும் காலத்தில் உருத்திராக்ஷசத்தை அணியக் கூடாதா?

அணியலாம், குளிக்கும் பொழுது உருத்திராட்ச மணியில் பட்டு வடியும் நீர் கங்கை நீருக்குச் சமமாகும்.

# இந்து சமயமும் விஞ்ஞானமும்

கோயிலும் உடலும் ஒன்று. இரண்டுமே ஆத்ம சக்தியின் உறைவிடம். கோயில் என்றால் என்ன? ஆலய அமைப்பு நமது அகத்தை பிரதிபலிக்க வைக்கும் கண்ணாடியைப் போன்றது. நமக்குள்ளே பார்க்கும் திறன் நமக்கில்லாதபடியால், ஆலய அமைப்பின் மூலமாக நமது உள்ளமைப்புக்களை நாம் அறியும் வகையில் சான்றோர்கள் ஆலயங்களை அமைத்துள்ளார்கள்.

பிரசாத வடிவில் மருந்துகளையும், பிரார்த்தனை வடிவில் உடற்பயிற்சிகளையும் வகுத்துத் தந்துள்ளார்கள். உடற்பயிற்சியினால் உடலை மட்டுமன்றி உள்ளத்தையும், அதனூடாக ஆன்மாவையும் ஆரோக்கியம் பெறச் செய்யலாம். நமது உடலையும் மனத்தையும் சுத்தம் செய்யும் மருத்துவமனை போல ஆலயம் அமைகின்றது.

வரையறுக்கப்பட்ட முறைகளைப் பின்பற்றி ஆலயத்தில் இறைவழிபாடு செய்தால் நாம் ஆரோக்கியமாக வாழலாம். ஆலயம் என்பது மிகவும் சக்திவாய்ந்த மருத்துவமனை. ஆலயம் உடல்நிலையையும் மனநிலையையும் சமப்படுத்தி அழுக்குகளை வெளியேற்றி சக்தி கொடுக்கும் இடமாக, தலமாக இருக்கின்றது.

நாம் வீட்டில் இருந்தபடியே இறைவனை வழிபாடு செய்வதனால் பலன் பெருமளவில் கிடைக்கும் எனக் கூற முடியாது. ஏனெனில் நாம் ஒருவர் என்பதனால் நமக்குள் இருக்கும் சக்தி சிறியதே. ஆனால் ஆலயத்தில் கூட்டாக மக்கள் பக்தர்களாக சேரும் போது, ஆலயத்தில் உள்ள பல சக்திக் கலன்களின் மூலமாக சக்தியை உள்வாங்கி அதை வெளியிடும் பொழுது, அந்த சக்தி அலை நம்மை சமன் செய்கிறது. எனவே தான் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனச் சொல்லப்படுகிறது.

ஆலயத்தின் கோபுரம் மிகவும் முக்கியமான ஒரு அம்சமாகும். கோபுரத்தில் ஏழு நிலைகள் உள்ளன. இந்த ஏழு நிலைகளும், நம் உடலில் உள்ள ஏழு சக்திச் சக்கரங்களை குறிக்கும். கோபுரத்தின் உச்சியில் தங்கத்தினால் அல்லது வெள்ளியினால் அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக் கலசங்களிலும் அதன் அடியிலும் வைக்கப்படும் தானியங்களும் உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை கலசங்களுக்குக் கொடுக்கின்றன.

இத் தானியங்களும் உலோகங்களும் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மாற்றுவது வழக்கம். ஏனெனில் இவை பன்னிரண்டு வருடங்களில் தமது சக்தியை இழந்து விடுகின்றன. அதனால்தான் 12 வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்து இவை புதுப்பிக்கப்படுகின்றன. எனவேதான் இக்கலசங்கள் மின்னலை தாங்கும் சக்தியுடையவை.

ஆதிகாலத்தில் வீடுகளில் மின்னலை எதிர்க்கும் சாதனங்கள் இல்லாத காரணத்தால் மழை காலங்களில் இடி மின்னலில் இருந்து தங்களை பாதுகாக்க மக்கள் கோயில்களில் தங்குவது வழக்கம். இதன் காரணமாகத்தான் போலும் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என நம் முன்னோர்கள் கூறினார்கள்.

கோயிலின் பிரதான வாசலாகிய கோபுர வாசலானது, ஊடுருவிக்கதிர் ஆய்வுக் கருவி போல் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதனால் நாம் கோபுர வாயிலினூடாக செல்லும் போது கண்ணுக்குப் புலப்படாத ஊடுருவிக் கதிரானது காந்த அலைகளாக நம் உடல் மீது செல்கின்றது. இதனால் தான் நாம் கோயிலுக்குள் நுழையும் முன்பாக கை கால்களைச் சுத்தம் செய்வது வழக்கம் போலும்! குதிக்கால்களை மேலிருந்து கழுவுவதால் ஏற்படும் விஞ்ஞான பூர்வமான காரணம் என்னவென்றால், குதிக்காலில் தான் எமது மூளையில் அமைந்துள்ள "பியூட்டரி" சுரப்பியுடன் தொடர்புள்ள முக்கிய நரம்பு அமைந்துள்ளது.

நாம் உட்பிரகாரத்தில் செல்லும் பொழுது வேகத்தைக் குறைத்து நிதானமாக நடுவில் வைக்கப்பட்டிருக்கும் வாயில் படிகளை ஈரக்கால்களுடன் குனிந்து தொட்டுச் செல்லுதல் வேண்டும். அப்படிக் குனிந்து தொடும் பொழுது ஏற்கெனவே கோபுரக் கலசங்களின் ஊடாகச் சேர்க்கப்பட்ட மின்கதிர்களின் முழுப்பயனையும் அடைய முடியும். நாம் அண்டசராசரத்துடன் இணைய வேண்டும் என்பதற்காகவே விஞ்ஞான பூர்வமாகவும் இந்து சமய வழிபாடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

# நலமும் வளமும் தரும் விநாயகர் சதுர்த்தி

"ஓம்" எனும் பிரணவ மந்திரம் எல்லாவற்றுக்கும் மூலமாக அமைந்துள்ளது. "ஓம்" எனும் வடிவமாகவும், பிரணவப் பொருளாகவும் விநாயகர் விளங்குகிறார்.

"விநாயகர்" என்றால் "தனக்கு மேலே வேறொரு தலைவன் இல்லாதவன்" என்று பொருள். விநாயகர் முழுமுதற் கடவுள் ஆவார். குணங்களின் தலைவரான கணபதியை உள்ளன்போடு வணங்குபவர்களுக்கு, வருகின்ற விக்கினங்கள், வில்லங்கங்கள், இடர்கள் இடையூறுகள் அனைத்தும் விலகி ஓடும். எனவே தான் அன்று தொட்டு இன்றுவரை அனைவரும் விநாயகர் பூஜையை முதலில் கொண்டாடி வருகிறோம்.

"சதுர்த்தி" என்பது ஒரு 'திதி'. ஒவ்வொரு மாதமும் வளர்பிறையிலும், தேய்பிறையிலும் வருகிற நான்காவது நாள் சதுர்த்தி ஆகும். சதுர்த்தியன்று விநாயகப்பெருமானை நோக்கி விரதம் அனுசரிப்பது இந்துக்களிடையே வழக்கமாக உள்ளது.

ஆவணி மாதத்தில் வளர்பிறையில் நான்காம் நாளன்று விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. இது விநாயகப் பெருமான் பிறந்த தினமாகும். விநாயகர் அவதாரம் மகிமை வாய்ந்தது. கயமுகன் என்ற அரக்கன் சிவபெருமானிடம் வரங்கள் பல பெற்று இருந்தான். அந்த வரத்தின் மகிமையால் தேவர்களையும், மனிதர்களையும் கொடுமைப்படுத்தி வந்தான்.

தேவர்களை பூண்டோடு அழித்தொழிக்க எண்ணினான். அவன் கொடுமை தாங்காத தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். கயமுகனை சம்ஹாரம் செய்து தேவர்களைக் காப்பாற்றுவதற்காக விநாயகப்பெருமான் சதுர்த்தியன்று அவதரித்தார். விநாயகர் கயமுகனுடன் போர்புரிந்த போது ஆயுதங்களால் அழியாத வரம் பெற்ற கயமுகன் பெருச்சாளி உருவம் கொண்டு விநாயகரை தாக்கினான். விநாயகர் அவனை தன் வாகனமாக்கி அருள்புரிந்தார்.

இனி....விநாயகர் அவதாரம் குறித்து புராணத்தில் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

ஒரு முறை கயிலாயத்தில் பார்வதி தேவி நீராடிக்கொண்டு இருந்தார். அப்போது தனக்கென்று ஒரு காவல் தெய்வம் வேண்டும் என்று விரும்பினார். அப்போது குளியலுக்கு பயன்படுத்தும் மஞ்சளை குழைத்து அதில் அழகிய உருவம் செய்து, உயிர் கொடுத்து விநாயகப்பெருமானை தோற்றுவித்தார்.

விநாயகரை வீட்டுவாசலில் இருக்க வைத்து "நான் குளித்து கொண்டு இருக்கும் போது, எவரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது"என்று கூறிச் சென்றார். அந்தநேரம் பார்த்து வீட்டுக்கு திரும்பி வந்த சிவபெருமானை, விநாயகர் வாசலில் தடுத்து நிறுத்தி விட்டார். கோபம்கொண்ட சிவபெருமான், விநாயகரை "யாரோ"என்று நினைத்து அவரது தலையை துண்டித்து விட்டார். இதை பார்த்த பார்வதி மிகவும் வருத்தப்பட்டார். அவரை சமாதானப்படுத்தும் முயற்சியில் வடக்கு நோக்கி தலைவைத்து தூங்கிக்கொண்டிருக்கும் உயிரினத்தின் தலையை வெட்டி கொண்டு வரும்படி தன் சேவகர்களுக்கு உத்தரவிட்டார். அவ்வாறே சேவர்களும் வடக்கு நோக்கி தலைவைத்து தூங்கிக்கொண்டிருந்த ஒரு யானையின் தலையை வெட்டி சிவனிடம் கொடுத்தனர்.

சிவபெருமான் விநாயகரது உடலுடன் யானைத் தலையை பொருத்தினார். பூத கணங்களுக்கு அவரை தலைவனாக்கி மகிழ்ந்தார். அனைத்து மங்கள நிகழ்ச்சிகளுக்கும் தொடக்கத்தில் தமது மகனை வழிபட வேண்டும் என்று அவர் ஏற்பாடு செய்தார். விநாயகர் பல திருவிளையாடல்களை செய்துள்ளார். காக்கை வடிவம் கொண்டு அகத்தியரின் கமண்டலத்தில் இருந்து காவிரி நதியை கவிழ்த்து பெருகி ஓடச் செய்தார். விபீஷணன் இலங்கைக்கு எடுத்துச் சென்ற ரெங்கநாதர் சிலையை தடுக்கும் விதத்தில் பாலகன் வடிவில் வந்து லீலைகள் புரிந்து சிலையை ஸ்ரீரங்கத்தில் பிரதிஷ்டை செய்தார். முருகன் வள்ளியை மணம் புரிவதற்கு யானை வடிவில் சென்று உதவி செய்தார். அனலாசரன், சிந்தூரன் ஆகிய அசுரர்களை விநாயகர் விஸ்வரூபம் எடுத்து அழித்தார். வியாசர் சொல்ல, சொல்ல மகாபாரதத்தை எழுதினார்.

## விரதம் இருப்பது எப்படி?

விநாயகர் சதுர்த்தியன்று வீட்டை சுத்தம் செய்து, கோலம் போட்டு அலங்கரிக்க வேண்டும். வாழைமரம், மாவிலை தோரணம் கட்ட வேண்டும். பூஜை அறையில் சுத்தமான பலகையில் கோலம் போட வேண்டும். அதன்மீது தலைவாழை இலையைப் போட வேண்டும். நுனிப் பாகம் வடக்கு முகமாக இருக்க வேண்டும். இந்த இலை மீது பச்சரிசியைப் பரப்ப வேண்டும். அந்த அரிசியின் மீது களிமண்ணில் செய்துள்ள விநாயகர் விக்கிரகத்தை எழுந்தருளச் செய்ய வேண்டும். விநாயகர் சதுர்த்திக்கு களிமண் பிள்ளையார் தான் விஷேசம். விநாயகருக்கு மங்கள ஆராத்தி காட்டி, வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் எனும் முக்கனிகள், கரும்பு, எள், கடலை, அப்பம், மோதகம், பொரி உருண்டை போன்றவற்றை நிவேதனம் செய்து, கணேஷ அஷ்டகம் கூறி பூஜை செய்து அவரை வழிபட வேண்டும். விநாயகர் புராணம் படித்து மங்கள ஆராத்தி எடுக்க வேண்டும். மறுநாள் புனர்பூஜையை கொண்டாட வேண்டும். தயிர்சாதம் நைவேத்தியம் செய்ய வேண்டும். அதன்பிறகு குளத்திலோ, கிணற்றிலோ பிள்ளையாரைக் கரைத்து விடலாம். பிள்ளையார் பூஜைக்கு அருகம்புல்லும், எருக்கம்பூவும் விசேஷமான ஒன்றாகும்.

விநாயகர் சதுர்த்தி விரதம் இருப்பவர்கள், விநாயகர் அருள்பெற்று அனைத்து நலன்களையும், சுகங்களையும் பெறுவார்கள். வாழ்க்கையில் துன்பம், இடைஞ்சல்கள் வராது. பக்தர்கள் வாழ்வில் ஏற்படும் விக்கினங்களை அகற்றி ஆன்மிக வெற்றியை அருளும் அருட்தெய்வம் அவர். எனவே அவர் விக்கின விநாயகர் என அழைக்கப்படுகிறார்.

## ஆண்டவனுக்கு நடத்தப்பெறும் அபிசேகங்களால் வரும் பலன்கள்

1. சந்தனாதி தைலம் - சுகம் தரும்
2. நறுமண திருமஞ்சனப் பொடி – கடன் நோய் தீரும்
3. பால் பஞ்சாமிர்தம் - சம்பத்து நல்கும்
4. பஞ்சாமிர்தம் - உடல் வலிமை தரும்
5. பால் - நீடிய ஆயுள் பெறலாம்
6. தயிர் - நன்மக்கட் பேறு கிடைக்கும்
7. நெய் - வீடுபேறு அடையலாம்
8. தேன் - சுகம் தரும்
9. கரும்பின் சாறு – நல் உடல் பெறலாம்
10. இளநீர் - போகம் அளிக்கும்
11. எலுமிச்சம்பழம் - பகைமையை அழிக்கும்
12. விபூதி – போகமும் மோட்சமும் நல்கும்
13. சந்தனக்குழம்பு பன்னீர் - திருமகள் வருவாள்
14. சயஸ்தாரை சொர்ணாபிஷேகம் - லாபம் தரும்
15. வலம்புரிச்சங்கு அபிஷேகம் - தீவினை நீக்கும் நல்வினை ஆக்கும்
16. சலசாபிஷேகம் - நினைத்தவை நடக்கும்
17. நெல் எண்ணெய் - விஷ ஜுரம் நிவர்த்தி
18. ஜாலம் - சாந்தி உண்டாகும்
19. வாழைப்பழம் - பயிர் விருத்தியாகும்
20. வெல்லம் - துக்கம் நிவர்த்தியாகும்
21. சர்க்கரை சத்ரு நாசம்
22. சாதம் (அன்னம்) – சகல பாக்கியம் கிடைக்கும்
23. மாம்பழம் - வெற்றியை அருளும்

சைவ சமயிகள் ஓதவேண்டிய தமிழ் வேதங்கள் எவை?
**தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டும்**

தேவாரஞ் செய்தருளினவர் யாவர்?
**திருஞானசம்பந்தர்மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் மூவர்.**

திருவாசகஞ் செய்தருளினவர் யாவர்?
**மாணிக்கவாசக சுவாமிகள்**

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?
சோழநாட்டிலுள்ள சீர்காழியிலே வைதிகப்பிரமான குலத்திலே திருவவவதாரஞ் செய்தருளினார்.

திருநாவுக்கரசுநாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?
திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரிலே திருவவதாரஞ் செய்தருளினார்.

# தைப்பொங்கல் பண்டிகை

சைவத் தமிழ்மக்களின் பண்டிகைத் திருநாட்களில் தைப்பொங்கல் பண்டிகை ஒரு சிறந்த பொன்னான நாளாகும். சூரியன் தனுராசியில் இருந்து மகர ராசிக்குப் பிரவேசிக்கும் நாளே தைப்பொங்கல் தினமாகும். தைப்பொங்கல் தமிழர்களின் பண்புகளை விளக்கி நிற்கும் பண்டிகையாகும்.

சூரியபகவான் பன்னிரெண்டு மாதங்களிலும் ஒவ்வொரு பெயரால் வணங்கப்படுகிறார். தை பிறப்பதற்கு முதல் நாள் அதாவது மார்கழி கடைசி நாளை போகிப்பண்டிகை என்று கொண்டாடப்படுகின்றது.

இந்திரனுடைய அனுக்கிரகத்தால் மழை பெய்வதால் அவருக்கு நன்றி தெரிவிப்பது போல் இந்தப் பொங்கல் திருநாளை கொண்டாடுகிறார்கள். இந்திரனுக்கு போகி என்ற பெயர் உள்ளதால் இதைப் போகிப்பண்டிகை என்றும் சொல்லுவார்கள். தை மாதம் முதல் நாள் மகரராசியில் சூரியன் வருவதால் "மகர சங்கிராந்தி"என்றும் அழைக்கப்படுகின்றது. அன்று வீட்டிலுள்ள பழைய பொருட்களை (கழிவு) எரிப்பார்கள். வீடுகளைச் சுத்தம் செய்வார்கள். வெள்ளை அடிப்பார்கள். எல்லாம் துப்பரவு செய்து புனிதப்படுத்தி ஆசாரமாக தை முதல் நாள் அதிகாலை எழுந்து முற்றம் பெருக்கி சாணத்தால் மெழுகி, அல்லது கழுவி கோலமிட்டு பிள்ளையார் பிடித்து கும்பம் வைத்து குத்துவிளக்கேற்றி பூக்களால் அலங்காரம் செய்து வெற்றிலை பாக்கு பழவகை படைத்துப் புதுப்பானை வைத்துப் பொங்குவார்கள். சூரியன் உதயமாகும் நேரம் பொங்கல் பொங்கிச் சரிய வேண்டுமென்று ஆவலுடன் எதிர்பார்த்து நிற்பார்கள். பொங்கல் பொங்கிச் சரியும் பொழுது பொங்கலோ பொங்கல் என்பர். பொங்கிச் சரியும் பாலையெடுத்து வீடுகளுக்கெல்லாம் தெளித்துப் பீடை குற்றங்கள் எல்லாம் போக்கித் திருப்தி அடைவார்கள். பொங்கல் படைத்து பூசித்து குடும்பசகிதம் வழிபாடு செய்வார்கள். பொங்கல் சாப்பிட்டு உற்றார் உறவினருடன் சந்தோஷம் கொண்டாடுவார்கள். பின் கோயிலுக்குச் சென்று பொங்கல் வைத்து படையல்கள் செய்து வழிபாடு செய்வார்கள்.

சூரியபகவான் தை மாதத்தில் மஹாவிஷ்ணுவாக வணங்கப்படுகின்றார். பங்குனி மாதத்தில் மட்டும் சூரியனாக வணங்கப்படுகின்றார்.

மூன்றாம் நாள் பட்டிப் பொங்கல் நடைபெறும். இதனைக் கோபூசை எனக் கூறுவார்கள். மாடுகளின் கொம்புகளுக்கு வண்ணச்சாயம் பூசி சந்தனம், குங்குமம் பூசி பூமாலைகள் போட்டு அலங்கரிப்பார்கள். பொங்கிப் படையல் செய்து பூசித்து இறைவனை வணங்கி வேண்டுதல் செய்வார்கள். தைப்பொங்கல் பண்டிகை உழவர்களுக்கு பெரும் சந்தோஷம் நிறைந்த திருநாளாகும். உழவர் திருநாள் எனப் போற்றப்படும். தை பிறந்தால் வழி பிறக்குப் என்பது ஒரு பழமொழியாகும்.

கடும் குளிர்காலம் ஆகையால் பனிக்குளிர் காரணமாக நோய் நொடிகள், துன்பங்கள் எல்லாம் நீங்கி தை மாதத்திலிருந்து சூரிய ஒளி வெயிற்காலம் ஆரம்பமாகும். இந்தத் தை மாதத்தை எல்லோரும் மத பேதமின்றி மகிழ்வுடன் வரவேற்கும் ஒரு சிறப்பு மிக்க மாதமாகும்.

வருடம் ஒருமுறை வீட்டுக்கு தொழில் நிறுவனங்களுக்கு, மாட்டுப் பண்ணைகளுக்கு, காரியாலயங்களுக்கு தைப்பொங்கல் பொங்கிப் பூசித்து வழிபாடு செய்து துதித்து மதிப்புக் கொடுப்பதாகும். சூரிய நமஸ்காரம் செய்து வீட்டு வாசற்படியில் பூவைத்து வீட்டை இலட்சுமியாக நினைத்து தரிசனம்செய்து கௌரவிப்பதாகும்.

பொதுவாகத் தைப்பொங்கல் பண்டிகை இறைவழிபாட்டுக்குரிய புனித நாள். இந்நாளை தைப்பொங்கல் என்றும் உழவர் திருநாளென்றும், சூரிய வணக்கத்திற்குரிய சூரிய பொங்கலென்றும் சொல்லுவார்கள். சூரிய வழிபாட்டுக்கும், சக்தி வழிபாட்டுக்கும் சிறந்த நாளாகும்.

**"பொங்கல் பொங்குக! இன்பம் தங்குக"**

தைப்பொங்கல் பண்டிகையோடு கிருஷ்ண அவதாரத்தையும் புராணங்கள் தொடர்புபடுத்திப் பேசுகின்றன. ஆண்டு தோறும் இந்திரனுக்கு பொங்கலிட்டு வழிபடும் ஆயர்களை கண்ணனாக அவதரித்தபோது தடுத்து நிறுத்தினார் திருமால். அதனால் கோபம் கொண்ட இந்திரன் கடும்மழை பெய்யவைத்து வெள்ளம் பெருகுமாறு செய்தார். ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோவர்த்தன மலையைக் குடையாக கொண்டதும் பின் இந்திரன் கண்ணனை வணங்கி மன்னிப்புக் கேட்டதும் புராணச் சான்றுகளாகும்.பொங்கல் பண்டிகையை மகரசங்கிராந்தி என்றும் அழைப்பர். (சங்கிராந்தி என்றால் சேருதல்) அதாவது பன்னிரண்டு ராசிகளிலும் மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய நான்கும்

முக்கியமானவை. அவற்றுள் சூரியன் மகரராசியில் சேரும் முதல் நாளே பொங்கல் எனக் கொண்டாடப்படும் சங்கிராந்தியாகும்.

மாடு என்னும் சொல்லுக்குச் செல்வம் என்று பொருள். மாடுகள் இல்லத்திலிருந்தால் மிகுந்த செல்வப் பெருக்கு உண்டாகும். எனவே மாட்டுக்கு விழா எடுப்பது செல்வத்திற்கு விழாவெடுப்பதாகும். இது கோபூசை என்றும் பட்டிப்பொங்கல் என்றும் கூறப்படுகிறது. சூரியன் பன்னிரண்டு மாதங்களில் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்படுகின்றான்.

| | | | |
|---|---|---|---|
| தை மாதம் | - விஷ்ணு | ஆடி | - ரவி |
| மாசி மாதம் | - அருணன் | ஆவணி | - கபஸ்தி |
| பங்குனி மாதம் | - சூரியன் | புரட்டாதி | - யமன் |
| சித்திரை மாதம் | - அம்சுமாலி | ஐப்பசி | - ஸ்வர்ணதே |
| வைகாசி மாதம் | - தாதா | கார்த்திகை | - தவஸ்டா |
| ஆனி மாதம் | - இந்திரன் | மார்கழி | - மித்திரன் |

## பொங்கல் வாழ்த்து

இதயத்தில் அன்பு பொங்க, இல்லத்தில் ஆனந்தம் பொங்க, பணப்பெட்டியில் தனம் பொங்க, உடம்பில் வலிமை பொங்க, நாட்டில் வளம் பொங்க, நங்கையர்களுக்கு மங்களம் பொங்க, நீர் நிலைகள் நிரம்பிப் பொங்க, தான தர்மங்கள் வேத ஹோமங்கள் பொலிந்து பொங்க, நீதி, நேர்மை, கடமை, கருணை, கண்ணியம், தன்னம்பிக்கை, ஊக்கம் அனைத்தும் எல்லாரிடமும் பொங்க விண்ணில் மாரி பொங்க மண்ணில் வளம் பொங்க ஆண்டவன் அருளால் அனைத்து மங்களங்களும் பொங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து சிறப்புடனும் மகிழ்ச்சியுடனும் பொங்கல் திருநாளை ஆனந்தமாகக் கொண்டாடுவோம்.

### சிவாலய தரிசன விதிமுறை

1. ஆலய தரிசனம் செய்வோர் நீராடி தூய உடை அணிந்து திருநீறு உத்திராட்சம் போன்றவை அணிந்து கொண்டு செல்ல வேண்டும்.
2. வெற்றிலை பாக்கு பழம் தேங்காய் மலர்கள் முதலிய வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு போகலாம்.
3. முதலில் ஆலய கோபுரத்தை வணங்க வேண்டும்.
4. உள்ளே சென்று கொடி மரத்தின் முன்னே ஆண்கள் தலை மோவாய் இருக்கைகள் இரு புயங்கள் முழந்தாளிரண்டு ஆகிய எட்டும் நிலத்தில் படுமாறு (அஷ்டாங்க நமஸ்காரம்) வணங்க வேண்டும். பெண்கள் தலை, இரு கைகள், இரு முழங்கால்கள் ஆகிய ஐந்தும் நிலத்தில் பட "பஞ்சாங்க நமஸ்காரம்" வணங்க வேண்டும்.
5. கொடிமரத்தின் எதிரில் வணங்கிய பின் நந்தி தேவரிடம் விடைபெற வேண்டும். (மானசீகமாக விடைபெறுதல் மிக அவசியம்)
6. நந்திதேவரிடம் விடை பெற்றுக் கொண்ட பிறகு விநாயகரை ஒரு முறையும் சிவபெருமானை ஐந்து முறையும் வலம் வந்து வணங்க வேண்டும்.
7. சமயாச்சாரியர்கள் அம்பாள் நடராச பெருமான் பிற தெய்வங்கள் யாவற்றையும் வணங்கிவிட்டு இறுதியாக சண்டேசுவர நகயனாரை அடைந்து மும்முறை கைகளால் தாளமிட்டு சிவதரிசனப் பலனைத் தந்தருளும் வேண்டுதல் அவசியமாகும்.
8. சண்டேசுவர நாயனாரிடம் சிவதரிசனப் பலனைப் பெற்ற பிறகு கொடி மரத்தின் அருகில் வடக்கு முகமாக அமர்ந்து திரு ஐந்தெழுத்தை (ஓம்சிவாய நம) 108 முறை தியானித்தல் வேண்டும்.

# மஹா சிவராத்திரி விரதம்

மஹா சிவராத்திரி என்பது இந்து சைவ மக்களுக்கு ஒரு மகத்துவம் மிக்க பொன்னான ஒரு திருநாள். இந்துக்களின் திருநாட்களில் மிகவும் சிறப்பு மிக்க புண்ணியம் நிறைந்த நாள். முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானுக்குரிய விரத நாளாகும். சிவனுக்கு ஒரு ராத்திரி அம்பிகைக்கு ஒன்பது ராத்திரிகளாகும்.

மாசி மாதம் கிருஷ்ணபட்சம் (அபர பட்சம்) சதுர்த்தசித் திதியில் வரும் ஒரு நாளே சிவனுக்குரிய மஹா சிவராத்திரியாகும். இறைவழிபாட்டுக்குரிய முக்கியமான நாளாகும்.

ஆன்மாக்கள் சிவனிடம் ஒடுங்கி நிற்கின்ற நிலையில் நாம் செயலற்று சிவனையே வணங்குவதுதான் சிவராத்திரி. எம்பெருமானே அறியாமை இருளில் கிடந்த எங்களை மீட்கப் பெறச்செய்தீர். இப்பொழுது நாங்கள் இழைப்பாறுதலுக்காகிய ஒடுக்க நிலையில் இருக்கின்றோம். எங்களை முழுமையாக அறியாமை இருளிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று வேண்டுவதே சிவராத்திரி வழிபாடாகும்.

சிவராத்திரி நடு இரவு சிவநிதி எனப்படுகிறது. அருவம், உருவம், அருவுருவம் என மூன்று திருமேனிகளைச் சிவம் கொண்டுள்ளது. சிவலிங்கம் சிவத்தின் அருவத்திருமேனியாகும். லிங்கோற்பவம் நிகழ்ந்த மாசிமாதத்து அபரபக்கச் சதுர்த்தசி திதி நாளே மஹா சிவராத்திரியாகச் சிறப்புப் பெறுகிறது.

மஹாசிவராத்திரி நான்கு சாமமும் சிவலிங்க பூசையும், வழிபாடும் நடைபெற வேண்டும். சிவபூசை வழிபாடு செய்வோர் முதற்சாமத்தின் போது மூலமூர்த்திக்கு பஞ்சகவ்வியத்தினால் அபிஷேகம் செய்து சந்தனக்குழம்பு சாத்தி வில்வம், தாமரை, துளசி முதலியவற்றால் அர்ச்சித்து பயிற்றம்பருப்பு அமுதினை நிவேதித்து பூசை செய்யப்படும்.

இரண்டாவது சாமப்பூசையின்போது பஞ்சாமிர்தத்தினால் அபிஷேகம் செய்து அகில் குழம்பு சாத்தி, வில்வம், தாமரை துளசி முதலியவற்றால் அர்ச்சித்து பாயாச நிவேத்தியம் வைத்து பூசை செய்து வழிபடுவர்.

மூன்றாம் சாமத்தின்போது தேன், அபிஷேகம், பச்சைக் கற்பூரம், சுண்ணம் சாத்தி எள்அன்னம் நிவேதித்து பூசை செய்யவேண்டும்.

நான்காம் சாமம் பூசையின் போது கரும்புச் சாற்றினால் அபிஷேகம் செய்து குங்குமம் சாத்தி வில்வம் நந்தியாவந்தனம் கொண்டு அர்ச்சித்து சுத்த அன்னம் படைத்து பூசை செய்யவேண்டும்.

அணுசக்தியை விட மந்திரசக்தி, யந்திர சக்தி பலம் வாய்ந்தவை. இந்தக்கால அணுஆயுதங்களிலும் பார்க்க அந்தக் காலத்தில் பாரதப் போரில் இறைவனால் அர்ச்சுனனுக்கு வழங்கப்பட்ட (பாசுபதம்) பிரமாஸ்த்திரம் மிகவும் சக்தி வாய்ந்தது. ஒவ்வொரு நிகழ்வுகளிலும் ஏற்படுகின்ற நம்பிக்கைச் செயற்பாடுகள் இறைசக்தி என்பதை நாம் உணரவேண்டும். நாங்கள் செய்கின்ற உறுதியான இறைவழிபாடு இறை சக்தியை ஈர்த்து எடுக்கின்றது.

மஹாசிவராத்திரி இரவு நாம் கண்விழித்து துயில் கொள்ளாது நான்கு சாமப் பூசையும் கண்டு இறையருள் பெற்று நாங்கள் விரும்புவதை நிச்சயம் இலகுவாய் பெறமுடியும்.

அடிமுடி தேடிச் சென்ற திருமாலுக்கும் பிரமனுக்கும் திருவண்ணாமலையில் அருள் கிடைத்ததும் இதே சிவராத்திரி நாளில் தான். இத்திருநாள் ஆணவம் அகந்தையை அகற்றி சாந்தி, சமாதானத்துக்கு வழிகாட்டும் காலம் மஹாசிவராத்திரிக் காலமாகும். பிரம்மா. விஷ்ணுவின் அகந்தை அடங்கி சிவன் தாழ் சரணடைந்து மனச்சாந்தி பெற்றதும் மஹா சிவராத்திரி நாள் தான். பிரமனும், விஷ்ணுவும் தங்களின் அறியாமையை நினைத்து சிவபெருமானின் ஜோதி வடிவைத் தரிசித்து சிவபெருமானே முழுமுதற்கடவுளென ஏற்றுக் கொண்ட நன் நாளே மஹாசிவராத்திரி நாளாகும்.

### சிவராத்திரி விரதச்சிறப்பின் மகிமை

உலகத்துக்குக் கர்த்தாவாகவும், ஏகப்பரம்பொருளாகவும், ஆதி அந்தம் இல்லாதவராகவும் இறப்பு பிறப்பு இல்லாதவருமான முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்குரிய மகத்துவம் நிறைந்த விரதம் தான் மஹாசிவராத்திரி விரதம். இந்தச் சிவ விரதம் மற்றைய விரதங்களிலும் பார்க்க அருட்கடாட்சம் நிறைந்த விரதமாகும்.

நாம் நோற்கும் விரதங்கள், செய்யும் பூசைகள், அபிஷேகங்கள், பிரார்த்தனைகள், யாக ஹோமங்கள் யாவும் நேரடியாக முழுமுதற்கடவுளாகிய சிவனைச் சென்றடைவதில்லை. எல்லா நிகழ்வுகளும் தேவர்கள் அட்டதிக்குப் பாலகர்கள் மூலம் தான் சிவனைச் சென்றடைகின்றது. ஆனால் மஹா சிவராத்திரி விரதம் இன்று செய்யும் பூசைகள் அபிஷேகங்கள் யாகங்கள் அனைத்தும் நேரடியாகச் சிவனைச் சென்றடைவதாக அருளாளர்கள் மகான்களின் கூற்றாக இருக்கிறது.

எங்கள் வேண்டுதல்கள் முறைப்படியானதாக இருப்பின் உடனடியாகப் பலன் கிடைக்கப்படுகிறது. இதன் காரணமாக சிவராத்திரி விரதம் மிகவும் மகத்துவம் மிக்கதாகப் போற்றப்படுகிறது. சிவராத்திரி விரதத்தை மக்கள் விரும்பி அனுஷ்டித்து வருகிறார்கள்.

### விரதம் அனுஷ்டிக்கும் முறை

மஹா சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் பெரும்பாலும் வாழ்க்கை பூராகவும் உள்ளத் தூய்மை உடையவராகவும் சிவராத்திரிக்கு மூன்று நாட்கள் முன்பாகவே அசைவ உணவுகளை நீக்கி ஆசார சீலராக வேண்டும். உபவாசம் மேற்கொள்பவர்கள் சிவராத்திரி முதல் நாள் மாலை ஸ்நானம் செய்து புனிதராகி தூய வஸ்திரம் தரித்து கண்கண்ட தெய்வங்களான பெற்றோரை வணங்கி அவர்களின் பாதாரவிந்தம் பணிந்து ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். அதன் பின் சுவாமி அறையில் தீப, தூப ஆராதனை செய்து மலர் கொண்டு அர்ச்சித்து விநாயகப் பெருமானை வணங்கி உங்கள் வேண்டுதலை முன்வைத்து பிரார்த்தித்து மஹாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்போகிறேன் என இறை அருள் வேண்டி, இறை அனுமதி பெற்ற உணர்வோடு மங்கள விளக்கேற்றி உணவருந்தி இறை நினைவுடன் நித்திரைக்குப் போக வேண்டும்.

அடுத்த நாள் அதிகாலை திரிபுண்டரம் (3 குறி) அல்லது உத்தூளனம் தரித்து கோயிலாயினும் சரி அல்லது வீட்டிலாயினும் சரி உள்ளச் சுத்தியுடன் சிவமந்திரம் (ஓம் சிவாயநம) செபித்து தோத்திரங்கள் பாடி தூய பக்தியுடன் உள்ளம் உருகிக் கண்ணீர் மல்க இறைவனை வணங்கி மௌனமாக இருந்து தியானம், பிரார்த்தனை என்பன செய்தல் வேண்டும். கூட்டு வழிபாட்டு திருக்கூட்டத்தாருடன் கூடி (பஜனை) இறைபுகழ் பாடித் துதிக்கலாம். ஆன்மிகப் பெரியார்களின் அருட்சொற்பொழிவுகள் கேட்கலாம். ஒவ்வொரு சாமப்பூசையின் போதும் ஆசார சீலர்களாக தவறாது பூசைகளைக் கண்டு பேரானந்தப் பெருக்கோடு இறை அருள் பெறவேண்டும்.

நித்திரை விழிப்புக்காக சினிமாப் படம் பார்த்தல், சூது விளையாடுதல், களியாட்டங்கள் ஏனைய விளையாடல்கள் எல்லாம் தவிர்க்கப்படவேண்டும். இவைகளைப் பின்பற்றினால் குளிக்கப்போய்ச் சேறு பூசிய உவமானத்திற்குச் சமமாகும். பெரும் பாவமும் ஆகும்.

பொழுதைப் போக்க வேண்டும் என்றால் சிவ சிந்தனையோடு இருக்க வேண்டும். அதற்குப்பல வழிவகைகளை ஆன்மீக ஞானிகள் எமக்கு வழி காட்டி வைத்துள்ளார்கள். ஆலயம் செல்ல முடியாதவர்கள் தங்கள் வீட்டிலுள்ள சுவாமி அறையில் உள்ளத் தூய்மையுடன் இறைவனை வணங்கி ஒரு வெள்ளித் தட்டில் விபூதி பரவி அதற்கு மேல் தெற்பைப்புல்லை எழுது கோலாக்கி ஓம் நமச்சிவாய என்ற சிவமந்திரத்தை (1008) ஆயிரத்தெட்டுத் தடவைகள் எழுதி அதற்குப் பத்திர புஸ்பம் சாத்தி தூப தீபம் கற்பூரத் தீபம் காட்டி வீழ்ந்து வணங்கி அவ்விபூதியைச் சிவசிவ என நெற்றியில் தரித்து ஏனையோர்க்கும் கொடுத்துதவ வேண்டும். இவ்விபூதி இறை சக்தி நிறைந்ததாக மாறியுள்ளது. மருந்து போலப் பேண வேண்டும். நோய் தீர்க்கும் மருந்தாகவும் சிவசிவ எனசொல்லி சிறிதளவு வாயில் போட்டுக் கொள்ளலாம். மிகுதி விபூதியை ஒரு வெள்ளிப் பேழையில் அல்லது பட்டுப் பையில் போட்டு வைத்துக்கொள்ளலாம். இது உடற்பிணி கஷ்ட துன்பங்களைப் போக்கும். மனக்கவலைகளைப் போக்கும் அருமருந்தாகும். மன நிம்மதி அற்ற நேரங்களில் நல்ல விஷயங்களாக வெளியில் செல்லும் வேளைகளில் இறைவனை நினைத்து நெற்றியில்பூசி சிறிது வாயில் போட்டால் எல்லாம் வெற்றிகரமாக நடைபெறும். சிவஅனுக்கிரகத்துடன் பேரானந்தம் மனநிம்மதி கிடைக்கும். இதுசத்தியம். நம்பிக்கை முக்கியமானது.

மஹாசிவராத்திரியான சிவநிதிப் புண்ணிய காலத்தில் இறை அருட் பெருக்குடன் அருள் ஊட்டப்பட்ட விபூதி அருட்திருநீறாகும். இதன் சக்தியைக் கூறமுடியாது. ரிஷிகள் முனிவர்கள் கண்ட மகா மருந்து.

சிவராத்திரி காலத்தில் வீண் பொழுது போக்காமல் விரதம் இருப்பவர்கள் மேற்காட்டியபடி காலத்தைப் புண்ணிய செயற்பாடாகக் கழிக்கலாம்.

அடுத்தநாள் அதிகாலை நான்காம் சாமப்பூசை கண்டு, ஏழை, எளியவர்களுக்கு இயன்றளவு தானங்கள் கொடுத்து பாறனை முடித்து திருவமுது உட்கொண்டு அன்று பகலும் துயில்

கொள்ளாமல் இறைவழிபாடு இறைத்தொண்டுகளில் காலத்தைக் கழித்து இரவாகியதும் சுவாமி அறையில் பூசைமுடித்து சிவராத்திரி சிவவிரதம் பூரண நிறைவு பெற்றதாக எண்ணி திருப்தியுடன் இறைநினைவோடு நித்திரை செய்யலாம். அன்றே நல்ல மங்களகரமான சொற்கனங்கள் (கனவுகள்) காண்பீர்கள். இறைவன் அருட்காட்சியும் வழங்குவார்.

எத்தனையோ அடியார்கள் தங்கள் அனுபவரீதியான பல அற்புத நிகழ்வுகளையும் தங்களின் வேண்டுதல்கள் நிறைவு பெற்றதையும் கதைகளாகக் கூறி சந்தோஷப்படுவார்கள். ஆறுமுகநாவலர் போன்ற பல அறிஞர்கள் மஹா சிவராத்திரியின் மகிமை பற்றிச் சிறப்பாக கூறியுள்ளார்கள். சிவராத்திரி பற்றிய பல கதைகளுமுண்டு.

விரத பலன்

வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய். நாங்கள் எதை விரும்புகிறோமோ எங்கள் விருப்பப்படி வாழ்வழிக்கும் கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் வாழ்வழிக்கின்றார். அறியாமை காரணமாகவும் ஆணவச்செருக்கினாலும் பொறாமை வஞ்சகம் சூது என்கின்ற தீய எண்ணங்களும் கொலை, கொள்ளை, களவு, தீவைப்பு இப்படியான பஞ்சமா பாவச் செயல்களைச் செய்து எங்களை அறியாமலே தீய எண்ணங்களை நிரம்பி வாழ்க்கையில் சீரழிந்து அல்லற்படகிறோம். நல்லதை நினைத்து நல்லவைகள் பேசி நல்லவற்றைச் செய்தால் நிச்சயமாக எங்களுக்கு வளமான வாழ்வு வழங்குவார் இறைவன். கஸ்டங்கள் துன்பங்களை அனுபவிப்பதற்கு நாங்களே காரணமாகின்றோம். இறைவன் மீது பழிபோடுவது குறைசொல்வது எங்களின் அறியாமையாகும். இறைவன் நல்லவர் கெட்டவர் என்று பாகுபாடு பார்க்காதவர். எல்லோருக்கும் சமமாக அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். இதனால் தான் உமாபதி சிவாச்சாரியார் கூறுகின்றார்.

"நலமிலன் நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்"

நாம் நல்ல ஒழுக்கநெறிகளைப்பேணி அன்பு நெறியில் நடந்தால் இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்கும். வழங்களுடன் சந்தோஷமாக வாழலாம். கெட்டவைகளை நினைந்து இறைவனுக்கு விரும்பாதவைகளைச் செய்தால் இறைவன் அருள்புரியவும் மாட்டார். எந்த விரதங்கள் நோற்றாலும் பயனில்லை. வாழ்வு பூராகவும் கஷடங்களும் கவலைகளும் தான் என்று நின்மதியற்ற வாழ்வைத் தான் வாழவேண்டும். எங்களின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாங்களே பொறுப்பானவராவோம். ஒழுக்கநெறி, தர்மநெறி, அன்புநெறி, ஆன்மிகநெறி நின்று விரதங்கள் நோற்றால் சகல சௌபாக்கியங்களும் பெற்று இறை அருட்கடாட்சத்துடன் இன்ப வாழ்வு வாழலாம்.

## மஹாசிவராத்திரியில் நிகழ்ந்த திவ்ய அருட்செயல்களால் நடைபெற்ற அற்புத நிகழ்வுகள்:

சிவனும் பார்வதியும் ஒரு வில்வமரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்கள். அந்த மரத்தின் மீது ஒரு குரங்கு அமர்ந்திருந்தது. அந்தக் குரங்கு மரத்தினிலிருந்த வில்வம் இலைகளை ஒவ்வொரு இலையாய் பறித்து உமைஅம்மை உடனாய சிவலிங்கத்தின் மீது போட்டுக் கொண்டிருந்தது. நோக்கம் இல்லாவிட்டாலும் சிவராத்திரியன்று வில்வார்ச்சனை செய்த காரணத்தால் அந்தக் குரங்கை இறைவன் மூவுலகங்களுக்கும் முசுகுந்தச்சக்கரவர்த்தியாகப் பிறக்கச் செய்தார் என்பது வரலாற்றுக் கதையாகும்.

எலிகளுக்குப் பிறந்த இடம் கோயில் என்பதை நாம் அறிவோம். ஒரு சிவன் கோவிலில் சிவராத்திரி வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. தீபங்கள் ஏற்றினார்கள். நல்ல பசு நெய்விட்டு விளக்கேற்றி வைத்தார்கள். நள்ளிரவு தாண்டியதும் குருக்கள் கதவைச்சாத்திவிட்டு வீடு சென்றுவிட்டார். திரி எரிந்து மங்கலாகியது. வெளிச்சம் குறைந்து விட்டது. நெய் மணத்தில் ஓர் எலி சென்று விளக்கின்மீது உரைத்ததும் கூடுபத்திய திரி சுடர்விட்டு பிரகாசித்தது. சிவராத்திரியன்று கோயிலில் அறியாமல் விளக்கைப் பிரகாசிக்கச் செய்த காரணத்தால் அந்த எலியை மறுபிறப்பில் மூவுலகாளும் மகாபலிச்சக்கரவர்த்தியாக ஆக்கி வைத்தார் சிவபெருமான். இன்னும் பல முத்திக் கதைகள் மஹாசிவராத்திரியின் மகிமையை எடுத்துச் சொல்லி இருக்கின்றன.

எனவே மஹாசிவராத்திரி விரதம் ஒரு அருள்மிகு மஹாவிரதமாகும். சிவபெருமானின் திருமுடியும் திருவடியும் அருளையும் ஞானத்தையும் உணர்த்துகின்றன. அதை அடைவதே முத்திக்கு வழியாகும். சிவபெருமானை அன்பினாலும் உலக உயிர்களுக்குச் செய்யும் தொண்டினாலும் மட்டுமே அடைய முடியும். இந்த தத்துவத்தையே மஹாசிவராத்திரி சுருக்கமாக உணர்த்துகிறது.

# பங்குனி உத்தரம்

பங்குனி உத்தரம் பங்குனி மாதத்தில் வரும் மிக முக்கியமான நாள். இந்து மக்களுக்கு ஒரு மகத்துவம் நிறைந்த அருட்பொலிவான நாளாகும். உத்தரத்தோடு பொர்ணமியும் சேருவதால் பங்குனி உத்தரம் எனப் பெயர் பெற்றது.

பங்குனி உத்தர திருநாளை சமயபேதமின்றி சைவசமயத்தவர்களும் வைஷ்ணவர்களும் தொன்றுதொட்டு பல நூற்றாண்டுகளாக கொண்டாடி வருகிறார்கள்.

இன்று சிவன் ஆலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் உத்தரத்திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது. முருகனுக்கு உகந்த நாளாகவும் அம்பிகைக்கு உகந்த நாளாகவும் பங்குனி உத்தரம் விளங்குகிறது.

முருகன் கோவில்களில் பாற்காவடி எடுத்தல், படிஏற்று விழா போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெறும். சுந்தரமூர்த்தி நாயனார் ஒவ்வொரு பங்குனி உத்தரத்தன்று திருவாரூர் சென்று தியாகராசப்பெருமானை வழிபட்டு வந்தார் என்பதைச் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

பரவையாரை விட்டுப்பிரிந்து திருவொற்றியூர் சங்கிலியாரை மணந்த சுந்தரமூர்த்திநாயனார் பங்குனி உத்தரத்திலன்று திருவாரூர் வந்து தியாகராசப் பெருமானை தரிசனம் செய்ய விரும்பி இறைவனைப் பரவையாரிடம் தூதனுப்பி தன் அடியவனின் விருப்பத்தைத் தெரிவித்தார். அதற்குப் பரவையார் சங்கிலியாரிடம் கட்டுண்டவர்க்கு இங்கு பங்குனி உத்தரத் திருநாளோ என வினவினார்.

சைவத் திருக்கோயில்கள் அனைத்திலும் பங்குனி உத்தரத் திருநாள் கொண்டாடி வந்துள்ளனர் என்பதை ஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

மைலாப்பூரிலிருந்து போன பூம்பாவையை அஷ்திக் கலசத்திலிருந்து உயிர்த்தெழுப்புகின்ற போது கபலீஸ்வரம் அமைந்த பெருமானுக்கு கொண்டாடப்படுகின்ற திருவிழாக்களை சம்பந்தர் குறிப்பிடுகின்ற பொழுது பங்குனி உத்தரத் திருவிழாவையும் காணாது போய் விட்டாயோ பூம்பாவை என்று குறிப்பிட்டுப் பாடுகிறார்.

"மலிவிழாவீதி மட நல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபலீச்சரம் அமர்
பலிவிழாக்காணும் பாடல் செய்பங்குனி உத்தர நாள்
ஒளிவிழாக் காணாதே போதி யோ பூம்பாவாய்"

உத்தரத் திருநாளன்று தான் சீதாராமர் திருமணச்சடங்கினை வேதமுறைப்படி வசிட்டர் நிகழ்த்தி வைத்தார் என்று இராமாயனம் கூறுகின்றது.

பங்குனி மாதத்தில் கூடும் உத்தர நட்சத்திரத்தில் பகற்பொழுதில் அழகிய மண்டபத்தில் ஆயிரம் திரு நாமங்களுடைய சிங்கமாகிய இராமபிரான் திருமணத்தை வேதமுறைப்படி வசிட்ட மாமுனிவர் வேள்வித்தீயை வளர்த்து திருமணத்தை நிறைவேற்றி வைத்தார்.

"பங்குனி உத்தரம் ஆன பகல் போது
அங்கன் இருக்கினில் ஆயிரம் நாமச்
சிங்கம் மணத்தெளில் செய்த திறத்தால்
மாங்கல அங்கி வசிட்டன் வளர்த்தான்" (கம்பராமாயணம்)

முருகப்பெருமானைத் தவம் செய்து அடைய முயற்சி செய்த அம்மான் மகளாகிய சுந்தரவல்லி வள்ளி மலையிலே பிறக்கின்ற போது சிவமுனியின் பார்வையினாலே மான் வயிற்றிலே தோன்றி வள்ளிக்கிழங்கு அகழ்ந்தெடுத்த குழியினிலே பங்குனி உத்தரத் திருநாளன்று வள்ளி நாச்சியாராக அவதரித்தார் என்று கந்தபுராணம் கூறுகிறது.

இப்படியாக இறைவனின் திருவிளையாடல்கள் பெரும்பாலானவை பங்குனி உத்தர திருநாளிலே நடைபெற்றிருக்கின்றது. பங்குனி உத்தரம் ஒரு மகத்துவம் நிறைந்த தெய்வீக அருள் நிறைந்த நாளாகின்றது. எனவே இப் பங்குனி உத்தரத் திருநாளில் விரதமிருந்து இறைவழிபாடு செய்து இறையருள் பெறுவதுடன் பங்குனி உத்தரத் திருநாளில் நல்ல ஆக்கபூர்வமான செயற்பாடுகள் செய்யவும் உத்தமமான நாளாகும்.

பங்குனி உத்தரத்திலன்று தான் பம்பை ஆற்றங்கரையில் ஐயப்பசுவாமி மணிகண்டனாக அவதாரம் செய்த நாளாகும். ஐயப்பன் கோயில்களில் இத்திருநாளை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

இந்துமதம் என்பது ஒரு மாபெரும் கடல். அந்தக் கடலிலே மூழ்கினால் கிடைக்காத ஞானச் செல்வங்களே இல்லை. வேதகாலத்து ரிஷிகள் ஆதிசங்கர், இராமனுஷர், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், ரமணர் உள்ளிட்ட ஏராளமான ஞானிகள் இந்துமத தத்துவங்களையும் செயற்பாட்டு முறைகளையும் நமக்கு நன்கு வகுத்துத் தந்துள்ளார்கள்.

அதே ரீதியில் பங்குனி உத்தரம் பற்றி விரிவாக மேற்காட்டியபடி விவரித்துக் கூறியுள்ளார்கள்.

தெய்வத் திருமணங்கள் எல்லாம் பங்குனி உத்தரத்தில் தான் பெரும் பகுதி நடைபெறுகின்றது. பார்வதியை பரமசிவன் மணந்தது, ராமபிரான் சீதையை திருமணம் செய்ததும் அன்றே. லட்சுமணன் ஊர்மளாவையும், பரதன் மாண்டவியையும், சத்துருக்கன் சுருதகீர்த்தியையும் இத்திருநாளில்தான் மணந்தனர் என்று கம்பரும் வால்மிகியும் குறிப்பிடுகின்றனர்.

மேலும் முருகன் தெய்வயானை, திருவரங்கநாதர், ஸ்ரீ ஆண்டாள், நரசிம்மர், நாமகிரித்தாயார் இப்படி தெய்வத் திருமணங்கள் எல்லாம் பங்குனி உத்தரத் திருநாளில் நடைபெற்றதாக சான்றுகள் சொல்கின்றன.

தெய்வத் திருமணங்களை நிகழ்த்துவதற்கு பங்குனி உத்தரம் மேலான ஒரு முகூர்த்த நாள் என்பதை சைவமக்களும் வைஷ்ணவ மக்களும் ஒருங்கே ஏற்றுக்கொள்கின்றனர். அதேநாளில் திருக்கோயில் அனைத்திலும் தெய்வத் திருமணங்கள் (திருக் கல்யாண வைபவம்) நிகழ்த்தி வழிபாடு செய்கின்றனர்.

தெய்வத் திருமணங்களை வைத்து பங்குனி உத்தரத் திருநாளின் அருட்பொலிவையும் அதன் சிறப்பையும் மகத்துவத்தையும் அறிந்தோம். எனவே பங்குனி உத்தர திருநாளில் பொதுவாக எல்லா ஆலயங்களிலும் விசேடமாக சிறப்பு அபிஷேகங்கள் விஷேட தீபாராதனைகள் நடைபெறும். தவறாமல் அனைவரும் பங்குபற்றி இறையருள் பெறுவோமாக.

1.வேதங்கள் எவை?

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்காகும். இவை உணர்த்தும் பொருளென்ன? இறைவனைப் பொது நிலையில் போற்றுவன திருமறைகள். இவை இறைவனுடைய பலவேறு செயல் வடிவங்களைப் போற்றுவன. (இவற்றில் இந்திரன், அக்கினி, வருணன், உருத்திரன் என வருவன பல தெய்வ வழிபாடன்று. இறைவன்ஒருவனின் பல இயல்புகளே என உணரவேண்டும். அப்பொழுது தான் "ஒன்றே பொருள். அது பலவாறாகச் சொல்லப்படுகின்றது" என்பது போன்ற வேத மந்திரங்களின் பொருள் தெளிவடையும்.

ஆகமங்களின் தேவை என்ன?

வேதங்கள் பொது வகையில் எடுத்து ஓதிய இறைவனை ஆகமங்கள் சிறப்பு முறையில் சிவபெருமானே அப்பரம்பொருள் என்று அப்பெருமானை வழிபட்டு உணரும் நிலை தருகின்றன.

ஆகமங்கள் எத்தனை? சிவாகமங்கள் 28 ஆகும்.

புராணங்கள் எவை எவை?

புராணங்கள் 18 ஆகும். அவை சைவம், பவிஷ்யம், மார்க்கண்டம், இலிங்கம், ஸ்காந்தம், வராஹம், வாமனம், கூர்மம், ப்ரம்மாண்டம், காருடம், நாரதீயம், விஷ்ணு, பாகவதம், ப்ரம்மம், பத்மம், ஆக்னேயம், ப்ரம்மகைவர்த்தம் என்பன.

# சித்ரா பௌர்ணமியின் சிறப்புக்கள்.

பூமியைச் சுற்றிவரும் சந்திரன் பௌர்ணமி அன்று முழு நிலவாகத் தோன்றி மிகப்பிரகாசமாகக் காட்சிதரும். இந்தப் பௌர்ணமி தினமானது மாதம் ஒரு முறை வந்தாலும் சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமிக்கு சில தனிச்சிறப்புக்கள் உள்ளன. சித்திரைமாதப் பௌர்ணமியில் அப்படியென்ன சிறப்பு? என்ற கேள்வி எம்மிடம் எழுவது இயல்பானதொன்றாகும். சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிவரும் பௌர்ணமி நாள் சித்ரா பௌர்ணமி நாளாகும்.

சித்திரை நட்சத்திரமும், மாதமும் அம்மனுக்குரியனவாக இருப்பதனால், இத்தினம் அம்பாளை பூசிக்க மிகவும் சிறப்புப் பொருந்திய நாளாக அமைகின்றது. அத்துடன் தாயாரை இழந்தவர்களுக்கு பிதிர் தர்ப்பணம் செய்யும் நாளாகவும், பிரம்மஹத்தி தோஷம் பிடித்தவர்கள் தோஷம் நீங்கும் விரதமாகவும், சித்ரா பௌர்ணமியில் பிறந்த சித்திர குப்தர் விரத நாளாகவும் கொண்டாடப்படுகிறது.

சித்திரை மாதத்தில் சூரிய பகவான் உச்ச பலம் பெறுகிறார். சந்திரன் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கின்றார். சூரியனை பித்ருகாரன் (தந்தையை நிர்ணயிப்பவர்) என்றும், சந்திரனை மாத்ருகாரன் (தாயை நிர்ணயிப்பவர்) என்றும் கூறுவர். அதாவது அமாவாசையன்று சூரியனும், சந்திரனும் இணையும் நாளில் மூதாதையர்களுக்கு திதி, தர்ப்பணம் செய்கிறோம்.

சூரியனுக்கு அதிதேவதையாக பரமசிவனையும், சந்திரனுக்கு அதிதேவதையாக பார்வதியையும் வைத்திருக்கின்றார்கள். அமாவாசை, பௌர்ணமி அன்று முறையே சூரிய சந்திர சங்கமத்தையும், சமசப்தமமாக இருப்பதையும் சிவசக்தியின் ஐக்கியம் என்று கூறப்படுகிறது.

## சித்ரா பௌர்ணமி வரலாறு:

தேவலோகத்தில் எல்லோருக்கும் சிவபெருமான் வேலைகளைப் பிரித்துக் கொடுத்தார். மக்களின் பாவ, புண்ணியங்களைக் கணக்கெடுக்கும் பணியை யாருக்கும் கொடுக்காதது அவருக்கு நினைவுக்கு வந்தது. இதற்காக புதிதாக ஒருவரை படைக்கத் தீர்மானித்தார் சிவபெருமான். இப்படி அவர் யோசித்தபோது, பார்வதி தேவி ஒரு பலகையில் அழகான பையனின் படத்தை வரைந்தார். அதைப் பார்த்து மகிழ்ந்த பெருமான், அந்த சித்திரத்துக்கு உயிர் கொடுத்தார். இப்படி சித்திரத்திலிருந்து உருவானதால் அவர் சித்திரகுப்தன் எனப் பெயர் பெற்றார்.

சிவபெருமானின் அரவணைப்பில் கயிலாயத்தில் இருந்தபடி, உலகத்து மக்களின் பாவ, புண்ணியக் கணக்குகளை எல்லாம் முறையாகத் தொகுக்க ஆரம்பித்தார் அவர். இப்படி பொறுப்பாகப் பணிபுரிந்த சித்திரகுப்தன் இன்னொருமுறை பிறக்க நேர்ந்தது.

தேவர்கள் தலைவனான இந்திரனுக்கும் அவன் மனைவி இந்திராணிக்கும் மனதுக்குள் ஒரு குறை. அது தங்களுக்கு குழந்தையில்லை எனும் குறைதான். இந்தக் குறையைத் தீர்க்க, இந்திரனும் அவன் மனைவி இந்திராணியும் சிவபெருமானை நோக்கிக் கடுமையான தவம் இருந்தார்கள். இந்திரனுக்கு நேரடியாக பிள்ளைப்பேறு தர முடியாதே என சங்கடப்பட்ட சிவபெருமான், இந்திரனுக்கு சித்திரகுப்தனை மகனாகப் பிறக்க வைக்கத் தீர்மானித்தார்.

இந்திரனின் அரன்மனையில் இருந்த காமதேனுவின் கருப்பையில் சித்திரகுப்தனை புகச்செய்த சிவபெருமான், அந்தப் பசுவுக்கு குழந்தையாகப் பிறந்து, இந்திரனின் குழந்தை பாக்கிய குறையை தீர்த்துவைக்குமாறு கூறினார். இதை இந்திரனுக்கும் எடுத்துரைக்க, எப்படியோ ஒரு குழந்தை கிடைத்தால் போதும் என இந்திரனும், இந்திராணியும் சம்மதித்தனர். காமதேனுவுக்கு குழந்தையாகப் பிறந்தார் சித்திரகுப்தர். அவர் சிதிரை மாதம், சித்திரை நட்சத்திரத்தில் பிறந்ததால் சித்திரா குப்தன் என அழைக்கப்படுகின்றார்.

## பௌர்ணமியின் சிறப்பு

சித்ரா பௌர்ணமி பற்றி முதலில் பார்த்தோம். அடுத்து கார்த்திகை மாத பௌர்ணமி தினத்தன்று சூரியன் கார்த்திகை மாதத்திலும், சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்திலும் சஞ்சரிப்பார். அன்று சந்திரன் உச்ச பலன் பெறுவார். மற்றும் சில பௌர்ணமிகளுக்கு சிறப்புகள் உள்ளன. வைகாசி மாதம் வரும் பௌர்ணமி விசாக நட்சத்திரத்தில் வரும். அன்று முருகக் கடவுள் அவதரித்த தினமாகும். மார்கழி மாதத்தில் வரும் பௌர்ணமி திருவாதிரை நட்சத்திரத்தில் வரும். அது பரமசிவனின் திரு நட்சத்திரமாகி, ஆருத்ரா தரிசனம் காண பாபங்கள் தொலைந்துவிடும். அன்று ஆனந்த நடனமாடுகிறார் நடராஜப் பெருமான். அபஸ்மாரம் என்னும் முயலகனை தனது

திருவடிகளால் மிதித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீநடராஜரை வழிபட்டால் அபஸ்மாரம் என்னும் காக்காய் வலிப்பு நோய் குணமாகும் என்பது ஓர் "சிதம்பர ரகசியம்".

தை மாதத்தில் பௌர்ணமி பூசம் நட்சத்திரத்தில் வரும். அன்று செய்யும் முருக வழிபாட்டிற்கு ஈடு இணை இல்லை. மாசிமாத பௌர்ணமி மக நட்சத்திரத்தில் வரும். அன்று அம்பிகையை வழிபட தேவியின் பூரண அருள் கிட்டும். பங்குனிமாத பௌர்ணமி உத்தர நட்சத்திரத்தில் வரும். அன்று திருச்செந்தூரில் ஐராவத மண்டபத்தில் 108 சிவலிங்கங்கள் சாட்சியாக ஸ்ரீவள்ளி - ஸ்ரீமுருகன் திருமணம் நடப்பதைப் பார்ப்பவர்கள் மறுபிறவி எய்தார் என்பது உண்மை.

இத்தகைய சிறப்புக்களை உடைய சித்ரா பௌர்ணமி அனைத்து திருக்கோயில்களிலும் சிறப்பு வழிபாடுகளுடன் கொண்டாடப்படுகிறது.

## சரியை முதலிய வழிபாடுகளின் பயன் யாது?

சரியை நெறியில் நின்று வழிபாடுகள் செய்தவர்கள் சிவலோகத்திற்குச் சென்று அவ்வுலகத்தில் உள்ள போகங்களை அனுபவிப்பர். கிரியை நெறியில் நின்றவர்கள் சிவலோக போகத்தை அனுபவிப்பதோடு, சிவபெருமானுக்கு அருகில் இருக்கும் பேற்றைப் பெறுவர். யோக நெறியாளர்கள் சிவபெருமான் கொண்டுள்ள திருமேனிகளில் ஒன்றைப் பெற்று சிவலோகத்தில் சிவபோக அனுபவம் உடையவராய் வாழ்வர். ஞான நெறியில் நின்றவர்கள் சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்து நின்று நித்தியானந்தத்தை அனுபவித்து வாழ்வர். இந்நான்கு பயன்களையும் முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திகள் எனக் கூறுவர்.

## இந்த ஒரு பிறப்பிலேயே முத்தியைப் பெற்றிவிட முடியுமா?

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சிவபுண்ணிய நெறிகளில் உள்ளன்போடு ஒழுகி வருபவர்கள் இந்தப் பிறப்பிலேயே முத்தியைப் பெற்றுவிட முடியும் என்று சைவசித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு ஒழுகி வருபவர்களின் மும்மல அழுக்கை நீக்கி அவர்களை ஞானசாகரத்தில் மூழ்குவித்துச் சிவானந்தம் மேலிடச் செய்து மேல் வரும் பிறப்பை ஒழித்து இறைவன் முத்தியைத் தந்தருள்வான் என்று சிவாகமங்கள் ஆகிய சித்தாந்தத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.எனவே சிவாகம நெறியின் படி நடப்பவர்கள் இப்பிறப்பிலேயே முத்தியைப் பெறலாம் என்பது தெளிவு.

# ஆலயங்களில் வருடாந்த மஹோற்சவம்

இந்துமத ஆகம விதிகளுக்கு அமைவாக நிறுவப்பட்டுள்ள சைவாலயங்கள் பெரும்பாலும் வருடத்தில் ஒரு முறையாவது வருடாந்த மஹோற்சவத்தை நடாத்தி வருகின்றார்கள். ஆலயம் அமைந்திருக்கும் சூழல், சுற்றாடல், மக்கள் தொகை வாழ்க்கை வசதிகள் என்பனவற்றின் அடிப்படையில் மஹோற்சவம் நடைபெறும் நாட்களின் எண்ணிக்கை வேறுபட்டுக் காணப்படும்.

உற்சவம் என்றாலே திரு உலா, மூர்த்திகளின் புறப்பாடு என்றும் சொல்லப்படுகின்றது. ஆலயங்களில் இரண்டு வகையான பூஜைகள் நடைபெறுகின்றன. 1. நித்திய பூசை (ஆறுகாலம்). 2. நைமித்திய பூசை. (திருவிழா, சங்காபிஷேகம், குப்பாபிஷேகம் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.)

இதன் அடிப்படையில் திருவிழா பற்றி நோக்குமிடத்தில் அதை நடாத்துவது இரண்டு வகையில் அமைகின்றன. 1. சம்பிரதாய விழா. 2. தத்துவரீதியான விழாவாகும்.

சம்பிரதாய முறையில் நடாத்தப்படும் விழா என்பது, ஆலயத்தில் நித்திய பூசைகளின் போதுள்ள குறைபாடுகள் அதாவது பக்தியீனம், கிரியாயீனம், மந்திராயீனம் எனச் சொல்லப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அனுபவமும் அறிவு முதிர்ச்சியும் மனோபலமும் நிறைந்த குருவை நாடி அவர் மூலமோ அல்லது அவரின் துணையுடன் வேறு சிவாச்சாரியார் மூலமாகவோ இந்த உற்சவம் நடாத்தப்படுகின்றது.

இவ்விழாவை முன்னிட்டு முற்கூட்டியே ஆலயத்தின் சிறு சிறு திருத்த வேலைகள், துப்பரவுப் பணிகள், வெள்ளையடித்தல் வீதிகள் புனரமைப்புச் செய்தல் ஆகிய பணிகள் நடைபெற்று விழாவுக்கான தயார் நிலைக்கு ஒழுங்கமைக்கப்படும்.

உற்சவத்திற்கான பூசை விதிகளுக்கு அமைவாக, பூசைத் திரவியங்களை வரவழைத்து, எல்லாவிதத்திலும் நிறைவான ஒரு பூசையைச் செய்வது உற்சவத்தின் நோக்கமாகும். இவை நடைபெறும் நாட்களின் எண்ணிக்கை ஆலயத்திற்கு ஆலயம் வித்தியாசப்படும். இவ்விழாப் பூசைகளில் பல சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள். இவ்விழாக்கள் வருடத்திற்கு ஒரு முறை நிகழும்.

இவ்விழாக் காலங்களில் அடியவர்கள் தூய்மையுடனும் பக்திச் சிரத்தையுடனும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வந்து அங்கு நடைபெறும் பூசைகள், கலை நிகழ்வுகள் சொற்பொழிவுகள் புராண நாடகங்கள் என்பனவற்றைக் கண்டு மகிழ்வார்கள். சிலர் இறைபக்தியுடன் விரதம் இருந்து இந்நாட்களைக் கழிப்பார்கள்.

அடுத்து தத்துவரீதியாக நடைபெறும் மஹோற்சவம் பற்றிப் பார்க்குமிடத்து, இம் மஹோற்சவத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் சைவாகம விதிகளுக்கு அமைவாகவே இருக்கும். மஹோற்சவம் தொடங்கும் கொடியேற்றத்திற்கு முதல் நாள் காலைப் பொழுதில் விநாயகர் பூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் என்பன இடம் பெற்று முகூர்த்தக்கால் நடப்படும். அன்று மாலை சாயரட்சைப் பூஜை, வாஸ்து சாந்தி என்பன நடைபெறும்.

உற்சவத்தின் முதல்நாள் கொடியேற்று திருவிழா. இது இறைவனின் பஞ்சகிருத்தியங்களில் படைத்தல் தொழிலைக் குறிப்பதாகும். அத்துடன் கொடி என்பது வெற்றியையும் குறிக்கும். அதாவது இறைவன் ஆன்மாக்களை ஆணவம், கர்மம், மாயை ஆகிய மும்மலங்களில் இருந்தும் காத்து வெற்றி கொள்கின்றான் என்பதாகும்.

இந்நிகழ்வானது, கொடிமரத்தில் சுற்றியிருக்கும் கொடிச்சீலை பசு எனவும், அதனோடு சுற்றியிருக்கும் தர்ப்பைக்கயிறு பாசம் எனவும், இரண்டையும் இறைவனிடத்தில் சேர்ப்பது நூலினாலான கயிறு திருவருள் சக்தியாகவும், கொடிமரம் இறைவனாகவும் சொல்லப்படுகின்றது. எனவே பஞ்சகிருத்தியத்தின் ஆரம்பமே கொடியேற்றமாகும். கொடிமரம் அசுரர்களை அகற்றவும், தேவர்களை அழைக்கவும் நாட்டப்படுகிறது.

தொடர்ந்து வரும் திருவிழாக்கள் காத்தல் தொழிலைக் குறிக்கும். இவை வாகனத் திருவிழாக்கள் என அழைப்பர். தேர்த்திருவிழாவுக்கு முதல்நாள் சப்பறத் திருவிழா நடைபெறும். இது கோபுர தரிசன புண்ணியத்தைக் கொடுக்கும்.

தேர்த்திருவிழாவானது ஐந்தொழில்களில் ஒன்றான அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. அதாவது மலப்தங்களினால் பீடிக்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு மனிதனது ஆணவத்தினை அழித்து

நல்வழிப்படுத்துகின்ற நிகழ்வாகவே தேர்த்திருவிழா காணப்படுகின்றது. இதில் தேரானது இறைவன் முப்புரங்களை அழித்த செய்தியை நினைவுபடுத்தும் தத்துவமாகும். தேரின் கட்டமைப்பைக் கவனிக்குமிடத்து, மேல்தட்டு பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜனலோகம், மகர்லோகம், தபோலோகம், சத்தியலோகம் எனவும், கீழ்தட்டு அதல, விதல, சுதல, ரசாதல, மகாதல, தராதல, பாதாழ எனத் தத்துவ விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இறைவன் மக்களுக்கு அருள்புரிய தேரினிலே எழுந்தருளி வீதிவலம் வருகின்றார். ஆலயத்தின் உள்ளே செல்ல முடியாத அடியவாகளுக்கெல்லாம் வெளியிலே காட்சிகொடுத்து அருள்பாலிக்கின்றார். தேர்த்திருவிழா அன்று இரவுத் திருவிழாவின் போது சுவாமி தேர்முட்டியையும், தேரையும் சுற்றி வீதிவலம் வரும் நிகழ்வானது மறைத்தல் என்று சொல்லப்படுகின்றது.

அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவாகும். இது அருளல் தொழிலைக் குறிக்கும். சுவாமி தீர்த்தமாடும் நிகழ்வானது ஆலயத்தின் திருமஞ்சனக்கிணற்றில் அல்லது அருகில் உள்ள கேணி குளம் ஆறு கடல் போன்ற நிர்நிலைகளில் நடைபெறும்.

தொடர்ந்து அடுத்தநாள் பூங்காவனத் திருவிழாவாகும். இவ்விழாவைப்பற்றி எவரும் குறிப்பிட்டுச் சொல்வது வழமையில் இல்லை. எனினும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்மாக்கள் எங்கே செல்வது? ஆட்கொள்ளப்பட்ட பின் பூமியிலோ அல்லது வேறு உலகங்களிலோ அவர்களுக்கு இடம் இல்லை. ஆகவே இறைவனின் திருவடியை அடைகின்றனர் என்ற தத்துவம் விளங்கப்படுத்தப்படுகின்றது.

பூங்காவனத்திருவிழா இரவு நேரத்தில் நடாத்தப்படும் ஒரு விழாவாகும். ஆலயத்தினுள் மலர்ச்சோலை அமைத்து, அச்சோலையினுள் இறைவனை எழுந்தருளச் செய்து, பக்தர்கள் சூழ அமர்ந்து பண்ணிசை, இன்னிசை பாடி கலை நிகழ்ச்சிகள் நடாத்தி இறைவனுக்கு சிறப்புப் பூசைகள் நடைபெறும். இதனைக் கைலாயக்காட்சி என்று

வானிப்பர். இதுவே முக்தி தரும் பேரின்பமாகும். இக்காட்சி அப்பர் சுவாமிகளால் அனுபவித்துச் சொல்லப்பட்டுள்ளது.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே

## சிவாலயங்களில் செய்யத்தகாதன

1. குளிக்காமல் ஆலயத்திற்குள் செல்லக் கூடாது.
2. மேல் வேட்டி சட்டை முதலியவை அணிந்து செல்லக்கூடாது.
3. வெற்றிலை பாக்கு அருந்துதல் எச்சில் துப்புதல் மலசலம் கழித்தல் கூடாது
4. மூக்கு நீர் சிந்துதல் கூடாது.
5. சிரித்தல் சண்டையிடுதல் வீண் வார்த்தைகள் பேசுதல் உறங்குதல் கூடாது.
6. சிவபெருமானும் நந்திதேவருக்கும் குறுக்கே செல்லுதல் கூடாது.
7. பலிபீடத்துக்கும் இறைவன் சன்னதிக்கும் இடையே போதல் கூடாது.
8. அபிஷேகம் நடந்து கொண்டிருக்கும் போது உட்பிரகாரத்தில் வலம் வருதல் கூடாது.
9. வழிபாட்டை அவசர அவசரமாக நிகழ்த்துதல் கூடாது.
10. சுவாமிக்கு நேராகக் காலை நீட்டி வணங்குதல் கூடாது.
11. ஈரமான ஆடை அணிந்து செல்லுதல் மயிர் கோதி முடிதல் கூடாது.
12. காலணி குடை முதலியன பெற்றுச் செல்லக் கூடாது.

ஹொலண்ட் டென்ஹெல்டர் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர்

# திருவூஞ்சல் பாட்டு

காப்பு

ஆனைமுகமும் பாசாங்குச கையும் கொண்ட
ஐங்கரனே கணபதியே அருட்கொழுந்தே
மேரு கிரி மீதினிலே வீற்றிருக்கும் புனிதக் கொம்பா
விருப்புடனே பெருஞ்சாளி ஏறும் நாதா
மன்னவனே கொலன் டென்கெல்டர் நகர் தனிலே
மகிழ்வோடு குடிகொண்ட மருக் கொழுந்தே
என் உள்ளம் உன் ஊஞ்சல் பா பாட
ஏகதந்தா நின் கழலே காப்புச் செய்வாய்.

நூல்

1) தொன்மை தரு மண்டலங்கள் துதிக்க நின்ற
தூயவனே துதிக்கை முகம் கொண்டவனே
தன்னிகரில் தமிழின் சுவை ஆய்ந்தளித்துத்
தரணியெல்லாம் புண்ணியமே தழைக்கவேண்டிப்
புன்மை தரு நெறி நீங்கப் புவனமெல்லாம்
பொழி கருணை நலஞ் சிறக்கக் கோவில்கொண்ட
செம்மை தரு டென்கெல்டர் மேவும்
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

2) உலகுணர்ந்த சிவனுக்கு மகனுமாகி
உயர்ஞான குமரனுக்கு அண்ணனாகி
மாங்கனிக்கு சோதரனுடன் மனங்கசந்து
மாதா பிதா உலகமென பெருமை சேர்த்துத்
கண்குளிரும் இரத்தினங்கள் துணையாய் கொண்ட
விண்குளிரும் மேகத்தின் கதிரோவென்ன
பொன் கொழிக்கும் பெருநகரில் கோயில்கொண்ட
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

3) நீர்வளமும் மலர்வளமும் நிறைந்திருக்கும்
டென்கெல்டர் நகரினிலே நினது நாமம்
பெயர்கேட்டால் பசுக்களெல்லாம் பால் சொரிந்து
பெருகிவரும் இன்பமெங்கள் வாழ்வில்சேரும்
தேடியுனை காண தினம் ஓடிவரும் பக்தருக்கும்
கூடியுனைப் பாடித்தினம் துதிப்பவர்க்கும்
கோடிவரம் தருவதற்காய் கோவில் கொண்ட
ஸ்ரீவராதராஜ செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

4) பனிமழையின் குளிரினிலும் மலர்கள் பூர்க்கும்
பாடும் இனம் குளிரினிலும் சுருதிசேர்க்கும்
நல்ல இசை வலம் புரியாய் ஞானம் பூத்து
நளின மலர்க்கரங்களினால் மாலை கோத்து
கணங்கள் எல்லாம் சூழவந்து துதிக்கும் உன்னை
குணம் பொழியும் பக்தர்களின் குறைகள் தீர்க்க
பழமைமிகு டென்கெல்டர் மாநகர் வாழ்
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

5) கடல் சூழ்ந்த டென்கெல்டர் மாநகரில்
இடர் தீர்த்து புகழ் சேர்க்கும் வரமும் தந்து
பாலுடன் தெளிதேனும் பாகுடன் பருப்பினையும்
நன்றாக கலந்து தினம் நாவினிக்கத் தின்றதனால்
பேழை வறிறு கொண்ட பிரணவ வடிவினனே
பிழைபொறுத்து நடப்பவரே பிள்ளைவரம் தருபவரே
வடிவழகு கொண்டவரே வல்லவையின் நாயகனே
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

6) பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமன் தனை
பரிவுடனே மருமகனாய் ஏற்கக் கண்டு
பாரத மா கதையினை இவ்வுலகிற்கீய
ஏகதந்த நாயகனாய் காட்சிதந்தாய்
பரம்பொருளின் பெரும்பொருளே பார்வதியின் புத்திரனே
பக்தர்களிற்கருள் புரிவதற்காய்
பழமை நிறை டென்கெல்டர் நகரில் வாழும்
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

7) தெய்வத்தின் திருப்பொருளே செந்தமிழின் அருட்கனியே
தேவர் மூவர் துதித்துநின்ற நாயகனே
அப்பமும் முப்பழமும் அமுதும் பொரிகடலையும்
அருங்கதலியுடன் அறுகம் புல்லையும்
தொப்பைவயிறு முட்ட தெவிட்டாமல் உண்பவரே
அப்பனுக்கு முந்திவரும் வரமும் பெற்றவனே
ஒப்பாரும் மிக்காரும் இப்பாரில் இல்லாத
ஸ்ரீவரதராஜ செல்ல விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

8) ஆனைமுகம் கொண்டவரே ஔவைக்கருள் புரிந்தவரே
அம்பிகையின் பாலகனே அருட்கொழுந்தே
அன்னையுடன் தந்தையும் இணைவதுதான் உலகமென
அன்றெமக்கு உணர்த்திவிட்டுப் பக்குவமாய்
ஞானக் கனிபெற்ற மோன எழில் திருவுருவே
வானத்தவரும் வந்து தினம் போற்றுகின்ற
காணக் கிடைக்காத ஜோதிப் பேரொளியே
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

9) பார் புகழும் உத்தமனே பரமன் மைந்தா
பங்குனிஉத்தர நாள்தனில் இங்கு
மங்கள வாத்தியங்கள் சிறப்பாய் இசைக்க
பொங்கு தமிழ் ஒல்லாந்தில் ஒலித்துநிற்க
கார் மேகம் சூழ்ந்த இக்கடலின் தாழ்நாட்டினிலே
ஊர் சூழ்ந்து உனைத் துதிக்க
மணவாழ நாயகனாய் வீற்றிருக்கும்
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

10) முப்பொருளின் உட்பொருளே ஆடீர் ஊஞ்சல்
மூஷிக வாகனனே ஆடீர் ஊஞ்சல்
சக்தி சிவன் மைந்தனே ஆடீர் ஊஞ்சல்
சித்தி புத்தி நாதனே ஆடீர் ஊஞ்சல்
வேழ முகம் கொண்டவரே ஆடீர் ஊஞ்சல்
விக்கினங்கள் தீர்த்துவைத்து ஆடீர் ஊஞ்சல்
வரம் தந்து குறைதீர்க்கும் வள்ளலே ஆடீர் ஊஞ்சல்
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

## வாழ்த்து

அணி நான்கு வேதமுடன் அறங்கள் வாழி
அமைந்த இதிகாச புராணங்கள் வாழி
பிணியறுக்கும் அங்குசபாசம் வாழி
பழமைமிகு சைவமுடன் வேதியரும் வாழி
அணங்கயர்ந்து மகிழ்ந்துநிற்கும் அடியார் வாழி
குணம் கடந்துநிற்கும் பெரும்பொருளே வாழி
பார்புகழும் திரு நகராம் டென்கெல்டர் வாழி
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகர் திருத்தாழ் வாழி.

## மங்களம்

கஜானன கணபதிக்கு மங்களம் மங்களம்
மகிசாசுர மர்த்தனிக்கு மங்களம் மங்களம்
எல்லோரையும் வாழவைக்கும் ஈஸ்வரர்க்கு மங்களம் மங்களம்
ஏறுமயில் ஏறிவரும் வேலவர்க்கு மங்களம் மங்களம்
தசவதார புருவருக்கு மங்களம் மங்களம்
வலம்புரி வைரவர்க்கும் மங்களம் மங்களம்
கும்போதர சண்டேஸ்வரர்க்கும் மங்களம் மங்களம்
வேதமுடன் வேதியர்க்கும் மங்களம் மங்களம்
கூடிநின்ற பக்தர்க்கெல்லாம் கோடி கோடி மங்களம்
குறை தீர்த்து நலம் காக்கும் கணபதிக்கு மங்களம்
மங்களம் சுபமங்களம் மங்களம் ஜெயமங்களம்.

## ஆடி அமாவாசை விரதமும் அதன் சிறப்பும்

ஜோதிட சாஸ்திரத்தில் அயனம், பருவம், மாதம் பட்சம், வாரம், நாள், நட்சத்திரம், திதி என பல அமசங்கள் உள்ளன. இவை ஒன்றோடு ஒன்று சேர்ந்து வரும் போதோ, தனித்து வரும்போதோ ஒவ்வொரு விரதங்கள், பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. அயனம் என்பது வருடத்தின் இரண்டு பகுதிகள். அதாவது, சூரியனின் பயணத்தை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்ட கால அளவு. தை மாதம் முதல் ஆனி மாதம் வரை உள்ள காலம் உத்தராயணம். சூரியன் உதிப்பது கிழக்குப் பகுதி என்றாலும், சற்று வடக்குப் பக்கம் நகர்ந்த நிலையில் சூர்யோதயம் நடக்கும். ஆடி மாதம் முதல் மார்கழி வரை உள்ள காலம் தட்சிணாயனம். அதாவது சூரியன் தெற்கு நோக்கி நகரத் தொடங்கும் காலம். இது ஆடி மாதத்தில் தொடங்குகிறது.

வான சாஸ்திர, ஜோதிட சாஸ்திர அடிப்படையில் சூரியன், சந்திரன் ஒரே ராசியில் இணைவதே அமாவாசை. ஒவ்வொரு தமிழ் மாதமும் சூரியன் ஒவ்வொரு ராசியில் இருப்பார். அந்த சுழற்சி முறைப்படி ஆடி மாதம் கடக ராசியில் இருப்பார். அந்த நேரத்தில் தினக்கோளான சந்திரன் கடக ராசியில் சூரியனுடன் சேரும் நாளே ஆடி அமாவாசை.

ஜோதிட சாஸ்திரத்தில் பல திதிகள் இருந்தாலும், சஷ்டி, அஷ்டமி, நவமி, ஏகாதசி, பவுர்ணமி, அமாவாசை போன்ற திதிகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக கூறப்படுகிறது. மிகவும் முக்கியத்துவம், சிறப்பம்சம் நிறைந்ததாகக் கூறப்படும் திதி அமாவாசை. முன்னோர் வழிபாட்டுக்கு மிகவும் ஏற்றது அமாவாசை திதியாகும். ஆண்டுக்கொரு முறை அவர்களது திதி நாளில் திவசம், சிரார்த்தம் செய்தாலும் மாதந்தோறும் அமாவாசையன்று நீர் நிலைகளில் நீராடி தர்ப்பணம் செய்வது புண்ணிய காரியமாக சொல்லப்பட்டுள்ளது. அதிலும் ஆடி அமாவாசை மிகவும் விசேஷமாகும்.

சூரியன் பிதுர்க்காரகன், சந்திரன் மாதுர்க்காரகன். இவர்களை சிவசக்தி சொரூபமாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த இரண்டு கிரகங்கள் சேரும் புனிதமான ஆடி அமாவாசையன்று, முன்னோரையும் மறைந்த தாய் தந்தையரையும் நினைத்து திதி கொடுப்பது, புண்ணிய நதிகள், கடல் போன்ற இடங்களில் புனித நீராடி இஷ்டதெய்வ ஆலயங்களில் வழிபாடு, சிறப்பு பூசைகள் செய்வது, ஏழைகள், இல்லாதோர், இயலாதோருக்கு அன்னதானம், வஸ்திரதானம் செய்வது நாம் செய்த பாவங்கள், கர்மவினைகள், தீவினைகள் அனைத்தையும் போக்கி வாழ்வில் புண்ணியத்தை சேர்க்கும் என்பது நம்பிக்கை. இத்தகைய வழிபாடுகளால் முன்னோர் செய்த பாவவினைகள் நீங்கி அவர்களுக்கு முக்தி கிட்டும். அவர்களது பரிபூரண ஆசீர்வாதம் குடும்பத்தினர் அனைவருக்கும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

இறந்த தாய், தந்தைக்கு அவர்களது திதி நாளில் அவர்களை நினைத்து வணங்கி சிரார்த்தம் செய்வது மகனின் முக்கிய கடமையாகக் கூறப்படுகிறது. தாய், தந்தை இறந்த தேதி, திதி ஆகியவற்றை மறந்தவர்கள் தவறவிட்டவர்கள் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் ஆடி அமாவாசையன்று திதி கொடுக்கலாம். இறந்தவர்களை நினைத்து அன்றைய தினம் வீட்டில் அவர்களது படத்துக்கு மாலை போட்டு, அவர்களுக்கு பிடித்தமான உணவு வகைகளை தலைவாழை இலையில் படைத்து அவர்களை வணங்க வேண்டும். முதலில் காகத்துக்கு உணவிட்டு பின்பு விரதம் முடிக்க கர்ம வினைகள் நீங்கும் என்பது நம்பிக்கை.

சாதாரணமான அமாவாசையானது அனுஷம், விசாகம், சுவாதி நட்சத்திரங்களில் வருமானால் அப்போது செய்கிற சிரார்த்தம் ஒரு வருடத்திற்குரிய திருப்தியை உண்டாக்குகிறது. திருவாதிரை, புனர்பூசம், பூசம் நட்சத்திரங்களில் வரும்

அமாவாசையன்று செய்யப்படும் பிதுர் தர்ப்பணம் பன்னிரண்டு ஆண்டுகள் பிதுர் திருப்தி ஏற்படுத்தும். அவிட்டம், சதயம், பூரட்டாதி நட்சத்திரங்களில் வரும் அமாவாசையன்று செய்யப்படும் பித்ரு பூஜையானது, பித்ருக்களுக்கு தேவர்களுக்கும் கிடைக்காத புண்ணிய காலத்தைத் தரும்.

மாசி மாதத்து அமாவாசையானது சதய நட்சத்திரத்தன்று வருமானால், அது பித்ருக்களுக்கு மிகவும் திருப்தியை அளிக்கக்கூடிய காலமாகும். மாசி மாதம் அமாவாசை அவிட்டம் நட்சத்திரம் வரும் நாளில் பித்ருக்களை நினைத்து அன்னம் அல்லது தண்ணீர் தானம் செய்தால் பதினாயிரம் ஆண்டுகள் பிதுர்களைத் திருப்தி செய்த பலன் கிடைக்கும்.

ஆடி அமாவாசையன்று பல கோயில்களில் சிறப்பு பூஜைகள், வழிபாடுகள் நடக்கின்றன. குறிப்பாக கிராமங்களில் சக்தி, அம்மன், கிராம தேவதைகள், ஐயனார், முனீஸ்வரர் போன்ற இன்னும் பல காவல் தெய்வங்களுக்கு படையலிட்டு, பலி கொடுத்து பூஜைகள் இன்றளவும் விமரிசையாக நடக்கின்றன. அமாவாசை நடுநிசி பூஜைகளும் சில இடங்களில் விசேஷமாக நடத்தப்படுகின்றன. அதேபோல் திருஷ்டி, தோஷம் கழிப்பு போன்ற மந்திர தந்திர சடங்குகளையும் அமாவாசையில்தான் செய்வார்கள், தொடங்குவார்கள்.

“அமாவாசை என்பது நிறைந்த நாள்” என்று சொல்லி நல்ல காரியங்களை ஆரம்பிக்கும் வழக்கம் சமீபகாலமாக உள்ளது. சாஸ்திரத்தில் இதற்கான ஆதாரம், சான்றுகள் இல்லை. அமாவாசை என்பது இருட்டு நாள். நீத்தார் நாள் என்றே பல நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதோஷ கால பூஜையில் திரயோதசி திதி முதல் பிரதமை திதி வரை எந்த புதுக் காரியமும் தொடங்கக் கூடாது என பிரதோஷ வழிபாடு வலியுறுத்துகிறது. ஆகையால் அமாவாசையை நீத்தார் நினைவு கூர்வதற்கு மட்டுமே பயன்படுத்துவது நலம் தரும். ஆடி அமாவாசையன்று முன்னோரை நினைத்து வழிபடுவோம். அவர்களது ஆசியையும், இறைவனின் அருளையும் பெறுவோம்.

## இறைவனை வழிபடுவதற்கான வழிமுறைகள் யாவை?

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குமே இறைவனை வழிபடுவதற்கான நெறிகள் ஆகும்.இவற்றுள் சரியை என்பது, உடலால் வழிபடுவது. அ·தாவது திருக்கோயிலை வலம் வருவது, திருக்கோயிலுக்குப் பூ மாலைகொடுப்பது, திருக்கோயிலில் துப்புரவுப் பணி செய்வது முதலியன உடலால் வழிபடுவது ஆகும்.

கிரியை என்பது வாயினால் வழிபடுவது. அதாவது அஞ்செழுத்து மந்திரங்களை ஓதுவது, திருமுறைகளை நாள்தவறாமல் படனம் செய்வது, சாத்திர தோத்திரக் கருத்துக்களைப் பிறர்க்கு எடுத்துரைப்பது முதலியன வாயினால் செய்யும் வழிபாடு ஆகும்.

யோகம் என்பது மனத்தினால் வழிபடுவது. அதாவது வழிபடு தெய்வத்தின் வடிவத்தை மனத்தில் வைத்து தியானிப்பது. அந்தரியாக பூசை செய்வது, அஞ்செழுத்து மந்திரத்தை உள்ளத்தால் அக்குமாலை கொண்டு எண்ணுவது முதலியன மனத்தினால் செய்யும் வழிபாடு ஆகும்.இம்மூவகை வழிபாடுகளையும் தவறாமல் செய்து வந்தல், இறைவன் நமக்கு ஞானத்தை உணர்த்துவான். அவ்வாறு உணர்த்தும்போது, சீவன்முத்தர்களை அதிட்டித்து நின்றோ, குருநாதனாக வந்தோ, மானுடச் சட்டை போத்தியோ வந்து உணர்த்துவான். எனவே, குருபீடத்தில் அமர்ந்துள்ள ஞானிகளை வழிபடுவது ஞானநெறியில் செய்யும் வழிபாடாகும்.

மனம், வாக்கு, காயங்களால் சிவபெருமானை வழிபட வேண்டும் என்பதற்காகவே இந்த மனிதப் பிறவி நமக்கு வழங்கப்பட்டது.

# வரலட்சுமி விரதம்

## மாங்கல்ய தோஷம் நீக்கும் மகாலட்சுமி பூஜை

முன்ஜென்ம கர்ம பாவ வினைகளால் உண்டாகும் தடைகள் தோஷங்கள், பிணிகள், கவலைகள் நீங்கி தெய்வத் திருவருள் பெறுவதற்கு வழிபாடுகள், விரதங்கள் பெரிதும் துணை நிற்கின்றன. ஆயுள், ஆரோக்கியம், புத்திர சம்பத்து, மாங்கல்ய பலம், சௌபாக்கிய யோகம் கிடைக்கவும், மன அமைதி, சந்தோஷம் ஏற்படவும் பல பூஜை புனஸ்காரங்கள் இருக்கின்றன. அந்த வகையில் செல்வத்திற்கு அதிபதியான ஸ்ரீமகாலட்சுமியின் அருள் வேண்டி செய்யும் விரத பூஜையே வரலட்சுமி பூஜை அல்லது வரலட்சுமி நோன்பாகும்.

"வேதம் படிப்பதால் கிடைக்கும் அத்தனை வளமும், நலனும், ஞானமும் விரதங்களால் கிடைக்கின்றன" என்று புராணங்கள் கூறுகின்றன. மகாலட்சுமியின் அவதார நாள் துவாதசி வெள்ளிக்கிழமை என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாளில் செய்யும் ஸ்வர்ணதன ஆகர்ஷண தேவி பூஜை மிகவும் சிறப்பானது, பிரசித்தி பெற்றது. ஒவ்வொரு ஆண்டும் ஆடி அல்லது ஆவணி மாத பவுர்ணமிக்கு முன்பு வரும் வெள்ளிக்கிழமை வரலட்சுமி பூஜை நோன்பு நாளாகும்.

### லட்சுமி பூஜை பற்றிய புராண கதை

பத்ரச்ரவஸ் என்ற மன்னன் விஷ்ணு பக்தன். அவனுடைய மனைவி சுரசந்திரிகா. மகள் சியாமபாலா. மகளை சக்கரவர்த்தியான மாலாதரன் என்பவருக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். காலங்கள் கடந்தன. ஒருநாள் வயது முதிர்ந்த ஒரு சுமங்கலி மூதாட்டி பத்ரச்ரவசின் அரன்மனைக்கு வந்தாள். மூதாட்டியின் வடிவெடுத்து வந்தது சாட்சாத் மகாலட்சுமி தேவி. வரலட்சுமி விரதத்தின் அருமை பெருமைகளைச் சொன்ன மூதாட்டி, அந்த விரதத்தைக் கடைப்பிடிக்குமாறு சுரசந்திரிகாவிடம் சொன்னாள். வந்திருப்பது மகாலட்சுமி தேவி என்பது அவளுக்கு தெரியவில்லை. பிச்சை கேட்க வந்த கிழவி உளறுவதாகக் கருதி, அவமானப்படுத்தி விரட்டினாள் சுரசந்திரிகா.

லட்சுமிதேவி ஒரு இடத்திற்கு வருவது சாமானிய காரியம் அல்ல. தேடி வந்தவளை விரட்டினால் அங்கு இருப்பாளா? அந்த இடத்தை விட்டு அகன்றாள் லட்சுமிதேவி. விளைவு...? மணிமகுடத்தையும் செல்வச் செழிப்பையும் இழந்தாள் சுரசந்திரிகா. இந்த இடத்தை காலிசெய்த மகாலட்சுமி நேராக அரசியின் மகள் சியாமபாலாவிடம் சென்றாள். வரலட்சுமி விரதத்தின் பலன்கள் பற்றி அவளிடமும் சொன்னாள். சியாமபாலா பக்தி சிரத்தையுடன் அதைக் கேட்டாள். பயபக்தியுடன் வரலட்சுமி நோன்பு மேற்கொண்டு பூஜை செய்து வழிபட்டாள். விரத மகிமையால் அவளிடம் மலை போல் செல்வம் குவியத் தொடங்கியது.

பெற்றோர் வறுமை நிலையில் இருப்பதை சியாமபாலா அறிந்தாள். ஒரு செப்பு பானை நிறைய தங்கத்தை நிரப்பி அவர்களுக்கு அனுப்பி வைத்தாள். அவள் அனுப்பி வைத்தாலும், அதை அனுபவிப்பதற்கு யோகம் இருக்க வேண்டும். அவர்களைச் சூழ்ந்த தரித்திரம், அவயோகம் அந்த வாய்ப்பை தடுத்து விட்டது.

அவர்களிடம் வந்ததுமே, ஒரு பானைத் தங்கமும் கரியாக மாறிவிட்டது. இதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தாள் சியாமபாலா. வீடு தேடி வந்த லட்சுமி தேவியை அவமானப்படுத்தி அனுப்பியதாலேயே அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொண்டாள். வரலட்சுமி விரதத்தின் மகிமைகளை தாய்க்கு எடுத்துச் சொன்னாள். தாங்கள் செய்த தவறுகளை மன்னித்து அகம்பாவத்தைப் போக்குமாறு மகாலட்சுமியை மனமுருக வேண்டினாள் சுரசந்திரிகா. வரலட்சுமி விரதம் மேற்கொண்டு, பூஜை, வழிபாடு செய்து பிரார்த்தனை செய்தாள். இழந்த செல்வங்களை மட்டுமன்றி, ஆட்சி, அதிகாரமும் அவர்களை வந்தடைந்ததாக புராணங்கள் கூறுகின்றன.

#### எப்படி பூஜை செய்வது ?

ஒரு மனையில் கோலம் போட்டு லட்சுமி அல்லது அஷ்டலட்சுமி படம் வைத்து மலர்மாலை, கதம்பப் பூக்களால் அலங்கரிக்கவும். சில வீடுகளில் தங்கம் அல்லது வெள்ளியில் வரலட்சுமி உருவம் வைத்திருப்பார்கள். கலசத்தின் மீது இதை வைத்து பூஜை செய்வார்கள். அவ்வாறு வைத்திருந்தால், கலசம் வைத்து அதன் மேல் தேங்காய் வைத்து பட்டுத்துணி, பூக்கள் கொண்டு

அலங்கரிக்க வேண்டும். கலசத்தின் உள்ளே நீர் விட்டு ஏலக்காய் பச்சைக் கற்பூரம், வாசனாதி திரவியங்களை சேர்க்க வேண்டும். அல்லது கலசத்தில் அரிசி, பருப்பு நிரப்பியும் செய்யலாம். அந்த தேங்காயில் லட்சுமி உருவத்தைப் பொருத்தி, அவரவர் குடும்ப வழக்கப்படி பூஜை செய்யலாம். வசதிக்கேற்ப அப்பம், வடை, பொங்கல், கேசரி வைத்து பூஜை செய்ய வேண்டும்.

அக்கம் பக்கம் இருக்கும் சுமங்கலிப் பெண்கள், குழந்தைகளை பூஜைக்கு அழைக்கலாம். அனைவரும் சேர்ந்து லட்சுமி அஷ்டோத்திரம், கனகதாரா ஸ்தோத்திரம், சகலகலாவல்லி மாலை, லலிதா சகஸ்ரநாமம் போன்றவற்றைச் சொல்லி விரதம் முடிக்கலாம். தீபாராதனை முடிந்ததும், வந்திருக்கும் பெண்கள் அனைவருக்கும் நோன்பு கயிறு, முழுத் தேங்காய், பூ, பழம், குங்குமம் கொடுத்து உபசரித்து நைவேத்திய பிரசாதங்களை வழங்க வேண்டும். பக்தி சிரத்தையுடன் நோன்பிருந்து வரலட்சுமி பூஜையை செய்வதாலும், பங்கேற்பதாலும் ஆயுள், ஆரோக்கியம், மாங்கல்யபலம் கிட்டும். கன்னிப் பெண்களுக்கு திருமண பிராப்தம் கூடிவரும்.

குழந்தை பாக்கிய தடை நீங்கி சற்புத்திர யோகம் உண்டாகும். ஜாதகத்தில் சுக்கிர தோஷம், களத்திர தோஷம், மாங்கல்ய தோஷம் நீங்கும். கணவன் - மனைவி இடையே மன கசப்புகள், கருத்து வேறுபாடுகள் மறைந்து அன்யோன்யம் அதிகரிக்கும். பிரிந்திருக்கும் தம்பதிகள் ஒன்று சேர்வார்கள். இந்த நன்நாளில் வீடுகளுக்கு அருகில் இருக்கும் அம்மன், அம்பாள், ஆண்டாள் கோயில்களுக்கு சென்று நெய்தீபம் ஏற்றி வணங்கி, பக்தர்களுக்கு தயிர்சாதம், சர்க்கரை பொங்கல் பிரசாதம் கொடுக்கலாம். பக்தி, ஸ்லோக புத்தகங்கள் வாங்கி கொடுக்கலாம். இல்லாதோர், இயலாதோருக்கு ஆடை போர்வைகள் தானம் செய்ய, புண்ணிய பலன்கள் அதிகரிக்கும். வரலட்சுமி விரதமிருந்து மகாலட்சுமியை வழிபட்டு அவள் அருளால் சகல ஐஸ்வர்யங்களும் பெறுவோம்.

புண்ணிய தலங்கள் என்பன எவை?

புண்ணிய ஸ்தலங்களாவன மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் வ்ருக்ஷம் புராணம் போன்றவற்றால் சிறப்புற்ற சிவஸ்தலங்கள் ஆவன.

# கிருஷ்ண ஜெயந்தி

## துன்பங்களைக் களையும் கிருஷ்ணர் மகிமை.

மகா விஷ்ணுவின் எட்டாவது அவதாரம் கிருஷ்ணாவதாரம். இறை நிலை, எளிதாக எட்டக்கூடியது. பிறவிப்பயன் தெரியாமல், இறைநிலையை உணர முடியாமல், உழன்று கொண்டிருக்கும் மனிதர்களின் எண்ணங்கள், கிருஷ்ணரைப் பின்பற்றினால் மாறும். அவர் தீராத விளையாட்டுப்பிள்ளை மட்டுமல்ல….. வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் ஆனந்தத்துடன் ரசித்தவர். மகிழ்ச்சி வெளியில் இல்லை. மனதில்தான் இருக்கிறது என்பதை உலகிற்கு உணர்த்தியவர். கிருஷ்ண ஜெயந்தி கோலாகலமாகக் கொண்டாடுவதன் நேக்கமே இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

### கிருஷ்ணர் கதை

மதுராபுரி மன்னன் கம்சன், தந்தையைச் சிறையில் இட்டு, முடிசூடிக் கொண்ட அரசன். அவனது சகோதரி தேவகி, வாசுதேவரை மணந்தாள். கம்சனின் அழிவு, தேவகியின் எட்டாவது மகனால் நிகழும் என்றது அசரீரியின் குரல். சகோதரி என்றும் பாராமல், தேவகியையும், வாசுதேவரையும் சிறையில் அடைத்து கம்சன் கொடுமைகள் செய்தான். தேவகிக்குப் பிறந்த ஏழு குழந்தைகளைப் பிறந்தபோதே கொன்ற கம்சன், 8வது குழந்தையைக் கொல்வதற்காக காத்திருந்தான். அன்று கொட்டிய மழை, நள்ளிரவு ஊரே உறங்கியபோது, தேவகிக்கு கண்ணன் பிறந்தான். (ஆவணி மாதம் அஷ்டமி திதி ரோகிணி நட்சத்திரம்). சிறைக்காவலர்கள் அசந்து உறங்கிக்கொண்டிருந்தனர். வாசுதேவரைப் பிணைத்திருந்த சங்கிலிகள் அறுந்தன.

கம்சன் ஒன்று நினைக்க, இறைவன் நினைத்ததோ வேறு. கண்ணன் பிறந்த நேரத்தில் சிறைக் காவலர்களோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். சங்கிலியால் கட்டுண்ட வசுதேவரின் சங்கிலிகள் அறுந்து விழுந்தன. வசுதேவர் குழந்தையைக் கூடையில் பத்திரப்படுத்திக் கொண்டு கிளம்ப, சிறைக்கதவுகள் தானாகத் திறந்தன. கோகுலம் செல்வதற்காக யமுனை நதிக்கரையை அடைந்தபோது, கரை புரண்டோடியது வெள்ளம். இறைவனை வசுதேவர் மகமுருகி வேண்ட, வெள்ளம் இவருக்கு வழி விடுகிறது. வசுதேவர் நடக்கத் தொடங்க, அவர் தலையில் அவர் வைத்திருந்த குழந்தையை வாசுகி (பாம்பு) குடை போல பிடித்து பாதுகாக்கிறது.

கோகுலத்தில் வசுதேவரின் நண்பர் நந்த கோபன் அரசனாக இருந்து வந்தார். நந்தனின் வீட்டுக்கு வசுதேவர் சென்ற போது, நந்தனின் மனைவி யசோதா அப்போதுதான் பிறந்திருந்த தனது பெண் குழந்தை அருகில் இருக்க, தானும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள். ஆண் குழந்தையைத் தாய் யசோதை அருகில் விட்டுவிட்டு பெண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்த வழியே திரும்பி, வசுதேவர் மதுராபுரி வந்து சேர்ந்தார். அப்போதும் காவலாளிகள் விழிக்கவில்லை. பழையபடி வசுதேவரை, விலங்குகள் பூட்டிக் கொண்டன. அப்போதுதான் காவலர்களின் உறக்கம் கலைகிறது.

தேவகிக்கு எட்டாவது குழந்தை பிறந்த செய்தியைக் கம்சனிடம் காவலர்கள் கூறினர். கம்சன் பெண் குழந்தை என்றும் பாராமல் கொல்லத் துடித்தான். தேவகி கதறினாள். இரக்கம் இல்லாத கம்சனோ குழந்தையின் கால்களைக் கையால் பிடித்து சுழற்ற, குழந்தையோ கைகளில் இருந்து கழன்று வானத்தில் பறந்து சென்றது. "கம்சனே….. உன்னைக் கொல்ல அவதரித்த குழந்தை கோகுலத்தில் வளர்கிறது" என்று அசரீரி ஒலிக்கிறது. கோகுலத்தில் பிறந்த குழந்தை எதுவும் உயிரோடு இருக்கக் கூடாது என்று அரக்கி பூதகியிடம் கர்ஜிக்கிறான் கம்சன். ஆனால், இறைவனைக் கொல்ல முடியுமா?. கோகுலத்துக்கு வந்து தேவகியின் குழந்தையை வாங்கி கொஞ்சுவது போல நடித்த பூதகி இறந்துபோகிறாள். இது ஒன்றுமே தெரியாததுபோல், கண்ணன் (கிருஷ்ணன்) சிரித்து விளையாடிக்கொண்டிருந்தான்.

### கிருஷ்ண ஜெயந்தி ஏன்?

யசோதையிடம் கிருஷ்ணன் வளர்ந்தான். பால்ய லீலைகளை கோகுலத்தில் நிகழ்த்திக் காட்டினான். கோகுலத்துப் பெண்கள் அவனிடம் அன்பு கொண்டனர். அவனது விளையாட்டுத்தனம் பலரையும் கோபப்பட வைத்தாலும், அவனது மலர்ந்த முகத்தைக் கண்டதும் கோபம் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறது. கிருஷ்ணர் வளர்ந்து பெரியவனாகி கம்சனை வதம் செய்து, பாட்டன் உக்கிரசேனனை சிறையிலிருந்து விடுவித்து அரசனாக்கி விட்டு, பெற்றோர்களான வசுதேவர், தேவகியிடமும், தன்னை வளர்த்த நந்தன், யசோதையிடமும் அன்புடன் இருந்தான்.

உலகத்தைப் பிடித்திருந்த துன்பங்கள் விலகி, கண்ணனால் ஒளிபெற்றது. அந்தக் குழந்தை பிறந்த நாள் ஜென்மாஷ்டமி. கோகுலாஷ்டமி, கிருஷ்ண ஜெயந்தி, தீமையை அழித்து ஒளியூட்டிய நல்ல நாள். எண்ணங்களே காட்சியாகிறது. இந்திரன் கோகுலத்தை அழிக்க பெரும் மழையை உண்டாக்கிய போது கோவர்த்தன மலையை குடையாகப் பிடித்து அவர்களை கிருஷ்ணர் காப்பாற்றினார். யமுனை நதிக்கரையில் காலிங்கன் என்ற பாம்பையும் அடக்கினார். இளவயதில் பிருந்தாவனத்தில் இருந்த பெண்களின் மனத்தில் இடம் பிடித்தார். இவர்களில் ஒருவரான ராதையுடன் காதல் புரிந்தார்.

தனது அத்தை மகன்களான பாண்டவர்களுடன், குறிப்பாக அர்ஜுனனுடன் நட்பு கொண்டார். பின்னர், துவாரகைக்கு மதுராபுரி மக்களுடன் குடிபெயர்ந்தார். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையே நடந்த போரில் தனது சேனையை கௌரவர்களிடம் கொடுத்து விட்டு, தான் ஆயுதம் ஏந்தாமல் அர்ஜுனனின் தேரோட்டியாக கிருஷ்ணர் பணிபுரிந்தார். இந்தப் போர் தொடங்கும் முன் இவர் அர்ஜுனனிடம் மேற்கொண்ட உரையாடலே பகவத்கீதை ஆனது. இதுவே இந்துக்களின் புனித நூலாக உள்ளது. நாம் எதை எண்ணுகிறோமோ அதுவாகவே காட்சி தருபவரே கிருஷ்ணர். பீஷ்மர் அம்புப் படுக்கையில் கிடந்த போது அவருக்கு கிருஷ்ணர் காட்சியளித்தார். முழு ஆயுதபாணியாகக் காட்சி தருகிறார். பீஷ்மர் ஒரு போர்வீரர். அவருக்கு போர்வீரராகவே காட்சியளிக்கிறார்.

### களைகட்டும் கொண்டாட்டங்கள்

கிருஷ்ண ஜெயந்தி நாளில் கிரஷ்ணருக்குப் பிடித்த உணவுப் பொருட்களை படைத்தும், கிருஷ்ணரின் சிலைகளை நன்றாக அலங்கரித்தும் கிருஷ்ணரை தங்கள் இல்லங்களுக்கு வரவழைக்கும் விதமாக, குழந்தையின் கால் பாதங்களை வரைந்தும் இந்துக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். தின்பண்டங்களுடன் தயிர் சேர்த்தும், பாலையும் வெண்ணெய்யையும் கலந்தும் பக்தர்கள் "தஹிகலா" என்ற உணவு தயாரிப்பதுண்டு. கிருஷ்ணர் மாடு மேய்க்கும் போது, கோபியர்கள் கொண்டுவரும் சாதங்களையும் கலந்து உண்பார். அதை இன்னும் பின்பற்றும் விதமாக, தஹிகலா தயாரிப்பது, வெண்ணெய் தாழியை உடைப்பது வழக்கத்தில் உள்ளது. இதுவே உறியடி விழாவாக இன்றும் கொண்டாடப்படுகிறது.

### வெண்ணெய் நிவேதனம் ஏன்?

கிருஷ்ணருக்கு வெண்ணெய் நிவேதனம் செய்யப்படுகிறது. கொடுங்கோல் மன்னனான கம்சன் மக்களுக்கு அதிக வரி விதித்தான். வரியைக் கட்ட மக்கள் வெண்ணெய் விற்க வேண்டியதாயிற்று. கம்சனிடமிருந்து மக்களைக் காப்பாற்றவே கண்ணண் வெண்ணெய் தின்பதும் அதை வாரி இறைப்பதுமான செயல்களைச் செய்தான். எதிர்த்துப் போராடும் குணத்தையும், அநீதியைப் பொறுத்துக் கொள்ளலாகாது என்ற பாடத்தையும் கற்பித்தான். கிருஷ்ண ஜெயந்தி தினத்தில் மக்கள் சாப்பிடாமல் விரதம் இருந்து நள்ளிரவில் பூஜை முடிந்தவுடன் பிரசாதம் அல்லது மறுநாள் காலை தயிர், வெண்ணெய், பால் போன்றவற்றை உண்டு விரதத்தை முடிப்பது வழக்கம்.

தானங்கள் நான்கு வகைப்படும்:

1. பலனை எதிர்பாராமல் ஓர் உத்தம அந்தணர்க்கு செய்யும் தானம் "நித்திய தானம்" எனப்படும்.
2. தீமை நீங்க தவமாகக் கொடுக்கும் தானம் (ஒருவர்க்கு தகைமை அளிக்கிறது) நைமித்திக தானம் எனப்படும். (கல்வி ஒருவருக்கு தகைமை அளிக்கிறது)
3. புத்திர சந்தானம், வெற்றி, தனம் வேண்டிச் செய்வது "காம்ய தானம்"
4. பகவானை திருப்திப் படுத்துவதற்காகவே (நீங்கள் எது திருப்திப்படுத்தும் என்று கருதுகிறீர்களோ) கொடுக்கப்படும் தானம் "விமல தானம்" ஆகும்.

# புரட்டாதிச்சனி விரதம்

நம்முன்னோர்களின் செயல்படி இன்பதுன்பங்கள் பாரபட்சமின்றி எமக்களிப்பவள் ஆதிசக்தி. இதனை இவள் நேரடியாக அளிக்காமல் ஈர்ப்புச் சக்தி மூலம் மானிடர்களாகிய எங்களுக்கு அளிக்கிறாள். அவை சூரியன, சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என்கிற ஒன்பது கிரகங்களாகும்.

இந்த ஒன்பது கிரகங்களில் இயற்கையாகவும் அவரவர் ஜனன சாதக அமைப்பின்படி இன்ப துன்பங்கள் அளிப்பதற்காக ஏற்பட்ட கிரகம் தான் சனி பகவான். இவர் நவக்கிரகங்களில் மிகவும் சக்தி வாய்ந்தவர். தன் பார்வையினால் தனக்கென்று தனி ஆதிக்கம் பெற்றவர். மற்றைய கிரகங்களைவிட ஒவ்வொரு ராசியிலும் இரண்டரை ஆண்டுகள் சஞ்சாரம் செய்பவர்.

நன்மை அளிக்கும் விடயத்தில் தாராள மனப்பான்மை கொண்டவர். அதே சமயம் அவரவரின் கன்ம வினைப்படி தண்டிப்பதிலும் தலை சிறந்தவர். சனி பகவானின் தந்தை சூரியபகவான். தாய் சாயாதேவி. சனிபகவான் காசி சென்று தன் பெயரினால் ஒரு லிங்கத்தை நிறுவி பூசித்து வழிபாடு செய்தார் என்றும், அதன் பயனாக கிரக பதவியை அடைந்தார் என்றும் கூறப்படுகிறது. சனி பகவான் கால் வலது குறைந்தவர். நீல நிறமுடையவர். இவரின் வாகனம் காகம். இவர் மேற்கு நோக்கி வீற்றிருப்பார். முடிதரித்திருப்பார். சூலமும், வில்லும், வரதமும், அபயமும் கொண்ட நான்கு கரங்கள் உடையவர். கறுப்பு மலரையும் நீலநிற மாலையையும் அணிபவர். இவருக்கு விருப்பமான மலர் வன்னி. இவருடைய அர்ச்சனை மந்திரங்கள் இவருடைய சூரியன் முதலான கிரகங்களாகவும், கணபதி, முருகன், விஷ்ணு, சிவன் முதலிய தெய்வங்களாகவும் திருநாமங்களைக் கூறித் துதிக்கின்றார்கள். எள்ளுக்கலந்த உணவிலும் நல்லெண்ணை விளக்கிலும் மிக விருப்பமுடையவர்.

இவர் ஓர் கருணை வடிவான கருணைக்கடல், காருண்ய மூர்த்தி, பயமற்றவர், விரும்பியவைகளை அருள்வதில் காமதேனுவைப் போன்றவர். இவரைப்போல் கொடுப்பவருமில்லை, கெடுப்பவருமில்லை.

சிவபெருமானை நோக்கி கடும் தவம் இயற்றியதில் சனீஸ்வரனின் திறன் மிகவும் சக்தி வாய்ந்ததாக அமைந்தது. சிவனாலேயே ஈஸ்வரப்பட்டம் பெற்று ஸ்ரீசனீஸ்வரன் என அழைக்கப்படுகிறார். ஸ்ரீ சனிபகவானால் ஏற்படும் தோஷ நிவர்த்திகளுக்கு செய்யப்படும் பரிகாரங்களை மற்றத் தெய்வங்களுக்கு வழிபாடு செய்து போக்க நினைப்பது இயலாத காரியம்.

இராமபிரானின் தந்தை தசரதருக்கு பூவுலகத்தை ஆட்சி செய்தபொழுது மழை இன்மையால் பன்னிரண்டு ஆண்டுகள் உயிருள்ள பிராணிகள் அனைத்தும் பட்டினியால் மடிந்து விடும் என்றும் சர்வலோகங்களும் அழிந்துவிடும் என்றும், தேவர்கள், அசுரர்கள் அச்சத்தால் நடுங்கினர். தசரதர் சனி பகவானை பிராத்தனை செய்து, பூசை செய்து சனிபகவானின் நல்லருள் பெற்று கஷ்டங்கள் வராது நல்ல மழை பெய்து இன்னருள் பெற்றார். இதனால் சந்தோஷமடைந்த தசரதர் சனிபகவானைக் குறித்து துதிப்பாடல் ஒன்றைப் பாடினார். அதனில் மகிழ்ந்த சனிபகவான் மனம் மகிழ்ந்து இத்துதிப்பாடலை பாடித்துதிப்பவர்களுக்கு தன்னால் துன்பங்கள் வரமாட்டாது எனக் கூறி உள்ளார்.

"த்வியா க்ருதம் துயஸ் தோத்ரம்
ய! படேதி ஹ மாகவ ஏக வாரம்
த்வி வாராம் வரபீடாம் முஞ்சாமிதஸ்யவை"

இம்மந்திரம் தினந்தோறும் காலை மாலை இரண்டுமுறை தோத்தரித்தால் சனிபகவான் மூலம் வரக்கூடிய கஷ்டங்கள் யாவும் நீங்கும். எல்லா விதமான நன்மைகளையும் பெற்று சந்தோஷ வாழ்வு வாழலாம்.

இந்தியாவில் முக்கிய திருத்தலங்களான காசி விசாலாட்சி கோவிலும் தெற்கே இராமேஸ்வரம் சிவாலயத்திலும் சனிபகவான் உற்சவ மூர்த்தியாகத் திகழ்கிறார்.

ஏழரை நாட்டுச்சனி உள்ளவர்களுக்கும் கிரக நிவர்த்தி நீங்கவும் சனிபகவானின் திவ்ய அருட்கடாட்சம் பெறவும் அனைத்து கிரக தோஷங்கள் விலகவும் பலமூலிகைகளால் சனிபகவானுக்கு ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பூசித்தால் சனிபகவான் எல்லா நிவர்த்தியும் செய்து தருவார். தம்மை நம்பி வழிபடும் பக்தர்களைக் காத்தும் முறையிடுபவர்களின் தொல்லைகள் தீர்த்தும், தீராத பிணிகளையும் பிறரின் கோபசாபத்தால் ஏற்படும் பாப சாபங்களையும் நிவர்த்தி செய்யும் வல்லமை உடையவர்.

## புரட்டாதிச்சனி மகிமை

புரட்டாதிமாதம் சனிக்கிழமைகளில் சனிபகவானை நினைத்து விரதமிருந்து ஆலயங்களில் மாவிளக்கேற்றி (பெருமாள் கோயில் முக்கியம்) பெருமாளுக்கு பூசை செய்து அந்தணர்களுக்கு உணவளித்துப் புத்தாடைகள் தானம் செய்தால் சௌபாக்கியங்களுடன் பெருவாழ்வு வாழலாம். தங்கள் பெயர் நட்சத்திரம் சொல்லி அர்ச்சனை செய்து எள்ளெண்ணை விளக்கேற்றி வழிபடுதல் சிறப்பைத் தரும். புரட்டாதிச் சனிக்கிழமைகள் சனிபகவானைப் பூசிப்பதற்கு மிகவும் சிறப்பு மிக்கதும் சக்தி வாய்ந்ததுமான நாளாகும். என்று வேதம் கூறுகின்றது.

பாண்டவர்கள் வனவாசத்தில் இருந்த பொழுது புரட்டாதி மாதச் சனிக்கிழமைகளில் சனிபகவானைத் துதித்து விரதமிருந்து ஒவ்வொரு சனியும் நல்லெண்ணெய் தீபம் ஏற்றிப் பிராயச்சித்த பூசை செய்து வழிபட்டு மீண்டும் நாடு நகர் சென்று அரசாட்சி புரிந்து சந்தோஷ வாழ்வு வாழ்ந்தார்கள் என நூல்கள் கூறுகின்றன.

சனிதோஷமுடையவர்களாயினும் சரி சனிதோஷமில்லாதவர்களும் புரட்டாதி மாத சனிக்கிழமைகளில் விரதமிருந்து பூசித்து காகத்துக்கு அன்னமிட்டு வழிபாடு செய்தால் நிச்சயமாக சனிபகவான் நல்லருள் புரிந்து பொதுப்பேறுகளுடன் மங்களமாக வாழவைப்பார்.

சனித்தோஷத்தால் துன்பத்துக்குள்ளாகிய ஒருசில முக்கியஸ்தர்கள்

1. பாண்டவர்கள் நாடு நகர் இழந்து வனவாசம் சென்று பஞ்சாய் பறந்து சொல்லொனாத் துன்பமடைந்தார்கள்.
2. அரிச்சந்திர மகாராசன் நாடு நகர் இழந்து மனைவி மகனை விற்றுச் சுடலை காத்து மிகவும் துன்பத்துக்குள்ளானார்.
3. 1008 அண்டங்களையும் 108 யுகங்களையும் அரசாட்சி செய்வதற்கு வரம் பெற்ற சூரன் அழிந்தொழிந்தான்.
4. மண்டலத்தை ஆண்ட நளச்சக்கரவர்த்தி மனைவியுடன் கானகம் சென்று சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்தார்.
5. இலங்கை வேந்தன் இராவணன் பெண்ணாசையால் இராமபிரானால் அழிந்தான்.
6. சந்திரன் காலை இழந்து தேய்பிறை ஆனான்.
7. சங்கரன் (சிவன்) ஓடேந்திப் பிச்சை எடுத்தான்.
8. திரௌபதையின் துகில் அரசசபையில் உரியப்பட்டது.
9. சீதை இராவணனின் சிறையில் வாடினாள்.
10. சிவனை விட்டு உமையவளைப் பிரிய வைத்தார்.
11. அப்பரைக் கருங்கல்லில் கட்டிக் கடலில் போடவைத்தார்.

இன்னும் எண்ணற்றவர்களை சனிதோஷம் படாத பல கஷ்ட துன்பங்களினால் பஞ்சாய்ப் பறக்க வைத்தது. விநாயகருக்கு மட்டும் சனிதோஷம் பிடிக்க இடமளிக்கவில்லை. சனிபகவான் எவ்வளவு முயற்சித்தும் பிள்ளையாரைத் தொட முடியவில்லை.

**கதை**

ஒருநாள் சனி பகவான் பிள்ளையாரிடம் வந்து இன்று உங்களைப் பிடிக்கப் போகிறேன் என்றார். அதற்குப் பிள்ளையார் அப்படியா? சரி இன்று எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது, நாளைக்கு வந்து பிடிக்கவும் என்றார். சனி பகவான் சரி நாளைக்கு வருகின்றேன் எனக்கூறிப் புறப்பட்டார். உடனே பிள்ளையார் அவரைக் கூப்பிட்டு நான் மறந்து விடுவேன். நாளைக்கு வருகிறேன் என்று தனது முதுகில் எழுதும் படி முதுகைக் காட்டி நின்றார். சனிபகவான் நாளைக்கு வருகிறேன் என்று பிள்ளையாரின் முதுகில் எழுதி விட்டுச் சென்றார்.

அடுத்தநாள் பிள்ளையாரைப் பிடிக்க பிள்ளையாரிடம் வந்தார். பிள்ளையார் முதுகைத் திருப்பிக் காட்டுவார். நாளை வா என இருக்கும் அவர் போய்விடுவார். இப்படிப் பலநாட்கள் கடந்தன. கடைசியில் சனி பகவான் ஏமாற்றம் அடைந்து பிள்ளையாரை சத்திய வாக்குக்கு மாறாகப் பிடிக்க முடியவில்லை. எனவே சனி பகவானின் தோஷத்துக்கு அகப்படாதவர் பிள்ளையார் ஒருவர் தான்.

நல்லது, கெட்டது, சுகம், துக்கம், தாழ்வு வறுமை போன்றவற்றை அழித்து பரிபாலிப்பது சனீஸ்வர மூர்த்தி எனலாம். சூரியன் கன்னி ராசியில் வரும் மாதமாகிய புரட்டாதியில் புரட்டாதிச்சனி விரதம் அமைகிறது.

பெரும்பாலான மக்கள் எல்லாம் வாழ்க்கையில் வளத்துடன் சந்தோஷமாக வாழ வேண்டுமென்பதற்காக புரட்டாதிச்சனி விரதம் நோற்று சனிபகவானுக்குரிய அர்ச்சனை பூசைகள் செய்வார்கள். சனி பகவானுடைய தண்டனைகள் இல்லாமல் அவனுடைய அருட்கடாட்சத்தைப் பெறுவார்கள்.

உலகில் சனி பகவானின் தண்டனைக்கு ஆளாகாதவர்கள் மிகக் குறைவு. எனவே தான் சனிபகவானின் வணக்கத்துக்கு என்று புரட்டாதி மாத சனிக்கிழமைகளில் ஆலயங்களில் விஷேட பூசைகள் நடைபெறும். சனிபகவானின் பார்வைக்கு சிறியவர்கள் பெரியவர்கள் என்ற பாகுபாடில்லை. தண்டனை கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுத்தே தீருவார்.

நிடத நாட்டு மன்னன் ஒரு நாள் தனது பாதங்களைக் கழுவும்போது புறங்கால் (குதிக்கால்) நனையவில்லை. அதனைச் சாட்டாக வைத்து நளனைப் பற்றிக் கொண்டார் சனிபகவான். நளமகாராசன் நாடிழந்து மனைவியுடன் கானகம் சென்ற பின் மனைவியையும் பிரிந்து சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்தான்.

எமது வினைப்பயனின்படி கிரகபலன்கள் நிகழ்கின்றன. கிரகங்களின் இயக்கத்துக்கு இறைவனே காரணம். கோளாறு பதிகம் பாடி இறைவனையும் சனிபகவானையும் வணங்கினால் எல்லாம் நல்லனவாக அமையும். சம்பந்தப் பெருமான் பாடியருளிய கோளாறு பதிகம் சனிபகவானின் பார்வையில் இருந்து விடுபடுவதற்கு ஒரு அருமருந்தாக அமைந்துள்ளது. சனிதோஷம் காரணமாக அல்லல்படுபவர்கள் ஒவ்வொரு நாளும் நம்பிக்கையோடு கோளாறு பதிகம் பாடி இறைவனை வணங்கினால் நிச்சயம் சனி பார்வையில் இருந்து விடுதலை பெறலாம். இது அருளாளர்களின் திருவாக்காகும்.

இறுதியாக இறைவனையே சனீஸ்வரன் பிடித்த கதை. நாரதர் சனீஸ்வரனிடம் நீ இந்த உலகத்தில் எல்லோரையும் ஆட்டி அலைக்கிறாய். எங்கே சிவனை ஆட்ட முடியுமா? என்று கூற சனீஸ்வரன் சிவனைப் பிடிக்கப் போனான். பெருமான் எல்லாம் அறிந்தவர். இறைவனல்லவா, இறைவன் தண்ணீர் தடாகத்தில் குளித்துக் கொண்டு நின்றார். சனி வருவதைக் கண்டு தண்ணீருக்குள் அடியில் சிலநிமிடங்கள் மறைந்து விட்டார்.

சனிபகவான் நாரதரிடம் கைகொட்டி, எங்கள் சிவனையே தண்ணீருக்குள் அமிழ்த்தினேனென்றால் என் திறமையை அறிந்தீர்களா? என்று சனி பகவான் கூறினார் என்பது கதை.

## நல்லன கேளீர்

அன்னை, பிதாவை, மதித்து நட
கண்கண்ட தெய்வம் அவர்களே
குருவைப் பின்பற்றிச் செயல்படு
உனது வழிகாட்டி அவரே
எறும்பு போல் சுறுசுறுப்பாயிரு
உனக்கு வேண்டியதைச் சேமித்து வை
தெய்வமொன்றுண்டு என்பதை நம்பு
நம்பிக்கை கொண்டு வழிபடு
எல்லாந் தெரியுமென்று நினையாதே
உனக்கு தெரியவேண்டியது சொல்லில் அடங்காது
பொருளையும் தேடு – அருளையும் தேடு
புண்ணியத்தைச் செய் - பாவத்தைச் செய்யாதே
சமயம் அறிந்து பேசு – சபையில் தெரிந்து பேசு
உன் வருத்தம் உனக்கே தெரியும்
நீ செய்த வினை உன்னையே சேரும்
உனக்காகவும் மற்றவர்களுக்காகவும் பிரார்த்தி
தெரிந்தவற்றைச் செய்து காட்டு
முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை
கவலையை மறக்க விநாயகர் கவசம் படி
வினையை வெல்ல விநாயகனைப் போற்று

ஓம் சக்தி

## நவக்கிரக 108 போற்றித் திருவுரு

### 1. சூரியன்

கோள்களை ஆளும் சூரிய தேவே
ஞாலத் துயிர்கள் நன்மை பெறவே
இருளை நீக்கி அருளைப் பொழிவாய்
வேள்வியில் நின்று வினைகள் தீர்ப்பாய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ஓங்கார | சூக்கும | உடலாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஓரா | ழித்தேர் | ஊர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஏழென் | குதிரை | ஏவினை | போற்றி | ஓம் |
| ஓம் | ஓர்முகம் | எண்கரம் | உடையாய் | போற்றி | ஓம் |
| ஓம் | இருந்தோட் | கமலம் | ஏந்தினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பொற்பட் | டுடையிற் | பொலிவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | வியாவி | ருதிஏழ் | விளங்குவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பன்னிரு | முனிதுதிப் | பாற்கரா | போற்றி | ஓம் |
| ஓம் | மழைபனிப் | பருவம் | மாற்றுவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | மூல | நெருப்பில் | முகிழ்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | வீதிமுன் | னிராசிபன் | னிரண்டாய் | போற்றி | ஓம் |
| ஓம் | சூரியா | வீரியா | சுகமருள் | போறிறி | ஓம் |

### 2. சந்திரன்

சிவனின் கண்ணே சந்திர தேவா
அமுதம் பொழிந்து செழுமை தருவாய்
துன்பம் நீக்கி இன்பம் கூட்டி
யாகம் நின்று யோகம் அருள்வாய்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | சங்கரன் | முடிதவழ் | சந்திரா | போற்றி | ஓம் |
| ஓம் | திருமகள் | சோதரா | திவ்யா | போற்றி | ஓம் |
| ஓம் | சவுக்க | வடிவில் | இருந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | முத்து | விமான | வாகனா | போற்றி | ஓம் |
| ஓம் | சக்கரம் | மூன்றுடைத் | தேராய் | போற்றி | ஓம் |
| ஓம் | குருந்த | மலர்நிறக் | குதிரையாய் | போற்றி | ஓம் |
| ஓம் | கலைவளர் | மதியே | கருணையே | போற்றி | ஓம் |
| ஓம் | தேவர் | பிழிந்துணும் | அமுதே | போற்றி | ஓம் |
| ஓம் | சக்தியை | கடுக்கொள் | மண்டலா | போற்றி | ஓம் |
| ஓம் | வஞ்சம் | மோகினிக் | குரைத்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | நிலப்பயிர் | தழைக்கும் | நிலவே | போற்றி | ஓம் |
| ஓம் | இருகண் | பார்வைச் | சுகமருள் | போற்றி | ஓம் |

## 3. செவ்வாய்

செம்மை அருள்வாய் செவ்வாய்த் தேவே
நன்மை தருவாய் ஞாலம் வாழ
புன்மை போக்கி புவியோர்க் கின்பம்
வேள்வியில் நின்று விரைவே தாதா.

| | | | | |
|---|---|---|---|---|
| ஓம் | பூதேவி | குமரா | பௌமா | போற்றி ஓம் |
| ஓம் | செந்நிறஉருவாய் | செவ்வாய் | | போற்றி ஓம் |
| ஓம் | அன்ன | வாகனம் | அமர்ந்தாய் | போற்றி ஓம் |
| ஓம் | முக்கோ | ணவடிவ | இருக்கையாய் | போற்றி ஓம் |
| ஓம் | எண்பரித் | தேர்மிசை | இயல்வாய் | போற்றி ஓம் |
| ஓம் | தவத்தால் | உயர்பதம் | அடைந்தாய் | போற்றி ஓம் |
| ஓம் | தட்சன் | யாகம் | தடுத்தாய் | போற்றி ஓம் |
| ஓம் | யோக | நெருப்புடை | உடலாய் | போற்றி ஓம் |
| ஓம் | மங்களம் | தரும் | மங்களா | போற்றி ஓம் |
| ஓம் | அருங்கலை | வல்லாய் | ஆரல் | போற்றி ஓம் |
| ஓம் | வலிமை | ஊக்கம் | வழங்குவாய் | போற்றி ஓம் |
| ஓம் | அங்கா | ரகனே | அருள்வாய் | போற்றி ஓம் |

## 4. புதன்

அவிட்டம் பிறந்த புத பகவானே
தெவிட்டா வாழ்வும் தெய்வ அருளும்
போகம் செல்வம் பூமியில் அருள
யாகச் சுடரில் வேகம் வாவா.

| | | | | |
|---|---|---|---|---|
| ஓம் | புதனெனும் | தாரை | புத்திரா | போற்றி ஓம் |
| ஓம் | பசுமை | மேனி | கொண்டோய் | போற்றி ஓம் |
| ஓம் | அம்பின் | வடிவில் | அமர்ந்தாய் | போற்றி ஓம் |
| ஓம் | வெண்காந் | தள்மலர் | விரும்பினாய் | போற்றி ஓம் |
| ஓம் | குதிரை | வாகனங் | கொண்டோய் | போற்றி ஓம் |
| ஓம் | நால்பரித் | தேர்மிசை | அமர்ந்தாய் | போற்றி ஓம் |
| ஓம் | தவத்தால் | கோளென | உயர்ந்தாய் | போற்றி ஓம் |
| ஓம் | அசுவ | யாகம் | ஆற்றினாய் | போற்றி ஓம் |
| ஓம் | இளையை | மணந்த | எழிலே | போற்றி ஓம் |
| ஓம் | சிவனால் | சாபம் | நீங்கினாய் | போற்றி ஓம் |
| ஓம் | இருக்கு | வேதத் | திருத்தாய் | போற்றி ஓம் |
| ஓம் | ஞானமுங் | கல்வியும் | நல்குவாய் | போற்றி ஓம் |

## 5. வியாழன்

மனம்போல் வாழ வியாழ தேவா
தனமும் நலமும் வளமுந் தருவாய்
கோள்தரு கொடுமை தீர்த்தே நன்மை
வேள்வியில் வந்து விரைவுட னீவாய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | வானவர் | குருவே | வியாழா | போற்றி | ஓம் |
| ஓம் | பொன்னிற | மேனிப் | புத்தேள் | போற்றி | ஓம் |
| ஓம் | நீண்ட | சவுக்கம் | நின்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | களிற்று | வாகன | முடையாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பொற்பரித் | தேரில் | பொலிந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | சர்ப்ப | யாகம் | தடுத்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | இந்திரன் | ஆள | இயம்பினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | வச்சிரப் | படைவலி | தடுத்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | அசுரரைச் | சபிக்கச் | சூழ்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | சேர்ந்தார்க் | கின்பம் | சேர்ப்பாய் | போற்றி | ஓம் |
| ஓம் | கோள்தரு | தீமை | குறைப்பாய் | போற்றி | ஓம் |
| ஓம் | கோடிநன் | மைதரு | குருவே | போற்றி | ஓம் |

## 6. சுக்கிரன்

வெள்ளி ஒளிதரும் சுக்கிர தேவா
துள்ளும் இன்பம் துணிவும் தருவாய்
போகப் பொருளும் அருளும் திருவும்
யாகத் திருந்து பொலிவாய் நீயே.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | பிருகுபுத் | திரனே | சுக்கிரா | போற்றி | ஓம் |
| ஓம் | வெள்ளி | நிறத்தில் | விளங்குவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஐங்கோ | ணாசனம் | அமர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | வெண்டா | மரைமலர் | கொண்டோய் | போற்றி | ஓம் |
| ஓம் | கருடவா | கனத்தில் | ஒளிர்வாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பதின்பரித் | தேர்மிசை | வருவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | சிவனால் | ஒளிநிறம் | பெற்றோய் | போற்றி | ஓம் |
| ஓம் | கசனை | உயிர்த்த | கருணையே | போற்றி | ஓம் |
| ஓம் | தண்டன் | நாடு | காடாக்கினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | அசுரர் | தோற்கச் | சபித்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பகீர | தன்னிடர் | தீர்த்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | மிருகசஞ் | சீவினி | மந்திரா | போற்றி | ஓம் |

## 7. சனி

சகலரும் பற்றும் சனீஸ்வரனே
சட்டென விட்டுச் சாந்தி தருவாய்
நீள்பாக் கியமும் நின்மதி வாழ்வும்
வேள்விப் பயனாய் மீள்வித் தருள்வாய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | சூரிய | பாலா | சுபமருள் | போற்றி | ஓம் |
| ஓம் | அஞ்சன | வண்ணா | சனியே | போற்றி | ஓம் |
| ஓம் | வில் | வடிவாசனம் | விளங்கினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | காக்கை | வாகனக் | கடவுளே | போற்றி | ஓம் |
| ஓம் | கருங்கு | வளைமல | ருகந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | எள்ளும் | வன்னியும் | ஏற்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | மேற்றிசை | நின்ற | மேலோய் | போற்றி | ஓம் |
| ஓம் | நளனைச் | சோதித் | தாண்டாய் | போற்றி | ஓம் |
| ஓம் | தேவரும் | பார்வையில் | தீய்த்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | பற்றற் | றாரையும் | பற்றுவாய் | போற்றி | ஓம் |
| ஓம் | கலியென் | றொருபெய | ருடையாய் | பொற்றி | ஓம் |
| ஓம் | தொழுதேன் | சனியே | தொடாதே | போற்றி | ஓம் |

## 8. இராகு

கோளென உயர்ந்த இராகுக் கோவே
இருளை நீக்கி இன்னருள் புரிவாய்
பிடித்த நோவும் பின்பல் நஞ்சும்
யாகப் பயனால் போகச் செய்வாய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | சிம்மிகை | மைந்தா | இராகுவே | போற்றி | ஓம் |
| ஓம் | கொடிவடி | வமர்ந்த | கோளே | போற்றி | ஓம் |
| ஓம் | ஆட்டு | வாகனம் | அமர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | தென்மேற் | றிசையில் | திகழ்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | மந்தா | ரைமலர் | மகிழ்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | உழுந்தும் | அறுகும் | உகந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | கரும்பாம் | புருவம் | கண்டாய் | போற்றி | ஓம் |
| ஓம் | நாலிரு | குதிரைத் | தேராய் | போற்றி | ஓம் |
| ஓம் | தேவர் | அமுதம் | உண்டோய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஓருடல் | இருகோ | ளானாய் | போற்றி | ஓம் |
| ஓம் | தவம்மேம் | பட்ட | தலையே | போற்றி | ஓம் |
| ஓம் | இராஜபோ | கம்தரு | ராகுவே | போற்றி | ஓம் |

## ௯. கேது

கேட்டது கொடுக்கும் கேதுக் கோவே
ஊட்டும் நஞ்சும் நோயும் ஒழிப்பாய்
மீளாச் சொர்க்கம் ஞானம் கல்வி
வேள்விப் பயனாய் விரைந்தே தருவாய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ராகுவி | னுடலே | கேதுவே | போற்றி | ஓம் |
| ஓம் | சிவனால் | தலையுயிர் | பெற்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | செம்பாம் | புருவை | வேண்டினாய் | போற்றி | ஓம் |
| ஓம் | முச்சில் | வடிவில் | முகிழ்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | செவ்வல்லி | மலர் | சேர்த்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | கொள்ளும் | தர்ப்பரையுங் | கொண்டாய் | போற்றி | ஓம் |
| ஓம் | அரிவா | கனத்தில் | அமர்ந்தாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஆறு | குதிரைத் | தேராய் | போற்றி | ஓம் |
| ஓம் | வடமேற் | றிசையில் | நின்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | நீதி | நெறிசேர் | கேதுவே | போற்றி | ஓம் |
| ஓம் | தவத்தால் | கோள்நிலை | பெற்றாய் | போற்றி | ஓம் |
| ஓம் | ஞானமும் | மோட்சமும் | நல்குவாய் | போற்றி | ஓம் |

### தியானம்

| | | | |
|---|---|---|---|
| ஓம் சக்தியே! | சூரியசந்திர | செவ்வாயே! | ஓம்! |
| ஓம் சக்தியே! | புதவியாழ | வெள்ளியே! | ஓம்! |
| ஓம் சக்தியே! | சனிராகு | கேதுவே! | ஓம்! |

ஓம்! ஓம்! ஓம்

## கலாச்சாரத்துடன் நிற்பதன் அவசியம்

இன அடையாளம் பேணப்படுகின்றது.எமது கலாச்சாரத்தின் செழுமை பிறருககு உதாரணமாக அமைகின்றது.

இசை நடனம் மூலம் மனத்திற்கு அமைதி, சாந்தம் கிடைக்கின்றது.

விருந்தோம்பல் எமது கலாச்சாரத்தின் அங்கம். இதன் மூலம் மக்களின் அன்பைக் கொடுத்து அன்பைப் பெற முடிகிறது.

மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களைப் பணிந்து போற்றுதல் அவர்களது அருள், ஆசியைப் பெற்று வாழ்வில் நலமுடன் முன்னேற முடிகிறது.

காலையில் எழுந்தவுடன் பெற்றோரைக் கனம்பண்ணுதல், குருவைப்பணிந்து அவர் ஏவல் செய்தல், இறைவனைத் துதித்து சரியை, கிரியைத் தொண்டுகள் செய்தல் இவை எமது கலாச்சாரத்தின் பிரதிபலிப்புக்கள்.

மூத்தோர் சொற்கேட்டு நடத்தல், இயலாதோர்க்கு உதவுதல், இருப்பதைப் பகிர்தல் இவையும் கலாச்சாரத்தின் பிரதிபலிப்புக்கள்.

அழகான அளவான கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் உடைகள் மனத்திற்கு மகிழ்வைத் தருகின்றது. கௌரவத்தைத் தருகின்றது.

# நவராத்திரி விரதம்

உலகனைத்தும் உய்யவேண்டி, சிருஸ்டி முதலான கிருத்தியங்கள் செய்தருள்புரியும் பரம்பொருளாம் சிவபெருமான், ஆன்மாக்கள் மற்றும் பஞ்சபூதங்கள் அனைத்திலும் கலந்து உய்ய, வழிபாடு செய்யும் அருள் வடிவமே அம்பிகை ஆகும். அம்பிகை அனைத்திலும் வியாபித்துக் கருணை செய்பவள். இந்த வியாபக சக்தியை, அணிமா முதலான அஷ்டமூர்த்தமாகவும், ஆற்றல், அருள், அறிவு, வீரம், செல்வம், கல்வி அனைத்தும் தரும் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதியாகவும் வழிபடும் காலமே நவராத்திரியாகும்.

ஒரு மனிதனை பூரண மனிதனாக்குவது வீரம், செல்வம், கல்வி என்பவையாகும். சரஸ்வதியின் திருவருட்கடாட்சமே அம்பிகை வாசம் செய்யுமிடங்கள்.

"நாடிப்புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக்கொளிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கனென
ஏடிப்பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக்களிக்குமயிலே உன்பாதம் அடைக்கலமே"

அவனின்றி அணுவும் அசையாது என்பர். அந்த அவனாகிய சிவத்தையே அசைத்து இயங்கும் சக்தியாக உமையவள் இருக்கிறாள், என்ற எமது நம்பிக்கையின் மூலம், தாய்மையின் பெருமையை தெளிவுறுத்துகின்றது நமது சைவநெறி.

வெற்றி தரும்போது விஜயலட்சுமியாகவும், தைரியம் தரும்போது தைரியலட்சுமியாகவும், தனம் தரும்போது தனலட்சுமியாகவும், பயிர்கள் செழிக்கும்போது தான்யலட்சுமியாகவும், மற்றும் கஜலட்சுமி, ஆதிலட்சுமி, ஐஸ்வர்யலட்சுமி இப்படியாகப் பல நாமங்களுடன் தேவியார் அழைக்கப்படுகின்றாள்.உலகில் காணப்படும் பஞ்சபூதங்கள் அனைத்தையும், தாய்மை நிறைந்த தன்மையுள்ளவை எனத் தெய்வீக வார்த்தைகளால் அழைக்கப்படுகின்றன.

ஆகாயத்தை ஆகாயவாணி என்றும், பூமியை பூமாதேவி என்றும், தண்ணீரைக் கங்காதேவி என்றும் பிறந்த நாட்டை தாயகம் என்றும், நதிகளைக் கங்கா, யமுனா, சரசு என்றும் அழைத்து மகிழ்கிறோம் வணங்குகின்றோம்.

மூன்று சக்திகள், இச்சாசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி இலட்சுமி அட்டலட்சுமியாக சகல அட்ட ஐஸ்வரியங்களையும் அளிக்கிறாள்.கிரியா சக்தி துர்க்கை அம்பிகை இவளும் பல நாமங்கள் கொண்டவள். காளி, வீரமாகாளி, நீலி, திரிபூலி எனப் பலவகைப்படும். துர்க்கை வழிபாடு கன்னிப் பெண்களுக்கு சிறந்த வழிபாடாகும்.ஞானசக்தி கல்விக்குத் தலைவி. இவள் நாமங்கள் கலைமகள், கலைவாணி, சரஸ்வதி. இவள் இருக்கும் இடங்கள் பல.

பல நாமங்களுடன் அருட்பொலிவுடன் விளங்கி நிற்கும் ஆதிபராசக்திக்கு, அம்பிகை வழிபாட்டுக்கு உகந்த நாள், நவராத்திரி ஒன்பது நாட்களாகும். இந்துக்களுக்கு நவராத்திரித் திருநாட்கள் பொன்னான பெருநாட்களாகும்.

நவராத்திரி என்பது அம்பிகையின் வழிபாட்டுக்குரிய ஒன்பது இரவுகளாகும். சிவனுக்கு சிவராத்திரி ஒரு இரவு. அம்பிகைக்கு நவராத்திரி ஒன்பது இரவுகளாகும். இந்த இரவுகள் புரட்டாதி மாதம் அமாவாசையை அடுத்து வரும் வளர்பிறை ஒன்பது நாட்களும் நவராத்திரி இரவுகளாகும். பத்தாவது நாள் விஜயதசமி பூசை நடைபெறும். இந்த விஜயதசமி என்பது, பாண்டவர்கள் வனவாசம் சென்றபோது தங்களுடைய ஆயுதங்கள் எல்லாவற்றையும், ஓர் வன்னிமர விருட்ஷத்தின் கீழ் புதைத்து வைத்துவிட்டு சென்றார்கள். பின் வனவாசம் முடிந்தவந்து, இந்த ஆயுதங்களை அர்ச்சுணன் (விஜயன்) எடுத்து யுத்தம் புரிந்த நாள்தான் விஜயதசமி என அழைக்கப்பட்டு வருகிறது.

நவராத்திரி ஒன்பது நாட்களையும் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டு, முதல் மூன்று நாட்களும் வீரக்கடவுள் துர்க்கை அம்பிகைக்கும், நடுப்பகுதி மூன்று நாட்களும் செல்வக் கடவுளாகிய மகாலட்சுமிக்கும், கடைசி மூன்று நாட்களும் ஞானக் கடவுள் சரஸ்வதிக்கும், விழா எடுத்து வழிபாடு செய்யும் நாட்களாகும். இந்த மூன்று செல்வங்களை, நன்மக்களைப் பெறும்பொருட்டு, இறைவழிபாடு செய்வதே நவராத்திரி விரதத்தின் நோக்கமாகும்.

துர்க்கை அம்பாள் அவதாரமென்பது இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி அம்பிகை, இலட்சுமி, சரஸ்வதி மூவரும் சேர்ந்த அவதாரம் தான் துர்க்கை அம்பிகை அவதாரமாகும். முதல் மூன்று

நாட்களும் துர்க்கை அம்பிகைக்கு நடைபெறும் பூசை மிகவும் மகத்துவம் நிறைந்த பூசையாகும். இந்தப்பூசை வீரம், செல்வம், ஞானம் (கல்வி) மூன்று சக்திகளையும் அடக்கி நிற்கும் பூசையாகும்.

துர்க்கை அவதாரத்தின் காரணம், தேவர்களுக்கும், பூவுலகமக்களுக்கும் சொல்லொனாத் துன்பங்களைக் கொடுத்துவந்த அசுரர்களின், சொல்லொனாக் கொடுமைகளை எல்லாம் தாங்க முடியாத நிலையில், எல்லோரும் இறைவனிடம் சென்று, அசுரர்களின் துன்புறுத்தல்களிலிருந்து தங்களைக் காத்தருளும்படியும், விடுதலை அளித்து, நல்வாழ்வு அளிக்க வேண்டுமென வேண்டிநின்றார்கள். இதன் காரணமாக, அசுரர்களின் தலைவனும், பல கொடுமைகளைக் கொடுப்பவனுமாகிய மகிடாசூரனை அழிப்பதற்கு, துர்க்கை அம்மனாக அவதாரமெடுத்து, மகிஷாசூரனைச் சங்காரம் செய்த வீரத்தாய் தான், துர்க்கை அம்பாள் அவதாரமாகும்.

துர்க்கை அம்பிகையை முதல் மூன்று நாட்களும் பூசித்து வழிபாடு செய்தால், உறுதியான உன்னதத்துணிவுடன், வீரத்துடன், சகல சக்திகளும் பெற்று, தீர்க்க ஆயுளுடன், சந்தோஷ வாழ்வு வாழலாம். மனவலிமையையும், எதையும் தாங்கும் சக்தியையும் பெற்று, வாழ்வில் எதிர்நீச்சல் போட்டு முன்னேற, துர்க்கை அம்பிகையின் அருள் துணைபுரியும். வீரத்தின் உறைவடமாய் போற்றப்படும் துர்க்கையின் திருவருளினால், அச்சம் அவதி நீங்கி, அமைதியாக வாழ மனவலிமையும் தரவேண்டும் என்று, நவராத்திரி முதல் மூன்று நாட்களும் துர்க்கையை வேண்டி விரதமனுஷ்டிப்பதாகும்.

முட்டவரும் கொடிய வினைகள் எட்டி விலகிடவும், போட்டி பொறாமைகள் பூண்டோடு அழிந்திடவும், வாட்டம் நீங்கி வாழ்வில் மலர்ச்சியும் எழுச்சியும் நிலைபெற்றுவிடவும், கருணை கிட்டிட வேண்டுதல் செய்வது, விரதத்தின் வெற்றியின் உறைவிடமான, துர்க்கை அம்மனின் வழிபாடாக அமைகிறது.

சித்திரை மாதத்தில் வளர் பிரதமை தொடங்கி, ஒன்பது நாட்களுக்கு, அம்பிகையை பூசித்து, விரதமிருக்கும் முறை, வசந்த நவராத்திரி என்று அழைக்கப்படும்.

தேவி மகிஷாசூரனை அழிக்கும் பொருட்டு விரதமிருந்த ஒன்பது நாட்கள், நவராத்திரி என்றும், அசுரரை வென்றதினம் விஜயதசமி என்றும் அழைக்கப்படுகிறது.

தேவியின் பூசையால், வீட்டிலுள்ள தீயசக்திகள் விலகிவிடும். இளம் பெண்களுக்கு, கலைகளிலும் அழகிலும் சிறந்த கணவன்மார்கள் கிடைப்பார்கள். மணமான சுமங்கலிப் பெண்களுக்கு, தீர்க்கமான நிறைவான குடும்ப வாழ்க்கையும், மக்கட் பேறும் கிடைக்கும். இது துர்க்கை வழிபாடாகும். அடுத்த நடுப்பகுதி மூன்று நாட்களும், செல்வக் கடவுளான மஹாலட்சுமியை பூசித்து, வறுமை தரித்திரம் இன்றி வளமான வாழ்வு வாழலாம்.

"அருளில்லார்க்கு அவ்வுலகில்லை
பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை
இல்லானை இல்லாளும் வேண்டாள்
ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்"

என்ற அருள்மொழிக்கிணங்க இங்கு வாழ்வதற்குப் பொருட்செல்வம் மிகமிக அவசியம். இல்லையேல் எம்மை எவரும் மதிக்க மாட்டார்கள்.

பீடை, பிணி, துன்பம், பயம் இவைகள் அனைத்தும் குடி கொண்டு வறுமையில் உளரவேண்டி நேரிடும். எனவேதான் செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமியை வழிபாடு செய்து, அம்பிகையின் திருவருட்கடாட்சத்தினால், சகல செல்வம் யோகம் மிக்க பெருவாழ்வு வாழலாம்.

"தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சினில் வஞ்கமிலா
இனம் தரும் நல்லனவெல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமிகடைக் கண்களே."

மகாலட்சுமியின் கருணை, அமுதப் பெருக்கு என்பார்கள்.

மூன்றாம் பகுதியாக, கலைகளுக்கரசியான ஞானத்தாய் சரஸ்வதி கடாட்சமிருந்தால், அறிவாற்றல் மிகுந்த மனிதனாகவும், கீர்த்தி, புகளுடையவனாகவும், ஞானவானாகவும் வாழமுடியும். உதாரணமாக அரசனுக்குத் தனது நாட்டில் மட்டும் மதிப்புண்டு. சிறப்புண்டு,வீரமிருக்கலாம், செல்வமிருக்கலாம், ஆனால் ஞானம் எனும் அறிவில்லாலிட்டால் அவன் மிருகத்திற்குச் சமனாவான். கல்வியறிவு

இருந்தாலும் நற்குணங்கள், ஒழுக்க நெறிகள் இல்லையானால் அவனது கல்வியறிவால் எவருக்கும் பயனில்லை.

"பற்பல நூல் கற்றுணர்ந்த பண்டிதனே ஆனாலும்
நற்குணங்கள் எள்ளளவும் நன்னாத — துர்க்குணனை
முற்ற வெறுக்க முடிமேல் மணியிருந்தென்
புற்றரவைக் கிட்டார் புகுந்து."

மகிடாசூரனுக்கு வலிமை வீரம் இறைவியினால் வழங்கப்பட்டது. அசுரசக்தி என்பது தனியே உற்பத்தியானதல்ல, இறைவனால் வழங்கப்பட்டது. ஆக்கசக்தி அவனுடைய அறிவின்மையால் ஆணவசக்தியாய் மாறியது. அது அம்பிகையின் அழிவுசக்தி மூலம் அழிக்கப்பட்டது. அன்னையின் அருட்சக்தி எனவேதான் ஞானம் எனும் கலை அரசியின் அருட்கடாட்சமாகவும் வேண்டும். வாணி அம்பிகையின் அருளுண்டேல் யாவராலும் மதிக்கப்படுவர்.

"வெள்ளைக் கலை உடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடெம்மைச்
சரியாசனம் வைத்த தாய்"

எங்களுக்கு இறையருள் காரணமாக, செல்வம், வீரம், ஞானம் கிடைத்து, சந்தோஷவாழ்வு வாழும்காலம், ஆணவச் செருக்கேற்பட்டால், அசுரர்கள் அழிக்கப்பட்டது போல், எல்லாவற்றையும் இழக்க நேரிடும். அழிவு ஏற்படலாம், அதிலிருந்து மீழ்வதற்கு கலை வாணியின் ஞானம் எனும் நுண்ணறிவு வேண்டும்.

"அறிவற்றவர்களிடம் இருக்கும் பணம், அணுகுண்டை விட பயங்கரமானது'

கடைசி ஒன்பதாம் நாள் ஆயுத பூசை நாளாகும். விஜயதசமி ஒவ்வொரு நாளும், தாம் தாம் செய்யும் தொழில்களுக்குரிய ஆயுதங்களை, தேவி முன் பூசையில்வைத்து வணங்கி அம்பாளின் ஆசியைப் பெறுவதாகும்.

ஒன்பது நாளும் விரதம் நோற்றவர்கள், இந்தக் கடைசி ஒன்பதாம் நாள், அம்பாளைப் பூசித்தால், புரட்டாதி ஒரு மாதமும் தேவியை வழிபாடுசெய்த பலனைப் பெறுவர். நவராத்திரி ஒன்பது நாட்களும், அம்பிகை சனீஸ்வரனுக்கு இரவு நேரப்பூசையை மேற்கொள்கிறாள். பரிபூரணம் அடைகின்ற தினம் விஜயதசமி. நவராத்திரியின் முக்கிய பூசையாக விஜயதசமி முடிவடைகிறது. விஜயதசமியில் வாழைமரத்தை பூசித்து, அந்த வாழை நாரில் மாலை தொடுத்து அம்பிகைக்கு சாத்தி குடும்பவளங்களைப் பெற்றனர்.

## நவராத்திரி கொலு

நவாத்திரி பொம்மைகளைச் செய்ய, ஒரே கழிமண் மூலப்பொருளாகிறது. ஆனால் கிருஷ்ணராகவும், ராமராகவும், முருகனாகவும், சிவனாகவும், அம்பாளாகவும் பல பொம்மைகள் ஒரே மண்ணில் உருவாகிறது. பரப்பிரமம் பலவகை வடிவங்களை எடுத்து நம்மைக் கரையேற்றுவதை நவராத்திரிக் கொலு உணர்த்துகிறது.

## நவராத்திரி விரதம் அனுஷ்டித்து அருள் பெற்றவர்கள்

விசுவாமித்திரர், வசிட்டர், கச்சியப்பர். இந்திரன், இராமபிரான், இவர்கள் அம்பிகை ஆராதனை செய்து பல சக்திகளைப் பெற்றார்கள்.மகிடாசூரன், பண்டாசுரன், சண்டமுண்டன், ரக்தபிசன், சும்பநிசும்பன் போன்ற எண்ணற்ற அசுரர்களை வதைத்த அம்பிகைக்கு நன்றி தெரிவிக்கும் விழா நவராத்திரி.

இராமபிரான் நவராத்திரி விரதம் அனுஷ்டித்து இழந்த ராஜ்யத்தையும் மனைவி சீதையையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தனர்.சிவபெருமான் நவராத்திரி விரதம் அனுஷ்டித்து திரிபுரம் எரித்தவர். இந்திரனும் நவராத்திரி விரதம் அனுஷ்டித்து விருந்திரா சூரனை ஒழித்தார்.

# கேதார கௌரி விரதம்

சிவபெருமானுடைய அஷ்ட மஹா விரதங்களுள் கேதார கௌரி விரதமும் ஒன்று. இந்த விரதத்தை அம்மை கௌரியே அனுஷ்டித்தார் என்றால் அதன் பெருமைக்கு நிகர் எதுவுமில்லை. அம்மை ஐயனின் இடப்பாகம் பெற்று அர்தநாரீசுவராக ஆனது இந்த விரத மகிமையால். கேதார கௌரி விரதம் புரட்டாதி மாதம் சுக்ல பக்ஷ அஷ்டமி நாள் தொடங்கி ஐப்பசி மாத அமாவாசை முடிய மொத்தம் இருபத்தொரு நாட்கள் இந்த விரதம் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஸ்கந்த புராணம் கூறுகிறது.

கேதாரம் என்பது இமயமலைச்சாரலைக் குறிப்பதாகும். அதாவது மலையைச் சார்ந்த வயல் பகுதியை கேதாரம் என்பர். இந்த இமயமலைக் கேதாரப்பகுதியில் சுயம்பு லிங்கமாக கேதாரேஸ்சுவரர் தோன்றினார். சக்திரூபமான பார்வதி தேவி சிவனை நினைத்து வழிபட்டு அதன் பலனாக அர்த்தநாரியாகவும், அர்த்த நாரீசுவராகவும் ஒன்றுபட்ட தினமே கேதார கௌரி விரதமாகும். வயலில் ஆலமரத்தடியில் இருந்து இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட்டதால் கேதாரகௌரி விரதம் எனவும், ஈசனை வழிபடுகின்றபடியால் கேதாரேஸ்வரி விரதம் எனவும் பெயர் பெறுகிறது.

மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களகரமாக இருக்க வேண்டியும்,, மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை (கணவனை) வேண்டியும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

மாங்கல்ய பாக்கியமும், கணவன், மனைவி இணை பிரியாது அன்போடு சுகவாழ்வு வாழும் வரமும், சகல சௌபாக்கியங்களும் நல்கும் விரதம் இந்த கேதார கௌரி விரதம். தம்பதியர் இருவரும் ஒருயிர் ஈருடலாக வரம் பெற இவ்விரதத்தினை விரும்பி அனுஷ்டிக்க வேண்டும். ஆயுள் முழுவதும் மகிழ்ச்சியான தம்பதிகளாய் வாழ உதவும் விரதம் இது. குடும்பப் பிரச்சனை உள்ளவர்கள் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதன் மூலம் குடும்ப ஒற்றுமையும் சுபீட்சமான வாழ்க்கையும் பெறுவார்கள் என்பது ஐதீகம்.

விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு இறுதி நாளன்று அந்நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடது கையிலும் அணிந்து கொள்வர். சக்திரூபமான பார்வதிதேவி சிவனை நினைத்து விரதமிருந்து, வழிபட்டு அதன் பலனாக சிவபெருமானின் (இடது பக்க) பாதியுடம்பை பெற்று, அர்த்தநாரியாகவும் அர்த்த நாரீசுவரியாகவும் ஒன்றாகிய விரதமே கேதார கௌரி விரதமாகும். இவ்விரதத்தை லட்சுமி விரதம், அம்மன் விரதம், கௌரி நோன்பு, கௌரி காப்பு நோன்பு என்று பல பெயர்களில் தங்கள் தங்கள் குடும்ப வழக்கப்படி அழைப்பர்.

### கேதார கௌரி விரதம் தோன்றிய வரலாறு

பிருங்கி என்ற முனிவர் அதி தீவிர சிவ பக்தர். சிவனைத் தவிர வேறு யாரையும் வணங்கமாட்டார். "ஆதியும் அந்தமும் இல்லாத நாயகன் என் கயிலாயநாதன்தான். அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்றெல்லாம் உள்ளார்ந்த பக்தியுடன், ஆலவாய் அழகனை மட்டுமே துதித்து வந்தார். பிற கடவுள்களை சற்றும் சிந்திக்காத அவருடை போக்கு, சில சமயம் அக்கடவுள்களாலேயே அவமதிக்கும் வகையிலும் அமைந்ததுண்டு.

அப்படி ஒரு நிலைக்கு ஆளானவள் பார்வதி. கயிலாயத்தில் தன் கணவருடன் அமர்ந்திருக்கும் போது, பிருங்கி முனிவர் நேராக வந்து சிவனை மட்டும் வணங்கி வலம் வருவதும், தன்னைத் திரும்பியே பார்க்காமல் போவதும் அவளுக்கு மனவருத்தத்தைத் தந்தது.

எப்படியாவது பிருங்கி முனிவரை, தன்னையும் வணங்கச் செய்யவேண்டும் என்று விரும்பிய உமையவள், பெருமானிடம் நெருங்கி அமர்ந்துகொண்டாள். இப்படி அமர்ந்திருக்கும்போது, தன்னைத் தவிர்த்து இவரை மட்டும் பிருங்கி முனிவரால் எப்படி வலம் வர முடியும்? என்று நினைத்தாள்.

வழக்கம் போல் பிருங்கி முனிவர் வந்தார். சிவனோடு உமையவள் நெருங்கி வீற்றிருப்பதைப் பார்த்தார். என்ன செய்வது என்று குழம்பினார். பிறகு தெளிவாகி, ஒரு வண்டாக உருவெடுத்தார். இருவருக்கும் இடையே புகுந்து சிவனை மட்டும் வலம் வந்தார்.

இதைக் கண்டு வெகுண்டாள் தேவி. சக்தியும் சிவனும் ஒன்று என்ற தத்துவம் புரியாமல், தன் தலைவனை மட்டும் வணங்கும் இந்த முனிவரின் ஆணவத்தை அடக்க எண்ணினாள். தன்னை அவமானப்படுத்திய முனிவரின் கால்கள் முடமாகிப் போகச் சபித்தாள்.

அது உடனே பலித்தது. ஆனாலும், தன் பக்தனை அந்த நிலையிலேயே விட்டுவிட இறைவனுக்கு சம்மதமில்லை. அவரது கால்களை சரிசெய்ததோடு, மூன்றாவது ஒரு காலையும் உருவாக்கித் தந்தார். அதோடு ஒரு கோலையும் அளித்து, பிருங்கி முனிவர் ஊன்றிச் செல்லவும் வழி செய்து கொடுத்தார்.

தன் கணவர் முனிவருக்கே ஆதரவாக நடப்பதைப் பார்த்து அன்னை வெகுண்டாள். உடனே, தன்னை அவருடைய முழுமையான அன்புக்கு ஆக்கிக் கொள்ளத் தீர்மானித்தாள். அதற்கு தவமே சிறந்த வழி என்று நம்பி, பூலோகத்திற்கு வந்தாள். ஒரு வயல்வெளியைத் தேர்ந்தெடுத்தாள். சிவனை எண்ணி தவமிருந்தாள்.

கடுமையான தவம். அன்னையின் தவக் கடுமையியால் சுற்றி இருந்த மரங்களும், செடிகளும், கொடிகளும் கருகித் தீய்ந்தன. மனம் இளகினார் மகாதேவன். மேலிருந்து இறங்கி வந்தார். உமையவளுக்கு தரிசனம் தந்து அவளை ஆட்கொண்டார். "ஒரு நாளும் உமைப் பிரியாத வரம் வேண்டும்" என்று வேண்டினாள் அன்னை. "தந்தேன்"என்றார் மகாதேவன்.

"உங்களைக் பிரியாத" என்றால் அருகிலேயே இருப்பதல்ல. உடலோடு ஒன்றியதாக.....உடலை விட்டுப் பிரிக்க முடியாதவளாக....." என்று மகாதேவி வரம் கேட்டாள். புரிந்து கொண்டார் பரமன். அவள் வேண்டிய வரத்தை அளித்தார். அர்த்தநாரீஸ்வரர் ஆனார்.

தேவிக்கு சந்தோஷம். இனி பிருங்கி முனிவரல்ல, யாருமே என்னை என் தலைவனிடமிருந்து பிரிக்க முடியாது. சிவன் வேறு, சக்தி வேறு என்று பிரத்துப் பார்ப்பவரகள், இனி இரண்டும் ஒன்றே என்பதை பரிபூரணமாக உணர வேண்டும் என்று சிவனுடன் சேர்ந்து விதி செய்தாள்.

இவ்வாறு அம்பிகை, இறைவனின் உடலில் ஒரு பாதியாகி, கணவனிடமிருந்து எந்நாளும் பிரிக்க முடியாத பந்தத்தை உருவாக்கிக் கொண்ட நாள்தான் கேதார கௌரி விரதநாள். கேதாரம் என்றால் வயல். கௌரி என்ற பார்வதி வயல்வெளியில் தவமிருந்து சிவபெருமானின் அருளைப் பெற்றதால் இந்த விரதம் "கேதார கௌரி விரதம்" என்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக தீபாவளி அன்றோ, அல்லது தீபாவளிக்கு மறுநாளே இந்த விரதமும் மேற்கொள்ளப் படுகிறது. தீபாவளித் திருநாள் குடும்பத்தின் மகிழ்ச்சியைக் கூட்டும் நாள்.

கணவன் - மனைவியிடையே மாறாத அன்பை வளர்த்துக் கொள்ள உதவும் பண்டிகை. தான், தன் கணவர், தன் குழந்தைகள், வீட்டிலுள்ள பிற பெரியவர்கள் என்று அனைவரிடையேயும் அன்பும், பாசமும் நீடித்து நிலைக்க வைக்கும் கொண்டாட்டம்.

தம் மாங்கல்ய பலம் நீடிக்கவும், தன் மீதான கணவரின் அன்பு என்றும் குறையாது நிலைத்திருக்க வேண்டும் என்ற வரத்தைப் பெற கேதார கௌரி விரதத்தை சுமங்கலிகள் கடைப்பிடிக்கிறார்கள்.

அன்றைய தினத்தில், பண்டிகைக்கான பூஜைகளுக்குப் பிறகோ அல்லது முடிந்தால் அதற்கு முன்னதாகவோ, பூஜை அறையில் விளக்கேற்றி, சிவபெருமான் படம் அல்லது லிங்கம் அல்லது சிவ – பார்வதி படத்தின் முன் பக்தியுடன் அமர்ந்து தியானம் செய்ய வேண்டும்.

சிவ துதிகளைப் பாட வேண்டும். அம்மன்- சக்தி பாடல்களைப் பாட வேண்டும். "ஓம் நமச்சிவாய. சிவாய நம ஓம், ஓம் நமச்சிவாய சிவாய நம ஓம்" என்று பஞ்சாட்சர மந்திரத்தை அன்று முழுவதும் ஓதிக்கொண்டே இருக்க வேண்டும்.

முடிந்தால், சிவலிங்கத்திற்கு பால் அபிஷேகம் செய்யலாம். அந்த அபிஷேகப் பாலையே பிரசாதமாக அருந்தலாம். குடும்பத்தில் பிறருக்கும் கொடுக்கலாம். பாயாசம், அல்லது அப்பம் நைவேத்தியம் செய்யலாம். தம் கணவர் மற்றும் தம் குடும்ப உறுப்பினர் அனைவரது நலனுக்காகவும் உமையொரு பாகனை வேண்டிக்கொள்ளலாம்.

# தீபாவளித் திருநாள்

தீபாவளித் திருநாள் இந்துமக்களுக்கு ஒரு புனிதத் திருநாள். ஐப்பசி அமாவாசை தீபாவளி என்றாலே சிறியோர் முதல் பெரியோர் வரை, ஏழை முதல் செல்வந்தர் வரை, அவரவர் வசதிக்கேற்றபடி மகிழ்வுடன் கொண்டாடுவது என்பது யாவரும் அறிந்ததே. இத் தீபாவளித் திருநாள் சிறுவர் சிறுமியர்க்கும் புதுமணத் தம்பதியர்க்கும் பெரும் மகிழ்ச்சியைத்தரும் நாளாகும். புதுமணத் தம்பதிகள் தங்கள் இல்லங்களில், புத்தாடை சரசரக்க, தீபமேற்றி, விழாக் கொண்டாடி வணங்கி பெரியோர்களிடம் ஆசி பெறும்போது, ஒளிமிக்க பிரகாசமான வாழ்க்கையினைப் பெற்று உயர்வடைவதற்கான புனிதத் திருநாளாகும்.

இத்தீபத்திருநாளில் அதிகாலை எழுந்து, ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்து, மஹாவிஷ்னுவையும் வழிபாடு செய்து, பெரியோர்களையும் வணங்கி அவர்களின் ஆசி பெற்று, சாதி, மத, இன பேதமின்றி உறவினர்கள், நண்பர்களுக்கு பலவகை உணவுப்பண்டங்கள் கொடுத்து உபசரித்து மகிழ்வினைப் பங்குகொண்டு சந்தோஷம் அடையும் நாள்தான் தீபாவளித் திருநாள்.

புராண வரலாறு

இதே நாளில் நரகாசுரன் என்ற அசுரன் தேவர்களை இம்சித்து பெரும் துன்பங்களைக் கொடுத்து வந்தான். அசுரனின் தொல்லைகளைத் தாங்கமுடியாத வேர்கள், காக்கும் தெய்வமாகிய திருமாலிடம் சென்று, அசுரனின் தாங்கொணாக் கொடுமைகளில் இருந்து, தங்களைக் காத்தருள வேண்டுமென்று, தேவர்களின் முதல்வனான இந்திரன் வேண்டியதற்கிணங்க, திருமால் கருடன் மீது எழுந்தருளி, நரகாசுரனுடன் யுத்தம்செய்து, தனது சக்கர ஆயுதத்தால் நரகாசுரனை வதைத்து, தேவர்களைக் காத்து இரட்சித்த நாளே, தீபாவளித் திருநாளாகும்.

தீபாவளித் திருநாளைத் தீபத்திருநாள் என்றும் கூறுவர். வடநாடு முழுவதும் தீபாவளியன்று வரிசை வரிசையாகத் தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்கிறார்கள். வாழ்வு முழுவதும் ஒளிமயமாகத் திகழ வேண்டும் என்பதே அவர்களின் வேண்டுதலாகும்.

தீபாவளி நாள் திருமாலுக்குகந்த நாள். இந்த நாளில் தொடங்கப்படும் தீபமானது சிவனுக்குகந்த நாளாகிய திருக்கார்த்திகை நாளில் ஒளி வெள்ளமாக ஜோதி மயமாக முடிக்கப்படுகிறது என்பது, ஹரியும், ஹரனும் ஒன்றே என்னும் அரிய தத்துவத்தை விளக்குவதாகும்.

ஸ்ரீ ராமபிரான் வனவாசம் முடித்து அயோத்தி திரும்பிய தினம் ஒரு தீபாவளித் திருநாள். மஹாபலிச்சக்கரவர்த்தி பூவுலகிற்கு வந்த நாள் ஒரு தீபாவளித் திருநாள்.

பாற்கடலில் தோன்றிய மஹாலட்சுமி திருமாலுக்கு மாலை போடத் தீர்மானித்தாள். இதை உணர்ந்த மகாவிஷ்ணு மறைந்து ஓடினார். மஹாலட்சுமி பின் தொடர்ந்து விடாமல் ஓடினாள். அவனது பாதம் பட்டு எள்ளுச் செடிகள் சிதைந்து எண்ணெய் கசிந்தது. திருமாலைத் தேடி அவருக்கு ஸ்ரீ தேவி மாலையிட்ட நாள் தீபாவளித் திருநாள். அன்று எண்ணெயில் வாசம் செய்வதாக எள்ளுச் செடிக்கு வரமளித்தான்.

அருள் ஞான இருள் விலகி, ஞான ஒளி பரவ தீமைகள் அழிய குடும்பத்தில் மங்களங்கள் பொலிய எல்லோரும் தீபமேற்றி வழிபடும் திருநாளே தீபாவளித் திருநாள். இத்திருநாளை இந்துக்கள் மகிழ்வுடன் கொண்டாடும் பெருநாளாகும்.

"தமஸோமா ஜ்யோதிர்க் கமய
மருத்யோர்மா அம்ருதம் கமய"

என்பது வேதமந்திரம். இதன் பொருள் இருட்டில் இருந்து வெளிச்சத்துக்கு அழைத்துச் செல் என்பதாகும். இறைவனைப் பிரார்த்தனை செய்து தீபாவளிப் பண்டிகையைக் குதூகலமாகக் கொண்டாடுவோம்.

நரகாசுரன் என்பவன் அருந்தவமிருந்து பரமனை வழிபட்டு, பெரும் வரங்களைப் பெற்று, அவ்வரங்களின் மகிமையால் அகந்தை (ஆணவம்) ஏற்பட்டு, தேவர்கள், பூவுலக மக்கள், முனிவர்கள், ரிஷிகள் எலலோருக்கும் துன்பம் விளைவித்து வந்தான். தேவர்களின் தலைவன் இந்திரனுடன் போர்புரிந்தான். இந்திரன், முனிவர்கள், இரத தேவர்கள் அனைவரும் கிருஷ்ணபகவானிடம் முறையிட்டனர். கிருஷ்ணபகவான் நரகாசுரனைத் தம் (சக்கரத்தால்) சக்கராயுதத்தால் அவன் உடலைப் பிளந்தார். அப்பொழுது நரகாசுரன், கிருஷ்ணபகவானை

வணங்கி, நான் செய்த பாவங்களை மன்னித்தருளி, கொடியவனான நான் இறக்கும் இந்நாளை மக்கள் அனைவரும், தொல்லைகள் நீங்கிய மங்களகரமான

திருநாளாகக் கொண்டாடி இன்புற வேண்டும், இந்நாளில் என்னை நினைத்து நீராடி புதிய உடைகள் அணிந்து ஆலய வழிபாடு செய்பவர்களுக்கு அசுவமேதயாகம் செய்த பலன் கிடைக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

பகவானும் அவன் கேட்ட வரத்தை வழங்கி அருளினார். அத்திருநாளே தீபாவளித் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. நரகாசுரனுக்கு மோட்சம் அருளிய காரணத்தால் பண்டிகையை நரக சதுர்த்தசி என்று கூறுவர்.

தீபாவளி ஒரு மங்களகரமான தீபத்திருநாள். தீயவர்கள் அழியும் நாள். வெளி இருளோடு அக இருளும் அகலும் நாள்.

மகாவிஷ்ணுவுக்கும், பூமாதேவிக்கும் மகனாகப் பிறந்தவர் தான் நரகாசுரன். பகவானுக்கு மகனாகப் பிறந்த சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக இறைத்தன்மை மாறி அசுரனாகி விட்டான். தர்மம், நியாயம், நேர்மை இந்த நற்குணங்கள் இருந்தால்தான் மனித நேயத்துடன் வாழமுடியும். இந்த நரகாசுரன் வானவர்களுக்கும் பூவுலக மக்களுக்கும் சொல்லமுடியாத பெரும் துன்பங்களைச் செய்தான். தேவேந்திரன் தாயாரின் குண்டலங்களைப் பறித்தான். கொடுத்த துன்பங்களை எல்லாம் இறைவனிடம் முறையிட்டான்.

இதையுணர்ந்த பரந்தாமன் பாசஉணர்வுகளையும் மீறி, கிருஷ்ண அவதாரம் எடுத்து, மனைவி சத்தியபாமாவுடன் சென்று, அவனை வதம் செய்து தர்மத்தை நிலைநாட்டினார்.

இதிலிருந்து என்ன தெரிகின்றதென்றால் அக்கிரமங்கள் செய்பவர்கள் யாராக இருந்தாலும் இறைவன் அவர்களிடம் கருணை காட்டமாட்டார். அழித்தே தீருவார் என்பதற்குச் சான்று மகன் நரகாசுரன் வதமாகும்.

## இந்து சமயம்

மக்கள் ஒழுக்கமாக வாழ்ந்து மகிழ்வாக வாழ்வதற்காக, பரம்பொருள் என்ற கடவுளின் துணை வேண்டும் என்று உலகத்து மக்கள் எல்லோரும் நம்பினார்கள். இந்த நம்பிக்கையின் விளைவு தான் சமயம். சமயம் என்றாலும் நம்பிக்கை என்றாலும் ஒன்றே. ஆங்கிலத்தில் சமயத்தை Religion என்று சொல்வார்கள். அவர்கள் Religionஐ Faith என்றும் சொல்வார்கள். சமயத்தை மதம் என்று கூறுவதும் உண்டு. உலகச்சமயங்கள் எல்லாம் ஆசியாக் கண்டத்திலேயே தோன்றின. உலகத்தின் சமயங்களில் மிகவும் பழமையானது இந்து சமயம். இந்து சமயம் எப்போது தோன்றியது என்று கேட்டால் அதற்கு விடை சொல்ல முடியாது. அவ்வளவு பழமையானது இந்து சமயம். இந்து சயம் என்ற சொல் பல்வேறு இந்தியச்சமயங்களையும் உள்ளடக்கும். விரிந்த கருத்தில் Hinduism என்பது இந்து கலாசாரத்தையும் உள்ளடக்கும்.

சைவ சமயம், வைணவ சமயம், சாக்த சமயம், வேதாந்த சமயம் என்ற நான்கு முக்கிய சமயங்களை இந்து சமயம் உள்ளடக்கியுள்ளது. இவற்றுள் இன்று தமிழ் இந்துக்களால் பெருமளவில் பின்பற்றப்படுகின்ற சமயங்கள் இரண்டு மட்டுமே. அவை சைவம், வைணவம் என்ற இரண்டும் ஆகும்.

## ஸ்ரீ துர்க்கை அம்பிகை வழிபாடு

அகில அண்டங்களையும் படைத்துக் காக்கும் அம்பிகை அருவமாக எங்கும் நிறைந்திருக்கின்றாள். அவள் நிர்மலமானவள். பரிபூரணமாய் ஆங்காங்கு கோயில் கொண்டு விளங்கும் திருவுருவங்களில் வீற்றிருந்து அருள் பாலிக்கிறாள். ஆகம விதிகளுக்கமைய மந்திரங்கள் பூர்வமாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளில் உருக்கொண்டு ஜீவராசிகளுக்கு அருள்புரியும் ஸ்தானமே ஆலயமாகும்.

செம்மையின் திருவுருவமாகவும் சர்வமந்திர சொரூபிணியாகவும் விளங்கும் அம்பிகையின் திருவடிகளை பணிந்து வணங்கினால் நம்மைப் பீடித்திருக்கும் பலவிதமான தீவினைகளும் மாய்ந்து நாளும் பொழுதும் நலன்மிக்க நன்மைகள் நம்மை வந்தடையும். பக்தர்களின் பல்வேறு வினைப்பயன்களையும் விரட்டியடித்து வரவேண்டிய வரங்களைத் தந்தருளும் கருணைக்கடல் அன்னை ஸ்ரீதுர்க்கை அம்பிகை.

இத்தகைய பேராற்றலும் பேரருளும் கொண்ட கருணைத்தாய் தான் ஸ்ரீதுர்க்கை. அன்னையின் அருள் ஆணையினால் ஆன்மிகம் நிறைந்த திருவருட்கடலாக கருணை பொங்கும் பேரொளியாக பிரகாசித்துப் பல்வேறு குறைகளையும் போக்கி பக்தர்களுக்கு நிம்மதியான நல்வாழ்கை நல்கும் நிகரற்ற திருக்கோயிலாக விளங்குவது தான் துர்க்கை அம்பிகை ஆலயமாகும். ஆனந்த தரிசனம் தரும் அன்னையைக் காண ஆயிரம் கண்கள் போதாது. காணக் கண்கள் கோடி வேண்டும். தாயினும் சாலப் பரிந்து அம்மா என்றழைத்ததும் ஓடோடி வந்து காத்து நிற்பாள்.

துஷ்டர்களிடமிருந்து பக்தர்களைக் காக்கும் ஆபத்பாந்தவளாய் அந்த ரட்ஷகியாய் அனேகரூபியாய்ப் பல நாமங்கள் கொண்டு அகிலம் எங்கும் அருளாட்சி செய்பவள் தான் அன்னை ஸ்ரீதுர்க்கை. அம்பிகையின் பார்வை படுவதும் அவளின் திருப்பாதங்கள் பணிவதும் மனத்தால் நினைப்பதும் வாயாரப் போற்றுவதும் புகழ்ந்து (பஜனை) பாடுவதும் ஜென்மம் எடுத்த பாக்கியமாகும்.

அம்பிகையின் கடைக்கண் பார்வைபட்ட மாத்திரத்தில் நம் பாவங்கள் எல்லாம் அற்றுப்போகும். புண்ணிய நதிகளில் நீராடியதற்குச் சமமாகும். அம்பிகையின் பார்வை படுவது:

"விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்னை கூட்டினியே"

இறைவனின் இதயம் நெகிழச் செய்து பூரிப்படையச் செய்யும் சக்தி பக்தி ஒன்றுதான். இறைவன் எங்களின் செல்வத்தையோ கல்வித்திறனையோ மதிப்பதில்லை. பக்தி மட்டுமே இறைவியை ஈர்க்க வல்லது.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த ஜேதியாக அண்டசராசரங்களையும் அருளாட்சி செய்யும் கலியுக தெய்வமாக கருணைக்கடலாக அருட்சுடராக அமுதசுரபியாக வேண்டுவார் வேண்டுவதை எல்லாம் அள்ளி வழங்கும் கற்பக விருட்சமாக காமதேனுவாக தேடிவரும் அடியார்களுக்கெல்லாம் நாடிச் சென்று அருள் வழங்கும் இறைவியாக விளங்குபவள் தான் ஆதிபராசக்தி துர்க்கை. துர்க்கையின் அவதாரமென்பது இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி. உமாதேவியார், இலட்சுமி, சரஸ்வதி மூன்று சக்திகளும் சேர்ந்த அவதாரம்தான் துர்க்கை அவதாரம்.

பல அசுரர்கள் தேவர்களுக்குப் பெரும் கஷ்ட துன்பங்களைக் கொடுத்து மிகவும் துன்புறுத்தி வந்தார்கள். இக்கொடுமைகளைத் தாங்கமுடியாத தேவர்கள் முனிவர்கள் ரிஷிகள் எல்லோரும் கைலாசவாசனாகிய பரமபிதாவிடம் சென்று அசுரர்களின் கொடுமைகளில் இருந்து தங்களைக் காத்தருள வேண்டுமென்று இரந்து கேட்டு நின்றார்கள்.

சிவபெருமான் இவர்களின் வேண்டுதலைக் கேட்டு மகிடாசுரன் மற்றும் ஏனைய அசுரர்களின் துன்புறுத்தல்களில் இருந்தும் காத்தருளும் பொருட்டு துர்க்கை அவதாரம் எடுத்து மகிடாசூரனை சங்காரம் செய்து தேவர்களுக்கு நல்வாழ்வளித்தார். சிவன் கோவில்களிலே துர்க்கை அம்மனுக்குச் சன்னிதி இல்லாமல் இல்லை. சிவலிங்கம் இருக்கும் கருவறையின் சுற்றுச் சுவர்களின் இடது பக்கம் வெளிச்சுவரில் துர்க்கை அம்பிகையை பிரதிஷ்டை செய்யவேண்டும் என்பது ஆகமவிதி முறையாகும்.

துர்க்கைக்கு இராகு காலத்தில் பூசை செய்வது விசேட பலனைக் கொடுக்கும். இராகுகாலம் என்பதும் யமகண்டம் என்பதும் எந்தக் காரியமும் செய்யக்கூடாத நேரமென்றும் ஒரு நம்பிக்கை பொதுவாக எல்லோரிடமும் உண்டு. எனவே துரக்கைக்கு இராகுகாலப் பூசை என்றதும் பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் துர்க்கையைப் பூசிப்பதற்கு இராகு காலமே நல்ல நேரமாகும் என்பது சித்தர்களின் கூற்றாகும். மாபெரும் பிரபஞ்ச சக்தியே துர்க்கை வடிவில் விளங்குகின்றது. கிரகண காலங்களில் சூரியனையும் சந்திரனையும் இவை பிடிப்பதை அறிவோம். அதற்குரிய பரிகாரங்களையும் செய்கின்றோம்.

ஒவ்வொரு கிழமையும் அந்தந்தக்கிழமைக்குரிய கிரகத்தைக் குறிப்பிட்ட சில நேரம் இராகுவும் கேதுவும் பிடிக்கின்றன. இக்காலத்தையே இராகுகாலம் என்றும் எமகண்டம் என்றும் சொல்லப்படுகின்றது. சக்தி வாய்ந்த இராகு மஹாசக்தியான துர்க்கையைப் பூசித்துப் பலனடைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. எனவே தான் இராகு காலத்தில் துர்க்கையை வழிபட்டால் உடன் பலன் கிடைக்குமென்பது சாஸ்திர விதியாகும். செவ்வாய்க்கிழமைகளில் வரும் ராகுகாலங்களில் செய்யப்படும் துர்க்கைப் பூசைக்கு உடனடியாகப் பலன் கிடைக்கும் என்பது அருளாளர் கூற்றாகும். காரணம் செவ்வாக்கிழமைக்குரிய அங்காரகன் துர்க்கையை மங்கள சண்டிகையாக வழிபட்டுப் பலனடைந்தவனாவான்.

மேன்மை பொருந்திய துர்க்காதேவியை மூன்று உலகங்களும் பூசிக்கின்றன. நவக்கிரகங்களில் மிக வலிமை பொருந்திய கிரகம் இராகுபகவான். மங்கலவார காலத்தில் துர்க்கையைப் பூஷித்து மகிழ்ச்சியான முகத்துடனும் நிறைந்த மனத்துடனும் விளங்குவதால் தான் மங்கலவார இராகுகாலத்தில் துர்க்கையைப் பூசை செய்ய வேண்டும் என சாஸ்திரம் கூறுகிறது. குறிப்பாக இராகுகாலங்களில் கோவில்களுக்குச் சென்று அங்குள்ள துர்க்கா தேவியை வழிபடுவது உத்தமத்திலும் உத்தமமாகும்.

செவ்வாய்க்கிழமை மங்கல வாரமென்பது ஒரு பெயராகும். இந்த மங்கள நாளில் மஞ்சள்நிறப் பூக்களான அலரி, சாமந்தி மற்றும் நந்தியாவட்டை ஆகிய மலர்களை அர்ச்சனைக்கும், மஞ்சல் வண்ண வெண்பொங்கல் எலுமிச்சை சாதம் ஆகியவற்றை நிவேதனம் செய்து பூசிக்க வேண்டும். பூசிக்கும் பொழுது துர்க்கை தோத்திரமாலை படிக்கலாம்.

நல்ல மஞ்சள் நிற எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி சாற்றை வெளியேற்றி வெளிப்புறத்தை கிண்ணமாக மடக்கி சரி செய்து அவற்றில் திரி வைத்து நல்எண்ணெய், நெய், தேங்காய் எண்ணெய் இவைகளைத்தான் தீபங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். ஆயுள் பலத்துக்கு செய்யப்படும் பூசையின்போது இலுப்பெண்ணை பயன்படுத்தலாம்.

அனைத்து வளமும், நலமும் தரவல்லவள் துர்க்கை அம்பிகை. அசுரர்களினால் தேவர்களுக்கு ஆபத்து நேர்ந்தபொழுதெல்லாம், அவர்கள் அம்பிகையை வேண்டினார்கள் என்றும், அம்பிகை நவராத்திரி காலத்தில் சண்டிகையாகத் தோன்றி, ஒன்றுகூடிய வடிவங்கள் எடுத்து தீமைகளை அழித்து நன்மை புரிந்தாள் என்றும் சொல்கிறது தேவி மகாத்மியம்.

விஜயதசமி காலத்தில் அம்பிகை வெற்றிவாகை சூடினாள். ஆணவம் சக்தியாலும், வறுமை செல்வத்தினாலும், அறியாமை ஞானத்தினாலும் வெற்றி கொள்ளப்பட்ட தினம் என்பதனால், அன்றைய தினம் மிகச் சிறப்பு மிக்கதாகச் சொல்லப்பட்டுள்ளது. நவராத்திரி பூசையின் மகிமையால் மனை சிறக்கும், மங்களம் பொங்கும்.அம்பிகை மகிடாசூரனை வென்று வெற்றிவாகை சூடிய நன்நாளே விஜயதசமியாகும்.

மனித சக்தியை வளர்த்தெடுக்கும் உபாயங்களில் ஒரு மார்க்கமாகவே இந்து நெறியில் சக்தி விரதங்கள் மகிமைப்படுத்தப்பட்டுள்ளன. நவராத்திரி, கேதாரகௌரி, ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், வரலட்சுமி விரதம், பௌர்ணமி பூசை, சுமங்கலிபூசை எனவரும் விஷேட காலங்களில் உணவை விடுத்து விரதம் அனுஷ்டிப்பதால், மனிதர்களுக்குள் தேங்கிக் கிடக்கும் ஆத்ம சக்தியை வளர்த்தெடுத்து, அச்சக்தி மூலம் அவர்களினால் பெரும் கார்யசாதனைகளை ஏற்படுத்துவதே சக்தி வணக்கத்தினதும் சமய நெறியினதும் குறிக்கோளாகும்.

"எங்கெங்கு காணிலும் சக்தியடா
ஏழுகடல் அவள் வண்ண மெடா"

நாடிவரும் அடியவர்களின் வினைகளை ஓடிட வைப்பவள் அன்னை துர்க்கை அம்பிகை. பராசக்தி, ஆதிசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி, குடிலாசக்தி என்ற ஆறுசக்திகளும் சிவபெருமானின் தனிப்பெரும் கருணையின் விளைவாகும். அதனால் தோற்றுவிக்கப்பெற்றதே பிரணவமாகும்.

அன்னையின் அருளால் நடைபெறும் அற்புத அதிசயங்கள் ஏராளம். அன்னையை வழிபட்டால் கிடைக்கும் ஆனந்தமோ தாராளம்.

# திருவிளக்குப் பூசை

குத்துவிளக்கு மும்மூர்த்திகளின் ஸ்வரூபமாக ஆகமத்தில் கூறப்படுகிறது. ஆசனமான குத்துவிளக்கின் அடிப்பாகம் ஆத்மதத்துவம், பிரமஸ்ரூபம் எனப்படும் தண்டாகிய மத்தியபாகம் வித்தியாதத்துவம், விஷ்ணு விஸ்வரூபம் எனப்படும் தலைப்பாகம் சிவத்தத்துவம் சிவன்ரூபம் எனப்படும். எனவே இந்த விளக்குப்பூசை மும்மூர்த்திகளையும் விளக்கி நிற்கிறது.

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்று மூன்று பாகங்களாகவும் மூன்று தத்துவங்களாகவும் மும்மூர்த்திகளாகவும் மூன்று சக்திகளாகவும் இருக்கக்கூடிய குத்துவிளக்கை ஏற்றுவதற்கு மூன்று பொருட்கள் தேவை. அவை எண்ணெய், திரி, தீ என்பனவாம். என்னைத் திருத்தி நல்வழிப்படுத்துவாயா என்று தீபசொருபமாக இருக்கக்கூடிய இறைவனைப் பிரார்த்தனை செய்கிறோம்.

ஐந்து முக விளக்கின் விளக்கமானது அன்பு, மனஉறுதி, நிதானம், புத்திக்கூர்மை, சகிப்புத்தன்மை ஆகிய நல்ல ஐந்து குணங்களையும் நமக்குத் தருவது தான் ஐந்து முகங்களின் விளக்கமாகும். மேற்படி விளக்கை ஏற்றி வழிபடுவதன் நோக்கம் ஒருகுடும்பம் சீரும் சிறப்புமாக இருக்க வேண்டும் என்றால் இந்த ஐந்து குணங்களும் அந்தக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் இருந்தாலே போதும்.

திருமணமாகி புதுவாழ்வை வாழப்போகும் பெண்களுக்கு அளிக்கக்கூடிய சீர்வரிசையில் குத்துவிளக்கு முதலிடம் பெறுகிறது. குத்துவிளக்கின் ஐந்து முகங்களும் ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய ஐந்து குணங்களை குறித்து நிற்கிறது. ஐந்து குணங்களும் சேர்ந்தாற்போல பிரகாசிக்க வேண்டும் என்பதற்காகவே திருமண வைபவங்களில் குத்துவிளக்கு முதலிடம் பெறுகிறது.

மனித வாழ்வுக்கு மிக முக்கியமானது நல்ல சிந்தனைகள். இது விளக்கிற்கு நல்ல எண்ணெய் போன்றது. நல்ல எண்ணம் இல்லாவிட்டால் மனிதர்களும் எண்ணெய் இல்லாத திரியின் கதியை அடைய நேரிடும். இறைவனைச் சிந்திப்பதே நல்ல எண்ணமாகும்.

எண்ணெய் இல்லாத்திரி ஒரு சில விநாடிகள் பெரிய வெளிச்சமாக பரந்த கூர்விட்டுப் பிரகாசிக்கும். இதே போல் இறை சிந்தனை இல்லாத வெற்று மனிதர்களும் சிறிது காலம் புகழோடு பிரகாசிக்க முடியும். பின்னர் எண்ணெய் இல்லாத் திரி ஒர் சில விநாடிகள் கூர்விட்டுப் பிரகாசித்து பின் அணைவதுபோல் அவர்கள் இருப்பார்கள். இடம் தெரியாமல் போய்விடுவார்கள். இது தான் உலக நியதி.

எண்ணெய் உள்ள விளக்கு நீடித்த நேரம் நின்று பிரகாசித்து வெளிச்சத்தை தரும். அதே போல் இறைபக்தி உடையவர்களின் வாழ்க்கையும் நீடித்தகாலம் புகழோடு வாழ்வார்கள்.

விளக்கு இலட்சுமி வடிவம். எனவே தான் அம்பிகையாக வழிபடுகிறார்கள். எந்த நேரமும் சுவாமி அறையில் தீபம் பிரகாசித்தால் இங்கு தீபஒளி பிரகாசிப்பது போல் செல்வச் செழிப்பும் பலித்தோங்கும். இல்லமும் லட்சுமிகரத்துடன் விளங்கும்.

நாம் ஒரு நல்ல காரியம் செய்யும்பொழுது மஞ்சள் அல்லது சாணத்தில் பிள்ளையாரை வைத்து நிறைகுடம் வைத்து குத்துவிளக்கு ஏற்றி பழம் பாக்கு வெற்றிலை வைத்து தூடம் ஏற்றி வணங்குகிறோம். இந்த மூன்றினதும் விளக்கம் என்ன? பிள்ளையார் வலது புறம், நடுவில் நிறைகுடம், சிவன் இடப்பக்கம் இருக்கும் குத்துவிளக்கு அம்பாள். இதுவே இதன் விளக்கமாகும். மங்கள காரியங்கள் அமங்கள காரியங்கள் எல்லாவற்றிற்கும் குத்துவிளக்கு முதலிடம் பெற்று நிற்கின்றது.

இறைவன் ஜோதி வடிவானவன். எனவே தான் தீபாராதனையின் போது தீபஜோதியைப் பார்த்து இறைவனைக் காண்பது போல் பாவனையில் வணங்குகிறோம். "தீபஜோதி மங்களம்" என நாயன்மார்கள் அருளாளர்கள், ஆழ்வார்கள் எல்லோரும் இறைவனின் ஜோதி வடிவை திருமுறைப்பாடல்களில் பாடி வழிபாடு செய்துள்ளார்கள்.

1. "ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே"என்றார் அப்பர் பெருமான்.
2. "தூண்டாமணி விளக்கின் சுடர் அணையர்" என்றார் சுந்தரர்.
3. "ஜோதியில் ஒரு ஜோதியன்" என்றார் சம்பந்தப் பெருமான்.
4. "ஜோதியில் சுடரே ஒளி விளக்கே" என்றார் மாணிக்கவாசகர்.

"ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே" என்றார் மாளிகைத்தேவர்.

6. "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியே" என்றார்.

இன்னும் எத்தனையோ அருளாளர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் எல்லாம் இறைவனை ஜோதி ரூபமாகவே பாடியுள்ளார்கள்.

அறுபத்தி மூன்று நாயன்மார்களில் மூன்று நாயன்மார்கள் விளக்கேற்றி வழிபாடு செய்து முத்தி அடைந்திருக்கிறார்கள். கலியநாயனார் தன்முகத்தை அரிந்து உதிரத்தையே எண்ணெய்யாகக் கொண்டு விளக்கேற்ற முனைந்து சிவன் அருள் பெற்றார். கணம்புல்ல நாயனாரோ தனது தலைமுடியை திரியாக்கி விளக்கேற்றி முத்தியடைந்தார். நமிநந்தியடிகள் சிவ அனுக்கிரகத்தால் தண்ணீரில் விளக்கேற்றி அற்புதம் செய்து முத்தியடைந்தார். உறுதியான பக்தியுடன் வழிபாடு செய்தால் இறைவன் நமக்கு அனுக்கிரகம் செய்வார்.

திருவிளக்கு

திருவிளக்கென்பது திருவும் மாலும் இணைந்த இலட்சுமி நாராயணர் வடிவமே திருவிளக்காகும். திருவிளக்கு வழிபாடு இந்து சமயத்தில் உன்னதமான வழிபாடாகும். உலகெல்லாம் நிறைந்து விளங்கும் இறைவனை இறைவியை நம் இல்லத்தில் எழுந்தருளச் செய்ய திருவிளக்கு வழிபாடு துணைபுரியும். வேதரிஷிகள் ஹோமத் தீ வளர்த்து இறைவனை வழிபட்டார்கள். அந்த மரபைத் தழுவியே திருவிளக்கு வழிபாடு எழுந்தது.

பொதுவாக இல்லங்களில் குத்துவிளக்கு அல்லது காமாட்சி விளக்கு ஏற்றி இறைவழிபாடு தொடங்குவது வழக்கம்.

காமாட்சி இறைவனைப் பூசை செய்த தத்துவத்தில் அமைந்தது தான் காமாட்சி விளக்கு. அதனை ஏற்றி வழிபடும் போது அம்பிகையே வந்தமர்ந்ததாக ஐதீகம். அதனால் தான் விளக்கின் அமைப்பு சிம்மாசனம் போல் அமைந்துள்ளது.

அம்பிகை விளக்கின் பிரகாசிக்கும் சுடர்தான் சிவவடிவம் என்று கூறப்படுகிறது. தீப்பொறியில் தோன்றிய கந்தக்கடவுள் காந்தமலை ஜோதியாக கலியுகத்தில் காட்சி தரும் ஐயப்பசுவாமி எனத் தெய்வங்கள் அருள் புரிவது திருவிளக்கில் தான் என்று விளக்குகின்றன புராணங்கள்.

இப்படியான அருள்மிகு விளக்கை கையால் வீசியும், வாயால் ஊதியும் அணைக்கக்கூடாது. திரியை பொதுவாக விளக்கின் உள்ளே இழுத்து ஒளியை எண்ணெய்யில் மறையச் செய்ய வேண்டும். அல்லது புஸ்ப்பத்தால் ஒத்தி அணைக்க வேண்டும்.

"விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன் பிறப்பே
ஜோதி மணிவிளக்கே சீதேவி பொன்மணியே"

என்று தொடரும் திருவிளக்ககவல் பாடி விளக்கை ஏற்றி விட்டு

"சேவித்தெழுந்திருந்தேன் தேவி வடிவங் கண்டேன்
மாதாவே உந்தன் மலரடியில் நான் பணிந்தேன்"

என்னும் தோத்திரம் பாடி நமஸ்காரம் செய்ய வேண்டும்.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங்காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

## ஸ்ரீ பைரவர் அருட்கடாட்சம் பெற

## தேய்பிறை அஷ்டமி விரத வழிபாடும் பலன்களும்

எல்லா சிவ ஆலயங்களிலும் ஈசான்ய மூலை எனப்படும் வடகிழக்கு திசையில் நீலமேனியராய், நாய் வாகனத்துடன் பைரவர் காட்சி தருவார். காலையில் ஆலயம் திறந்தவுடனும், இரவு அர்த்தஜாமத்தில் பூஜை முடிவுறும் போதும் பைரவருக்கு என்று விசேஷ பூஜைகள் செய்யப்பட வேண்டும் என்று பார்த்த நித்யபூஜா விதி கூறுகிறது.

ஸ்ரீ பைரவருக்குப் பவுர்ணமிக்கு பின்வரும் தேய்பிறை அஷ்டமியில் பஞ்சதீபம் ஏற்றி வழிபட்டால் காலத்தினால் தீர்க்கமுடியாத தொல்லைகள் நீங்கும், நல்லருள் கிட்டும். இலுப்பைஎண்ணை, விளக்குஎண்ணை, தேங்காய்எண்ணை, நல்லெண்ணை, பசுநெய் இவற்றினை தனித்தனி தீபமாக அகல் விளக்கில் ஏற்றலாம்.

ஒன்றிலிருந்து ஒன்றை ஏற்றாமல் தனித் தனி தீபமாக ஏற்றி வழிபட்டால் எண்ணிய காரியங்கள் நிறைவேறும் என்பது ஐதீகம். ஆறு தேய்பிறை அஷ்டமிகளில் பைரவரை சிவப்பு நிற அரலியால் வழிபட்டால் நல்ல மக்கள் செல்வங்களைப் பெறலாம்.

அஷ்டமி திதியில் மற்றும் பிரதி தமிழ் மாதம் எல்லாத் தேதியிலும் ஆயிலியம், சுவாதி, மிருகசீரிஷம் நட்சத்திர தினங்களிலும் பைரவரை வழிபட்டால் உத்தியோகத்தில் மதிப்பும், பதவி உயர்வும் கிட்டும். தொழிலில் லாபம் கிட்டும். சனி பிரதோஷத்தன்று பைரவருக்கு தயிர் அன்னம் படைத்து வழிபட்டால் வழக்குகளில் வெற்றி கிட்டும்.

தேய்பிறை அஷ்டமியில் பஞ்சதீபம் ஏற்றி வழிபட்டால் காலத்தினால் தீர்க்கமுடியாத தொல்லைகள் நீங்கும், நல்லருள் கிட்டும். பஞ்சதீபம் என்பது இலுப்பைஎண்ணை, விளக்குஎண்ணை, தேங்காய்எண்ணனை, நல்லெண்ணை, பசுநெய் ஆகும். இவற்றை தனித்தனி தீபமாக ஏற்ற வேண்டும். அகல் விளக்கில் ஏற்றலாம்.

ஸ்ரீ பைரவருக்கு இந்த பஞ்சதீபம் ஏற்றி வழிபட்டால் எண்ணிய செயல்கள் நிறைவேறும் என்பது ஐதீகம். தை மாதம் முதல் செவ்வாய்க்கிழமை தொடங்கி ஒவ்வொரு செவ்வாய் தோறும் பைரவரை வணங்கி கால பைரவ அஷ்டகம் படித்து வந்தால் எதிரிகள் அழிந்து, கடன்கள் தீர்ந்து, யம பயம் மட்டுமில்லாது எவர் பயமுமின்றி நீண்டநாள் வாழலாம்.

வாழ்க்கையில் தரித்திரம் வராமல் காத்து செல்வச் செழிப்பை வழங்குபவர். ஸ்வர்ணாகர்ஷண பைரவரை வடக்கு திசை நோக்கி அமர்ந்து வழிபடுவது சிறப்பு. திருவாதிரை நட்சத்திரத்தில் வழிபடுவதால் சிவனது அருள், செல்வம் கிட்டும். தாமரை மலர் மாலை, வில்வ இலை மாலை போட்டு வணங்குவது சிறப்பு.

தேய்பிறை அஷ்டமி திதிகளில் சிகப்பு நிற ஆடை அணிந்து, நெய் விளக்கு ஏற்றி, வடைமாலை சாற்றி, சிகப்பு நிற மலர்களைக் கொண்டு அர்ச்சித்து, வெள்ளைப் பூசனியில் நெய் தீபம் ஏற்றிவர நல்ல பலன் கிடைக்கும். ஞாயிற்றுக்கிழமை மாலை ராகு கால நேரத்தில் பைரவருக்கு 11 நெய் தீபம் ஏற்றி விபூதி அல்லது ருத்திராபிஷேகம் செய்து, வடைமாலை சாற்றி சகஸ்ரநாம அர்ச்சனை செய்து வழிபட்டால் திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும்.

பைரவரை வழிபாடு செய்வதால் வறுமை, பகைவர்களின் தொல்லைகள், பயம் நீங்கி அவர் அருளால் அஷ்ட ஐஸ்வர்யங்களும், தன லாபமும், வியாபார முன்னேற்றம். பணியாற்றும் இடங்களில் தொல்லைகள் நீங்கி மனத்தில் மகிழ்ச்சியைப் பெறலாம்.

நம்பிக்கையுடன், பக்தியுடன் சொர்ணாகர்ஷண பைரவர் படத்தை வீட்டில் வைத்து தினந்தோறும் தூப தீபம் காட்டி வழிபட்டு வருவதுடன் தேய்பிறை அஷ்டமி திதியில் திருவிளக்கு பூஜை செய்து பலவிதமான மலர்களைக் கொண்டு பூஜித்து வணங்கி வந்தால் வீட்டில் செல்வச் செழிப்பு ஏற்படும். வியாபாரிகள் கல்லாப் பெட்டியில் சொர்ண ஆகர்ஷண பைரவர், பைரவி சிலை அல்லது படத்தை வைத்து பூஜித்து வர கடையில் வியாபாரம் செழித்து செல்வம் பெருகி வளம் பெறுவார்கள்.

தினமும் பைரவர் காயத்திரியையும், பைரவி காயத்திரியையும் ஓதி வந்தால் விரைவில் செல்வம் பெருகும். வெல்லம் கலந்த பாயாசம், உளுந்து வடை, பால் தேன் பழம், வில்வம் இலைகளால் மூலமந்திரம் சொல்லி அர்ச்சனை செய்ய தொழில் விருத்தியாகும்.

ஸ்வர்ணாக ரஷண பைரவ அஷ்டகம் தனச்செழிப்பைத் தரும். வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை இரண்டு நாட்களிலும் சந்தியா காலங்களில் படிப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றியையும், தன விருத்தியையும் அடைவார்கள்.

பவுர்ணமி அன்று இரவு எட்டு மணிக்கு தீபத்தை ஏற்றி வைத்துக் கொண்டு 18 முறை பாராயணம் செய்ய வேண்டும். இவ்விதம் ஒன்பது பவுர்ணமிகளில் பாராயணம் செய்தால் கண்டிப்பாக தன வரத்தை அடையலாம். நீண்ட நாட்களாக உள்ள வறுமையிலிருந்து விடுபடலாம். 9 வது பவுர்ணமியன்று அவலில் பாயாசம் நைவேத்தியம் செய்யலாம்.

கார்த்திகை மாதம் தேய்பிறை அஷ்டமி பைரவருக்கு ஜென்ம அஷ்டமி ஆகும். இந்த தினத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாதமும் தேய்பிறை அஷ்டமி அன்று பைரவர் வழிபாடு நடத்தப்படுகிறது. ஒருவரின் உண்மையான கோரிக்கைகளை நம்பிக்கையுடன் பைரவரிடம் வேண்டும் போது 30 தினங்களுக்குள் நிறைவேறுகிறது.

சித்திரை பரணி, ஐப்பசி பரணி போன்ற மாதங்களில் வரக்கூடிய பரணி நட்சத்திரம் கால பைரவருக்கு விசேஷ நாட்கள் ஆகும். ஏனெனில் பரணி நட்சத்திரத்தில் தான் பைரவர் அவதரித்தார். எனவே பரணி நட்சத்திரக்காரர்கள் பைரவரை வழிபட்டால் புண்ணியமும், பலனும் அதிகம் கிடைக்கும்.

தை மாதம் செவ்வாய்க்கிழமைகளில் பைரவரை வழிபட்டு விரதம் இருப்பது மிகுந்த பலன்களைக் கொடுக்கும். எல்லா அஷ்டமிகளிலும் பைரவர் விரதம் இருக்கலாம். ஆனால் செவ்வாய்க்கிழமைகளில் அஷ்டமி இணைந்து வந்தால் அதைவிடச் சிறப்பான நாள் ஏதுமில்லை. குறைந்தபட்சம் 21 அஷ்டமிகள் தொடர்ந்து விரதம் இருக்க வேண்டும்.

அதிகாலையில் நீராடி பைரவரை மனதில் நினைத்து வணங்க வேண்டும். பகலில் ஏதாவது ஒரு பொழுது மட்டும் எளிய உணவு சாப்பிடலாம். இரவில் கண்டிப்பாக சாப்பிடக்கூடாது. அன்று மாலை பைரவருக்கு வடை மாலை சாற்றி வழிபட வேண்டும். வசதி குறைந்தவர்கள் ஒரு தீபம் மட்டும் ஏற்றினால் போதும்.

மறுநாள் நவமி அன்று காலை மீண்டும் கோவிலுக்கு சென்று விநாயகர், சிவன், அம்பாள், பைரவரை வணங்கி, ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்க வேண்டும். சிறிதளவு சர்க்கரைப் பொங்கல் செய்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் நல்லது. பிறகு வீட்டுக்கு எந்தக் கெடுதலும் வராது என உறுதிமொழி எடுக்க வேண்டும். சாப்பிட்டு விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். பைரவ விரதத்தின் நோக்கமே கேடுகளை அழிப்பதுதான்.

திருநீறு

இதனை விபூதி என்றும் கூறுவர். திருநீற்றின் சிறப்புப்பற்றித் திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடியிருக்கிறார். அவற்றுள் ஒன்று பின்வருமாறு:

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனிவது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே

சைவர்கள் என்பதற்கு முதல் அடையாளம் திருநீறு. திருநீற்றை நெற்றி நிறையப் பூசுவதே முறை. துறவிகள் திருநீற்றை உடல் முழுவதும் பூசவேண்டும் என்பது விதி. திருநீறு அணிவதன் நோக்கம் இறைவனைச் சதா சிந்தனை செய்து, அதன் மூலம் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவற்றைத் தவிர்க்க முயல்வது ஆகும். நீறில்லா நெற்றி பாழ் என்று ஔவைப்பாட்டி பாடியதும் அதனாலேதான். நெற்றி என்பது இங்கே கல்வியைக் குறிக்கின்றது. எவ்வளவு கற்றிருந்தாலும், நம்முடைய சகட்டுத் தன்மையை அகற்ற வேண்டும் என்ற சிந்தனை இல்லாவிட்டால், கற்ற கல்வியால் பயனில்லை என்பதே நீறில்லா நெற்றி பாழ் என்பதன் பொருள். நீறு என்றால் சாம்பல் பொடி என்று பொருள். எல்லாம் அழிந்து போனால் சாம்பல் மட்டுமே மிஞ்சும் என்று கூறி வாழ்வின் நிலையாமையை நினைப்பூட்டவே நீறு அணிய வேண்டும் என்று முன்னோர்கள் விதித்திருக்கிறார்கள். அந்தச் சாம்பலைச் சிவன் அணிந்திருப்பதன் நோக்கம், எல்லாம் அழிந்த பின்னும், கடவுள் ஒருவனே மிஞ்சி இருப்பான் என்பதைக் காட்டுவதே ஆகும்.

# பிள்ளையார் பெருங்கதை – விநாயகர் சஷ்டி விரதம்

பிரணவ வடிவமே விநாயகர். தமக்கு மேலான நாயகர் இல்லாத பெருமான் என்பதே சொற்பொருள். தேவர், மனிதர் முதலிய யாவராலும் முதலில் வழிபடப்படுபவர் மூத்த பிள்ளையாரே. "விக்கின விநாயக பாத நமஸ்தே" என்பர் வட நூலார். தம்மை நினைப்பவரது இடையூறுகளைப் போக்கியும், நினையாதார்பால் துன்பங்களை உருவாக்கியும் விளங்குவதால் விநாயகருக்கு விக்கினேசுவரர் என்ற திருநாமமுளதாயிற்று. சிவபிரான், திரிபுர தகனம் செய்யச் செல்லுங்கால் நினையாமையால் அவர் சென்ற தேரின் "அச்சது பொடி" செய்தார் என்பர். திருப்பாற்கடல் கடையும்போது திருமால் முதலினோர் விநாயகரை வணங்காமையால், கணேச மூர்த்தி மந்தர மலையைச் சாய்த்தனர் என்றும் கூறுவர்.

ஔவையார் பூசையை ஏற்று அவரை கயிலையில் சேர்த்த அனுக்கிரக மூர்த்தி விநாயகரே! சேரமான் குதிரை கயிலை சேரமுன் ஔவையாரை விநாயகப் பெருமான் துதிக் கையாலெடுத்துக் கயிலையில் இட்டனர். இதனால், "கிழவியுங் காதம், குதிரையுங் காதம்" என்றனர் முன்னோர்.

முழுமுதற் கடவுளான விநாயகர் அருள் பெற பல வகை விரதங்கள் உள்ளன. அவற்றுள் "விநாயக சஷ்டி" என்ற விரதம் தனிசிறப்பு கொண்டது. கந்த சஷ்டி விரதம் போல விநாயகர் சஷ்டியும் மகத்துவம் நிறைந்தது. கார்த்திகை மாசம் அபரபக்கப் பிரதமை முதல் மார்கழி மாசத்துப் பூர்வ பக்கச் சஷ்டி வரையும் உள்ள இருபத்தொரு நாட்கள் இந்த விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த 21 நாட்களும் விநாயகருக்கு திருமஞ்சனம் முதலியவைகளைச் சிறந்த முறையில் செய்வித்து, ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு விதமான இருபத்தொரு வகையான பணியாரங்களை நிவேதித்தல் வேண்டும். முதல் இருபது நாட்களில் ஒருபோது உண்டு, பிள்ளையார் கதையைப் பெரியோர்கள் சொல்லக் கேட்டுக்கொண்டு எப்போதும் தியானத்தில் இருப்பவர்களாக நாட்களைக் கழித்தல் வேண்டும். இறுதிநாள் மட்டும் உணவை விடுத்து மறுநாநாட் காலையில் பாரணை செய்து விரதத்தை முடித்துக் கொள்ளுதல் மரபு. ஈழத்தில் உள்ள விநாயகர் ஆலயங்களில் இவ்விரத காலங்களில் வரத பண்டிதரின் பிள்ளையார் கதை, விநாயக புராணம் என்பனவற்றைப் படனம் செய்யும் வழக்கம் நெடுங்காலமாகப் பேணப்பட்டு வருகின்றது. விநாயகர் விரதத்தின் சிறப்பினையும், அதனை அனுஷ்டிப்பதால் அடையும் நன்மைகளையும் எடுத்துக்கூற பல புராணக் கதைகள் சொல்லப்பட்டுள்ளன.

மாகத முனிவருக்கும் வீபூதி என்ற அசுரப்பெண்ணிற்கும் பிறந்த அசுரன் கஜமுகன். இவன் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து எந்த ஆயதங்களாலும் அழியாத வரம் பெற்றான். வரம் பெற்ற மமதையில் இந்திரன் முதலான தேவர்களுக்கு இடர் விளைவிக்க, அவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவ-சக்தியின் வேண்டுதலினால் விநாயகர் தன் பூதப்படைகள் சூழ கஜமுகனின் மதங்கபுரத்தை முற்றுகையிட்டார். போர் மூண்டது. அவன் விட்ட பாணங்களை எல்லாம் விநாயகர் தன் கையில் உள்ள உலக்கையினால் தடுத்து, அதனைக்கொண்டே அவனை அடித்தார். கஜமுகன் மயங்கி விழுந்தான். ஆனால் இறக்கவில்லை. அவன் பெற்ற வரம் நினைவுக்கு வரவே, விநாயகர் தன் கொம்புகளில் ஒன்றை ஒடித்து அவன் மீது ஏவினார் அவன் பெருச்சாளியாக (மூஷிஹும்) உருமாறி விநாயகரைத் தாக்க வந்தான். விநாயகர் அதனை அடக்கி தன் வாகனமாக்கிக் கொண்டார்.

ஒரு முறை சிவபெருமானும் உமாதேவியும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்த போது மகாவிஷ்ணு பொய்ச்சாட்சி சொல்லும்படி ஆகிவிட்டது. அவ் விளையாட்டில் சிவபெருமான் தோற்றுப் போகவே சிவபெருமான் சாட்சியாக நின்ற மகாவிஷ்ணுவைப் பார்த்து கண்ணால் ஜாடை காட்டி யார் வென்றது எனக் கேட்க விஷ்ணுவும் செய்வதறியாது தோற்றவராகிய சிவபெருமானே வென்றதாகவும், வென்ற உமாதேவியார் தோற்று விட்டதாகவும் பொய்ச்சாட்சி கூறிவிட்டார். அதனால் கோபமுற்ற உமாதேவி மகாவிஷ்ணுவைக் குருட்டு மலைப்பாம்பாகப் போகுமாறு சபித்துவிட்டார். அவருக்கு ஆறுதல் கூறிய சிவபெருமான் கயமுகாசுரவதம் நடைபெறும் வரை காத்திருக்குமாறு சொன்னார். விநாயகர் கஜமுகாசுரனுக்கு முத்தி கொடுத்த பின்னர் கணபதீச்சரத்தில் இருந்து மூஷிக வாகனத்தில் திரும்பும் வழியில் ஆலங்காட்டில் மலைப் பாம்பாக மாறியிருந்த மகாவிஷ்ணுவைக் கண்ணுற்றார். அவர் பார்வை பட்ட மாத்திரத்தில் மகாவிஷ்ணு தம் சுய உருவைப் பெற்றார். மகிழ்ச்சி அடைந்தார். விநாயகரே! எனக்குக் காட்சியளித்து நன்மை புரிந்த இந்த மார்கழித் திங்கள் சஷ்டி நாளில் உம்மை யார் வழிபட்டாலும் அவர்கள் சகல துயரங்களில் இருந்தும் விடுபட்டுச் சகல விருப்பங்களையும் அடையும்படி அருள் புரிய வேண்டும் என்று கோரினார். அதற்கு மகிழ்ச்சியோடு விநாயகரும் இசைந்தார்.

இது விநாயக சஷ்டி என்றும் மார்கழி சஷ்டி, குமார சஷ்டி, பெருங்கதை விரதம் என்றும் கூறப்படுகிறது. கார்த்திகைத் திங்கள் கிருஷ்ண பட்சப் பிரதமை முதலாக மார்கழித் திங்கள் (வளர்பிறை) சஷ்டி இறுதியாகவுள்ள இருபத்தொரு நாளும் இந்த விரதம் கடைப்பிடிக்கப்பெறுகிறது. சைவர்களுக்கு இக்காலம் மிகவும் புனிதமான காலமாகும்.

## விநாயகரும் தத்துவங்களும்

தத்துவங்கள் தோன்றும் முறையில் முதற்கண் சுத்தமாயையில் இருந்து "ஓம்" என்ற பிரணவ நாதமே தோன்றியது. பிள்ளையார் பிரணவ வடிவினர் ஆதலால் "பிரணவன்" என்றும் "மூத்த பிள்ளையார்" என்றும் அறியப்படுகின்றது. "ஓங்கார நாத தத்துவம்" சிவனையும் சுட்டிநிற்பதால் சிவனும், பிள்ளையாரும் ஒன்றேயென்றும் கொள்ளமுடிகின்றது. பிரணவத்தை முற்றறிந்தவர் என்பதால் பிரணவன், பிரணவநாதன் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார். "ஓம்" என்ற பிரணவ மந்திர ரூபியான அவர் ஞானமே வடிவானவர். அவரது திருமேனியை ஒரு தத்துவ வித்தென ஆன்றோர் விஸ்தரித்துள்ளனர். அவருடைய இரு திருவடிகளிலே வலது திருவடியை "முற்றறிவு" அதாவது "ஞானசக்தி" என்றும் "இடது திருவடியை" முற்றுத்தொழில் அதாவது "கிரியாசக்தி" என்றும் உணர்த்தப்படுகிறது. அவ்விரு திருவடிகளின் துணையின்றி உயிர்கள் ஒன்றினை அறிந்து கொள்ளவோ, செயலாற்றவோ முடியாது.

எல்லாப் பொருட்களையும் ஆகாயம் தன்னுள் அடக்கவும், உண்டாக்கவும், விரிக்கவும், ஒடுக்கவும் கூடிய தன்மையைக்கொண்ட பரந்து விரிந்த ஒரு பூதம். ஆகாயம் போலவே சகலவற்றையும் உள்ளடக்கியதாகவே அவரது பேருந்தி காட்சி கொடுக்கின்றது. சுருக்கமாக சொல்வதானால், ஆனைமுகனின் பானை வயிற்றில்தான் (புவியும்) பிரபஞ்சமே அடக்கம் என்பர். அவன் செயல் புவி ஈர்ப்பு விசையிலும் மேலானது. அத்தனை அண்டங்களையும் கட்டி இழுத்திடும் விசை என்றும், வழிமாறிப் போனவற்றை சமன் செய்யும் விசை என்றும் போற்றுகின்றனர். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்சகிருத்தியங்களையும் அவர் தனது ஐந்து கரங்களால் இயற்றுகின்றார் எனப்படுகின்றது. ஐந்து கருமங்கட்கும் அவரே அதிபதி என்பதனால் அவருக்கு "ஐங்கரன்" என்ற நாமம் விளங்குகின்றது. அவரை "பஞ்சகிருத்திகன்" என்றும் கூறுவர். அவரது முற்றறிந்த ஞானத்தை முறம் (சுளகு) போன்று பரந்து விரிந்த இருசெவிகளும் விளங்குகின்றன.

வலது பக்கமுள்ள ஒடிந்த கொம்பு "பாசஞானத்தையும்" இடது பக்கமுள்ள கொம்பு "பதிஞானத்தையும்" உணர்த்துவதாக உள்ளன. விநாயகரின் அடிக்கீழ் மூஷிகம் அழுந்தி அமைதியாகக் காணப்படுவதை, பிரணவ மூர்த்தியின் அடிக்கீழ் ஆணவ மலம் வலிகெட்டு அமைதி காக்கும் என்பதை விளக்குகிறது. அவரது உந்தியைச் சுற்றியுள்ள சர்ப்பம் "குண்டலி சக்தியின்" வடிவம் என்பர். அதன் விரிவுகளும், சுருக்கங்களுமே பிரபஞ்சத்தின் தோற்றம், சுருக்கம் எனப்படுகின்றது. அதை அவர் உந்தியில் அணிந்திருப்பதானது, உலகிற்கு நிமித்த காரணர் அவர்தாம் என்பதையும் உணர்த்துகின்றது.

மேலும் விநாயகர் முக்கண் உடையவரெனவும் விளக்கப்பட்டுள்ளது. முக்கண்ணுடைய பெருமை சிவனுக்கே உரியது. ஆயினும் கிரியா வழி, ரூப வழி நோக்குமிடத்து சிவனும் பிள்ளையாரும் ஒன்றே எனும் தத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். மேலும், விநாயகருக்கு "சித்தி" "புத்தி" என இரு சக்திகள் உள்ளதாகவும் புராணங்களில் செல்லப்படுகின்றது. விநாயகரின் வலது முன்கை அபய முத்திரையைக்காட்டும்.

வலது பின்கையில் மழுவாயுதமும், இடது முன்கையில் மோதகம் அல்லது மாதுளம்பழம் வைத்திருப்பது போலவும், இடது பின் கையில் பாசக் கயிறோ அல்லது செந்தாமரை மலரோ கொண்டிருப்பது போலவும் சித்தரிக்கப்படுகின்றது. துதிக்கையில் நீர்க் கலசம் ஜகமண்டலம் ஒன்றை ஏந்தியிருப்பார். செம்பட்டு வஸ்திரத்தையே அணிந்திருப்பார். விநாயகருக்கு உகந்த முக்கிய நிவேதனப் பொருட்கள் மோதகம், கொழுக்கட்டை, பஞ்சாமிர்தம், தேங்காய், அப்பம், அவல், பொரி, கரும்பு, சர்க்கரை முதலியனவாகும். செம்மலர்கள், அறுகம் புல் ஆகியவற்றைக் கொண்டு விநாயகரை அர்ச்சிப்பது மிகச் சிறந்தது.

உலகிலுள்ள சைவ மக்கள் எதையாவது எழுதத் தொடங்கும் பொழுதும், எழுதும் தாளின் தலைப்பில் முதலாவதாக "பிள்ளையார் சுழி" எழுதிய பின்னரே விடயத்தை எழுதத் தொடங்குவர். பிள்ளையார் சுழி "உ" என்ற ஒரு வட்டமும் ஒரு கோடும் இணைந்து இருக்கும். இதற்கு ஒரு தத்துவம் உண்டு. பூஜ்ஜியமான வட்டத்தை "0" பிந்து என்றும், தொடர்ந்துவரும் கோட்டை "நாதம்" என்றும் கொள்கின்றனர்.

எனவே பிள்ளையார் சுழியை "நாதபிந்து" என்பர். பிள்ளையாருடன் சிவசக்தியின் இணைப்பை இது உணர்த்துவதாக உள்ளதெனக் கூறப்படுகின்றது. எக்கருமத்தையும் ஆரம்பிப்பதற்கு முன்னர் பிள்ளையாரை வழிபட்ட பின்னரே ஆரம்பிக்கும் வழக்கம் சைவ மக்களிடையே காலாதிகாலமாக நிலவிவருகின்றது. அவரை வழிபட்டுத் தொடங்கினால் செய்கருமம் இடையே எதுவித விக்கினங்களும் இன்றி நிறைவுபெறும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

# கந்தசஷ்டி விரதமும் அதன் சிறப்பும்

"அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி"

சஷ்டி விரதம் ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையின் பின் அதாவது வளர்பிறை பிரதமை முதல் ஆரம்பித்து, ஆறாம் நாளான சஷ்டி திதி வரையான ஆறு தினங்களும் நோற்கப்படும் முருகப்பெருமானுடைய சிறப்பான விரதமாகும்.

அறியாமை என்னும் அஞ்ஞான இருளை அகற்றி, மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற பரம்பொருளின் முக்திப் பேரருளை அடைவதற்காகச் சைவப் பெருமக்களால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் தலையானது கந்தசஷ்டி விரதம். முருகனுக்குரிய விரதங்கள் மூன்று. அவையாவன வெள்ளிக்கிழமை (வாரம்) கார்த்திகை (நட்சத்திரம்) விரதம், கந்த சஷ்டி (திதி) விரதம் என்பனவாம். வல்வினை நீக்கி, வரும் வினை போக்கி, செல்வமும் செல்வாக்கும் தந்து: அழகும், அறிவும் தந்திடும் வள்ளி மணாளனை, வடிவேலனை வழிபடும் விரதங்களில் மிகவும் சிறந்தது இந்த கந்தசஷ்டி விரதமாகும்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களை மட்டுமன்றி ஆறுவகை எதிரிகளான காமம், கோபம், பேராசை, செருக்கு, மயக்கம், தற்பெருமை ஆகிய வற்றை அழித்து முற்றுணர்வு, வரம்பிலாற்றல், தன்வயமுடைமை, வரம்பின்மை, இயற்கையுணர்வு, பேரருள் ஆகிய தேவ குணங்களை நிலை நாட்டுவதால் "ஒப்பரும் விரதம்"என கந்தசஷ்டி விரத மகிமை பற்றிக் கந்த புராணம் சிறப்பாகப் புகழ்ந்து கூறுகிறது.

முருகன் ஆலயத்தில் பக்தர்கள் உண்ணா நோன்பிருந்து, பக்தி சிரத்தையுடன் முருகனை நினைந்துருகி வழிபட்டு, தியானத்திலும், பஜனை செய்வதிலும், கந்தரனுபூதி, கந்தசஷ்டிகவசம், கந்தரலங்காரம் ஓதுவதிலும், கந்தபுராணம்-பயன் கேட்பதிலும் தம்மை ஈடுபடுத்தி முருகனருள் வேண்டி நிற்பர்.

அத்துடன், விரத முடிவு தினமான சஷ்டி தினம் (சூரன் போரில்) முருகன் வீசும் வேல் குறிதவறாது சூரனின் சகோதரர்களான யானைமுகம் கொண்ட தாரகன், சிங்கமுகம் கொண்ட சிங்கன் கழுத்தில் வீழ்ந்து தலைகள் சாய்வதும், பல மாயைகள் செய்து போர் புரிந்து கடைசியாக, நடுக்கடலில் மாமரமாய் நின்ற சூரன்-பதுமனை சங்காரம் "சங்கரன் மகன் சட்டியில் மாவறுப்பதை" (சங்கரன் புதல்வராகிய முருகப் பெருமான் சஷ்டித் திதியிலே மாமரமாகத் தோன்றிய சூரனை, இரண்டாகப் பிளந்து சங்காரம் செய்யும் காட்சியை கண்டு) தரிசித்து தம் வினை போக்க பக்தர்கள் காதலாகி கசிந்துருகி நிற்கும் காட்சியும், கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

கொடுங்கோலாட்சி செலுத்திய ஆணவத்தின் வடிவமாகிய சூரனையும், கன்மத்தின் வடிவமாகிய சிங்கனையும், மாயா மலத்தின் வடிவமாகிய தாரகனையும், (ஆணவம், கன்மம், மாயை என்ற) அசுர சக்திகளையெல்லாம் அழித்து, நீங்காத சக்தியை கலியுக வரதனான முருகப் பெருமான் நிலைநாட்டிய உன்னத நாளே கந்த சஷ்டியாகும்.

கந்தசஷ்டி விரத நாட்களில், ஆன்மா மும்மலங்களையும் நீக்குவதற்குரிய பக்குவமான மனத்துடன் தனித்து, விழித்து, பசித்து இருக்க வேண்டும். உணவையும் உறக்கத்தையும் தவிர்த்து, தனித்திருந்து செய்யும் தவமே கந்தசஷ்டி விரதமாகும். உணர்வுகளை அடக்கி உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி கந்தப் பெருமானின் பெருமை பேசி இம்மைக்கும் மறுமைக்கும் சிறந்த வழியமைப்பதே இந்த விரதத்தின் பெறுபேறாக அமைகிறது.

கந்தசஷ்டி விரதத்தை முறையாக அனுஷ்டிப்போர்க்கு இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகிய மூன்று சக்திகளுக்கும் தலைவனான முருகப் பெருமானது பேரருள் கிட்டும். சஷ்டியன்று கந்தனுக்கு அபிஷேகம் செய்த பாலைப் பருகுவோர்க்கு புத்திர பாக்கியம் கிட்டும் என்பது ஐதீகம்.

சகல செல்வங்களையும், சுகபோகங்களையும் தரவல்ல இந்த விரதம் புத்திரலாபத்திற்குரிய சிறப்பான விரதமாகும். "சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" என்பதற்கேற்ப, கந்தசஷ்டியில் விரதமிருந்தால் "அகப்பையாகிய "கருப்பையில்" கரு உண்டாகும் என்பதும், கந்தர் சஷ்டி

விரதத்தை முறையாகக் கைக்கொள்வதால் அகப்''பை''எனும் ''உள்ளத்தில்''நல்ல எண்ணங்களும் பக்தி எனும் பாதையில் எழுந்த அமைதியும் அமையும் என்பதும் மறை பொருள்களாகும்.

அறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞானம் உதவுவதைப் போன்று மன வளர்ச்சிக்கு சமயம் அடிகோலுகின்றது. இறைவன் ஒருவன், அவன் மக்களின் தந்தை என்றெல்லாம் போதிப்பதன் மூலம் அன்பு, சகோரத்துவம்

போன்ற ஜீவ ஊற்றுக்களை அருளி மக்களின் வாழ்வு நலம் பெறச் சமயம் உதவுகிறது. நல்லவர்களைப் பாதுகாக்கவும் தீயவர்களை அடக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் யுகந்தோறும் இறைவன் அவதாரம் செய்தருளுகின்றான்.

தெய்வ அவதாரங்களில் தீய சக்திகளை அடக்கி நல்லவர்களைக் காத்தார்கள் என்றால் இச்செயல்கள் தீமைகளை நீக்கி நன்மைகளையே செய்து மக்கள் உய்யவேண்டும் என்று போதிப்பதற்கே நிகழ்ந்தன என உணர்ந்து பக்தியுடன் வாழ்ந்து இகபர நலங்களை அடைய முயலவேண்டும். இத்தகைய அவதார இரகசியத்தை விளக்கி மக்கள் உய்வதற்கு உகந்த பெருவழிகளை விளக்கிக் காட்டுவதே ஆறுமுகப் பெருமானின் அவதாரம்.

வசிட்ட மாமுனிவர் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு சஷ்டி விரத மகிமையையும் வரலாற்றையும் விதிமுறைகளையும் உபதேசித்த பெருமையுடையது. அரசர்கள், தேவர்கள், முனிவர்கள் பலரும் இந்த விரதம் அனுஷ்டித்து வேண்டிய வரங்களைப் பெற்றதோடு, இம்மை இன்பம், மறுமை இன்பம் ஆகியவற்றைப் பெற்றனர்.

**கந்தசஷ்டி விரதம் தொடர்பான புராணக்கதை**

பிரம்மாவிற்கு தக்கன், காசிபன் என்னும் இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்களுள் தக்கன் சிவனை நோக்கி கடுந்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்றிருந்த போதிலும் இறுதியில் சிவனால் தோற்றுவிக்கப்பெற்ற வீரபத்திரக் கடவுளால் கொல்லப்பட்டார். காசிபனும் கடுந்தவம் புரிந்து சிவனிடமிருந்து மேலான சக்தியைப் பெற்றான். ஒருநாள் அசுரர்களின் குருவாகிய சுக்கிரனால் (நவக்கிரகங்களுள் வெள்ளியாகக் கணிக்கப்படுபவர்) ஏவப்பட்ட மாயை என்னும் பெண்ணின் அழகில் மயங்கி தான் பெற்ற தவ வலிமை எல்லாவற்றையும் இழந்தான்.

இதனைத் தொடர்ந்து காசிபனும் மாயை என்னும் அசுரப் பெண்ணும் முதலாம் சாமத்தில் மனித உருவத்தில் இணைந்து மனித தலையுடன் கூடிய சூரனும், இரண்டாம் சாமத்தில் சிங்க உருவில் இருவரும் இணைந்து சிங்க முகத்துடன் கூடிய சிங்கனும், மூன்றாம் சாமத்தில் யானை உருவில் இணைந்து யானை முகத்துடன் கூடிய தாரகனும், நான்காம் சாமத்தில் ஆட்டின் உருவத்தில் இருவரும் இணைந்து ஆட்டுத் தலையுடன் கூடிய அசமுகி என்னும் அசுரப் பெண்ணும் பிறந்தனர்.

மாயை காரணமாகத் தோன்றிய இந்நால்வரும் ஆணவ மிகுதியால் அகங்கார மமகாரம் (செருக்கு) கொண்டு காணப்பட்டனர். இவர்களுள் சூரபதுமன் சிவனை நோக்கி கடுந் தவம் புரிந்து 108 யுகம் வாழவும், 1008 அண்டம் அரசாளும் வரத்தையும், இந்திரஞாலம் எனும் தேரையும், சிவன் சக்தி அன்றி வேறு ஒரு சக்தியாலும் அழிக்க முடியாது எனும் வரத்தையும் பெற்றிருந்தான். இவ்வரத்தினை பெற்ற சூரன் முதலானோர் தம்மைப் போல் பலரை உருவாக்கி அண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் ஆண்டு இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களையும் சிறையிலிட்டு சொல்லொணா துன்பங்களைக் கொடுத்து அதர்ம வழியில் ஆட்சி செய்தனர்.

அசுரர்களின் இக் கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் கைலாயம் சென்று சிவனிடம் முறையிட்டனர். இறைவனும் அவர்கள்மேல் திருவுளம் கொண்டு அவர்களை அந்த துன்பத்தில் இருந்து காப்பாற்றும் நோக்குடன் தனது (ஆறு) நெற்றிக் கண்களையும் திறக்க ( சிவபெருமானுக்கு ஈசானம், தத்புருஷம்) அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய ஐந்து முகங்கள் உண்டு. இவை தவிர ஞானிகளுக்கு மட்டுமே தெரியக்கூடிய ''அதோமுகம்''(மனம்) என்ற ஆறாவது முகமும் உண்டு) அவைகளிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளையும் வாயுபகவான் ஏந்திச் சென்று, வண்ண மீனினம் துள்ளி விளையாடும் தண்மலர் நிரம்பிய சரவணப் பொய்கையில் தாமரை மலர்களின் மீது சேர்க்கப்பட்டன.

அந்த தீப்பொறிகள் ஆறும், உலகின் பொன்னெலாம் உருக்கி வார்த்ததென ஆறு குழந்தைகள் தோன்றின. அந்த ஆறு குழந்தைகளையும் ஆறு கார்த்திகைப் பெண்கள் சீராட்டி பாலூட்டி

வளர்த்து வரும் வேளை, அகிலலோக நாயகி பார்வதி தன் மைந்தர்களை அன்புடன் கட்டியணைத்திட அவையாவும் ஒரு திருமேனியாக வடிவங்கொண்டு , ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடைய ஒரு திருமுருகனாக தோன்றினன் உலகம் உய்ய. ஆறுமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும் உடைய திருவுருவைப் பெற்றமையால் "ஆறுமுக சுவாமி" எனப் பெயர் பெற்றார்.

இந்த ஆறு திருமுகங்களும் ஞானம், ஐஸ்வர்யம், அழகு, வீரியம், வைராக்கியம், புகழ் என்னும் ஆறு குணங்களையும் குறிக்கின்றன. பிரணவ சொரூபரான முருகப் பெருமானிடம் காக்கும் கடவுளான முகுந்தன், அழிக்கும் கடவுளான ரத்ரன், படைக்கும் தெய்வமான கமலோற்பவன் ஆகிய

மும்மூர்த்திகளும் அடக்கம். ஆறுமுகன் சிவாக்கினியில் தோன்றியவன். ஆதனால் "ஆறு முகமே சிவம்: சிவமே ஆறுமுகம்" எனப்படுகிறது.முருகப்பெருமான் அசுரர்களான சூரபத்மாதியரை அழிக்கப் போர் புரிந்த திருவிளையாடலையே நாம் கந்தசஷ்டி விழாவாகக் கொண்டாடகிறோம். சூரபத்மனின் ஒரு பாதி "நான்"என்கிற அகங்காரம், மற்றொரு பாதி " எனது என்கிற மமகாரம்.

பன்னிரண்டு கைகளுடன் ஆறு திருமுகமும் கூடிய அழகின் அழகாய் தேவசேனாதிபதியாய், தேவரும் முனிவரும் வாழ்த்த சர்வ சக்தியாம் பார்வதி தந்த தனிப்பெரும் ஞான வேலை சக்தியாகக் கொண்டு சூரபத்மனைச் சம்ஹாரம் செய்யப் புறப்பட்டுச் சென்றார். அவர்களுடன் முருகப்பெருமான் மேற்கொண்ட போர் ஐப்பசித் திங்கள் வளர்பிறையில் பத்து நாட்கள் நடைபெற்றது. முதல் நான்கு நாட்களில் சூரபத்மனைச் சேர்ந்த வீரர்களை அழித்து அவனது பலத்தை துவம்சம் செய்தார்.

தாரகனையும் அவனுக்கு துணை நின்ற கிரௌஞ்சத்தையும் பிளந்து, சிங்கமுகனை அழித்து பின் சூரனின் சேனை அழிந்த போதும் சூரபதுமனின் ஆணவம் அழியவில்லை. அதனால் முருகன் தனது திருப்பெரும் வடிவம் (விஸ்வரூபம்) காட்டி, எல்லாம் வல்ல பரம்பொருள் தாமே என பரமேசுர வடிவம் காட்டி, சிவனும் அவன் மகனும் மணியும் ஒலியும் போல ஒருவரே என்றுணர்த்தியும், தன் தன்மை மாறாது மாயைகள் பல புரிந்து சூரன் போர் செய்யலானான்.

அறுதியாக நடுக்கடலில் மாமரமாய் நின்ற சூரபத்மனை, முருகன் தன் வேலாயுதத்தால் இரு கூறாக்கினார். ஆணவம் அழியப்பெற்ற சூரன் தம் தவறை உணர்ந்து, தன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படி மன்றாடி வேண்டி நிற்க, ("ஈருடலும் ஒருயிருமாய் இருந்த சூரபதுமன்) அவை இரண்டையும் முருகன் தன் அருளால் சேவலாகவும், மயிலாகவும் மாற்றி, மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியிலும் தன்னுடன் பிணைத்துக் கொண்டார்.

ஞானசக்தியின் வேலின் தாக்கத்தால் ஆணவ மலம் வலியிழந்து ஆன்ம பரம்பொருளின் திருவடி அமைந்ததெனும் மறைபெருளை உணர்த்த அனுஷ்டிக்கப்படும் விரதமே கந்தர் சஷ்டி விரதம். இந்த அருட்பெரும்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசிமாத வளர்பிறை முதலாறு நாட்களையும் விரத நாட்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்று வந்தனர். இதுவே கந்தசஷ்டி என்ற நாமத்தோடு நாம் அனுஷ்டிக்கும் விரதமாகும்.

கந்தசஷ்டி விரத அனுஷ்டானங்களும் விதிமுறைகளும்

நாம் ஆறுமுகநாவலரின் "விரதம்" என்பதற்கான வரைவிலக்கணத்தை நோக்கின் "மனம், பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும், மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் இறை அன்போடு, கடவுளை விதிப்படி வழிபடல்"என்றார். அவ்வாறான கட்டுப்பாடுகளினூடாக ஐம்புலனடங்கி மன அடக்கத்தை கந்த சஷ்டி விரதம் நமக்கு உணர்த்துகிறது.

இவ்விரதம் ஆறு வருடங்கள் தொடர்ந்து கைக்கொள்ளப்பட வேண்டும். (கார்த்திகை விரதம் பன்னிரண்டு வருடங்களும், வெள்ளிக்கிழமை விரதம் மூன்று வருடங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றது) உபவாசம் அல்லது ஒரே நேர உணவு என்பது உணவு நியதி. ஆறு வருடமும் அல்லது பன்னிரண்டு வருடங்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். முறைப்படி சங்கல்பபூர்வமாக ஆரம்பித்து இறுதி வருடம் விரத முடிவில் விரதோத்யாபனம் செய்து பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

கந்த சஷ்டி என்னும் போது அதற்கென சில விரத நியதிகள் தனித்துவம் பெற்று திகழ்கின்றன. இவ்விரதம் அனுஷ்டிக்க விரும்புவோர் விரத நாட்களில் வைகறையில் துயில் எழுந்து சந்தியாவந்தனம் முதலிய காலைக்கடன்களை முடித்து, ஆற்றில் இறங்கி நீரோட்டத்தின் எதிர்முகமாக நின்று, தண்ணீரில் ஷட்கோணம் வரைந்து, அதில் சடாச்ஷர மந்திரத்தை எழுத வேண்டும். "ஓம்"என்ற பிரணவ மந்திரத்தையும் நடுவில் எழுதி முருகனை மனதில் இருத்தி, நீரில் மூழ்கி எழ வேண்டும்.

கிணறு, குளம் போன்ற நீர்நிலைகளில் நீராடுபவர்கள் வடதிசை நோக்கி நின்று மேற்கூறியவாறு தூய நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து அமைதியான இடத்திலோ அல்லது ஆலயத்திலோ அமர்ந்து அல்லல் தீர்க்கும் ஆறுமுகப்பெருமானை நினைத்து தியானம் செய்ய வேண்டும். தியானத்துடன் நில்லாது மனம் பொறிவழிச் செல்லாது இறையருளை நாடி வேறு சிந்தனையின்றி களிப்புற வேண்டும். விரத காலங்களில் மனம் வேறு எண்ணங்களில் ஈடுபடாதிருக்க கந்தசஷ்டி கவசம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தர் கலிவெண்பா போன்ற நூல்களைப் படிக்க வேண்டும். முருகனாலயங்களில் இவ்விரத நாட்களில் கந்தபுராண படனம் நடைபெறும். இதை தவறாது கேட்டல் மிகவும் ஆன்மிக நன்மை பயக்கும்.

தண்ணீர் கூட அருந்தாது ஆலயத்தில் வழங்கப்படும் பானகம் (தீர்த்தம்) மட்டும் அருந்தியிருத்தல் உத்தமோத்தமான விரதமாகும்.பானகமென்பது சர்க்கரை, தேசிக்காய், இளநீர் முதலியன கலந்து தயாரிக்கப்படும் ஒரு நீராகாரம் ஆகும். பட்டினி கிடக்கும் வயிற்றினுள் வெளிப்படும் அதிக சக்திமிக்க வெப்பம், வாய்வு, பித்தம் இவற்றைத் தணித்து உடற்சமநிலையைப் பேணுவதற்கும், பசி, தாகம் இவற்றை ஓரளவு தணிக்கவும் இது உதவுகிறது.

கந்தசஷ்டி விரத நாட்களில், ஆன்மா மும்மலங்களையும் நீக்குவதற்குரிய பக்குவமான மனதுடன் நாம் இருக்க வேண்டும். உணவையும் உறக்கத்தையும் தவிர்த்து, தனித்திருந்து செய்யும் தவமே கந்தசஷ்டி விரதம். அதற்குரிய பலன் மும்மலம் நீங்கி ஆன்மா முக்தியைப் பெறுவதே ஆகும்.

இந்த ஆறுநாட்களும் பூரண உபவாசம் இருப்பது அதி உத்தமம் எனக் கருதப்படுகிறது. மிளகுகளை விழுங்கி, பழம் மட்டும் உண்டு, தீர்த்தம் குடித்து, இளநீர் குடித்து ஒரு நேர உணவு மட்டும் உண்டு அவரவர் தேக நிலைக்கேற்ப "கந்தசஷ்டி"விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். விரதம் ஆரம்பமான தினத்தில் ஆலயம் சென்று சங்கல்ப்பம் செய்து காப்புக் கட்டி விரதத்தைத் ஆரம்பிக்கவேண்டும்.

ஒரு விரதத்தை ஆரம்பிக்கும் முன் விததத்திற்கான நோக்கம், அதனைக் கடைப்பிடிக்கும் முறை இவ்வளவு காலம் அனுஷ்டிக்கப் போகிறேன் என்று உறுதியாகத் தீர்மானம் செய்து (சங்கல்பம்) ஆலயம் சென்று சங்கல்ப்பபூர்வமாக அர்ச்சனை வழிபாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டும். குறிப்பிட்ட கால எல்லை வரை மாற்றமின்றி அவ்விரதத்தை ஒழுங்காககக் கைக்கொள்ள வேண்டும்.

விரத நியமனங்களை ஆரம்பத்திலேயே அளவுடன் கைக்கொள்வது நன்று. கடுமையான முறையில் ஆரம்பித்து பின்னர் அரைகுறையாக நிறுத்தக்கூடாது. விரதத்தை கிரமப்படி அனுசரிக்க முடியாதவர்கள் தம்மாலியன்றளவு அனுசரிப்பதே தகுதி. தம்மளவுக்கு மீறி உடலை வருத்த நேரிடின் விரதத்தில் வெறுப்பு தோன்றும். இதனால் விரத பலன் இல்லாமல் போய்விடும்.

விரதங்கள் மக்களின் மனவலிமை அதிகமாகவும், நம்பிக்கைகளின் அடிப்படையில், அவர்களது வாழ்வில் வளமும், நலமும், மிகுவதற்கு பயன்படுகின்றன. ஏனைய விரத அனுட்டானங்களைப் போலன்றி கந்தசஷ்டி விரதானுஷ்டானத்தை ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கடைப்பிடிக்கின்றார்கள். மாணவர்கள் படிப்பிற்கும், குடும்பப் பெண்கள் குடும்ப நன்மைக்கும், கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழ்க்கைத் துணையாக அடைய வேண்டியும், குழந்தை இல்லாதோர் குழந்தை வேண்டியும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

# திருவெம்பாவை விரதமும், மார்கழி மாதத்தின் சிறப்பும்

மார்கழி மாதம் மங்களங்கள் நிறைந்த சிறப்புமிக்க மாதமாகும். இந்து மக்களுக்கு இறைவணக்கத்துக்குரிய புனித மாதமாகும். சிவனையும், மஹாவிஷ்ணுவையும் சிறப்பாகப் போற்றி வணங்கும் மாதம் இது.

"மாதங்களில் நான் மார்கழி" என்று கிருஷ்ண பகவான் கீதையில் அர்ச்சுனனுக்கு கூறியுள்ளார். "மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாள்" என்று திருப்பாவையில் ஆண்டாள் பாடியுள்ளார். இவ்வாறு மார்கழி மாதம் மிகவும் சிறப்புப் பெற்றுள்ளது.

கிருஷ்ணருக்குரிய வைகுண்டஏகாதசியும், சிவனுக்குரிய திருவெம்பாவைத் திருவாதிரையும் மார்கழி மாதச் சிறப்பை மேலும் மெருகூட்டி நிற்கிறது. மார்கழித் திருவாதிரை ஆருத்ரா தரிசனமும், மார்கழி மாதம் முப்பது நாட்களும் ஆண்டாள் திருப்பாவை பாடி மகளிர் அருட்பெருக்குடன் சந்தோஷம் கொண்டாடும் காலம்.

மார்கழி மாதத்தின் சிறப்பினை வர்ணிக்க முடியாத அளவுக்கு மகத்துவம் மிக்கதாக இந்த மாதம் ஒளிர்வதற்கு விஷேட காரணங்கள் உண்டு. மனிதகுலம் ஒரு வருடமாகக் கணிக்கும் காலப்பகுதி தேவர்களுக்கு ஒரு நாளாகும். தை மாதம் முதல் ஆனிமாதம் வரை உத்தராயணம் என்று சொல்லப்படும் காலம் தேவர்களுக்கு பகல் பொழுதாகும். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை அவர்களுக்கு இரவுக் காலமாகும். இதை தட்சிணாயணம் என்று அழைக்கப்படுகிறது. இந்த தட்சிணாயணத்தின் நிறைவுப் பகுதி – அதாவது, தேவர்களைப் பொறுத்தவரை இரவுப்பொழுது நிறைவடையும் காலமான அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரையான நேரமே மார்கழிமாதம் என்று பொருள் கொள்ளலாம். இதை பிரம்ம முகூர்த்தம் என்றும் சொல்வார்கள்.

இந்தக் காரணத்தால்தான் தேவர்களை வரவேற்கின்ற விதமாக மார்கழி மாதத்தில் அதிகாலை 4 மணி முதல் 6 மணிக்குள் வீட்டு வாசலில் பெண்கள் வண்ணக் கோலமிடுவதை வழக்கமாகக் கொண்டனர். அந்த அதிகாலை நேரத்தில் அழகிய கோலத்தின் நடுவே விளக்கேற்றி வைத்து, தேவர்களை வரவேற்று நிற்பதாக மனதில் எண்ணி வணங்குவார்கள். இந்நிகழ்ச்சியானது மனதில் மட்டற்ற மகிழ்ச்சி பொங்குவதுடன் இல்லம் நிறைந்து மகாலட்சுமியின் அருட்கடாட்சம் கிடைப்பதான மனநிறைவும் கிடைக்கிறது.

மார்கழி மாதத்தில் பெருமாள் கோயில்களில் வைகுண்ட ஏகாதசியன்று விஷேட பூசைகளும், விழாக்களும் நடைபெறும். சைவக்கோயில்களில் திருவாதிரை நட்சத்திரத்துக்கு ஒன்பது நாட்கள் முன்பதாக வரும் சிவனுக்குரிய விதம் நோற்கும் திருவெம்பாவைக் காலமாகும். மார்கழித் திருவாதிரையில் சிவனை வணங்குவது பெரும் பேறாகும்.

மார்கழித்திருவாதிரை நன்நாளில் இறைவன் திருநடனத்தில் ஈடுபவனாக, சிதம்பரத்தில் ஆனந்தத் திருநடனம் ஆடி உலகுய்ய வைத்ததாக புராணங்கள் கூறுகின்றன. ஆடல்வல்லான் உடுக்கை நாதத்தால் தோற்றம், அபயக்கரத்தால் காத்தல், தீப்பிளம்பேற்றிய கரத்தால் அழித்தல், முயலவன் என்ற அசுரனின் மேல் ஊன்றி நிற்கும் வலது காலால் மறைத்தல், தூக்கிய திருவடியால் அருளல் ஆகிய ஐந்தொழில்களும் வெளிப்படுத்தப்படுகிறது. ஆண்டவத் தாண்டவத்தின் திருவுருவத்தை நாங்கள் இன்றும் சிதம்பரத்தில் நடராஜர் வடிவில் காணலாம். திருவெம்பாவை திருவாதிரைத்திருவிழா மிகச் சிறப்பாக சிதம்பரத்திலும் ஏனைய ஆலயங்களிலும் கொண்டாடப்படுகின்றது.

தேனினும் இனிய திருவாசகத்தை இந்த உலகுக்குத் தந்தவர் மாணிக்கவாசக சுவாமிகள். திருவாதவூரர் என்ற பிள்ளைப்பருவ நாமத்துடன் தோன்றிய இவர் இளம்வயதிலேயே கலைஞானம் முற்றும் கைவரப்பெற்றவராக அரிமர்த்தன பாண்டியனது அமைச்சராகத் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டத்துடன் விளங்கினார் வாதவூரர். இளமையிலிருந்தே சிவபக்தியில் சிறந்து விளங்கினார். அரிமர்த்தன பாண்டியனுக்காகக் குதிரை வாங்கச் சென்ற வழியில் சிவபெருமான் ஞானசாரியராக எழுந்தருளிவந்து குருந்த மர நிழலில் திருவாதவூரருக்கு தீட்ஷைகள் கொடுத்து உபதேசம் செய்து தடுத்தாட்கொள்ளப்பட்டார்.

தன்னை ஆட்கொண்ட குருநாதரைத் துதிக்குமுகமாகத் திருவாசகப்பாடல்கள் பாடலாயினர் வாதவூரர். இதைக்கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் அவருக்கு மாணிக்கவாசகன் என தீக்ஷா நாமம் வழங்கினார்.

சிவசிந்தனையில் தன்நிலை தளர்ந்த மாணிக்கவாசகப் பெருமான் குதிரை வாங்கும்பொருட்டு கொண்டு சென்ற திரவியங்களையெல்லாம் சிவாலய திருப்பணிகளுக்காகச் செலவிட்டார். திருப்பெருந்துறையில்

சிவாலயம் ஒன்றைக் கட்டினார். இச்செய்தியை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் கோபமடைந்தான். குதிரைகளுடன் புறப்பட்டு உடனே வருமாறு ஓலை அனுப்பினான்.

ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று சொல்லி அனுப்புமாறு குருநாதர் அருளவே, மணிவாசகரும் அவ்வாறே தெரிவித்தார். உண்மையில் குதிரைகள் வாங்கப்பெறவில்லை என்பதை அறிந்த பாண்டியன் அவரைப் பலவாறும் துன்புறுத்தினான். வாதவூரர் படும் துன்பங்களை உணர்ந்த இறைவன் நரிகளை பரிகளாக்கி தானே வேதக்குதிரையின் மீது அழகனாக எழுந்தருளி பாண்டியன் அதிசயிக்குமாறு குதிரைப்படைகளை நடத்திக் காட்டினார். குதிரைகள் அனைத்தையும் பாண்டியனிடம் ஒப்படைத்தார்.

ஆனால் அன்று இரவே குதிரைகள் எல்லாம் மீண்டும் நரிகளாக மாறி ஊழையிட்டன. இதன்விளைவாக மீண்டும் வாதவூரர் பாண்டியனால் கடுமையாக தண்டிக்கப்பட்டார். வைகை ஆற்றங் கரையில் கடும் சுடுமணலில் நிற்கவைக்கப்பட்டார். துன்பம் துடைக்கும் பெருமான் வைகையில் வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்தார் வைகைக் கரை உடைந்தபோது கூலியாளனாக பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்டார். இறைவனின் திருவிளையாடல்களை பாண்டிய மன்னனும் உணர்ந்தான்.

வாதவூரடிகள் தனது அரச பதவியைத் துறந்து, சிவத்தொண்டாற்ற விரும்பி மீண்டும் தனது குருநாதரை அடைந்து திருவாசகப் பாமாலை சூட்டி மகிழ்ந்திருந்த வேளையில், பல தலங்களையும் தரிசித்துவிட்டுத் தில்லைக்கு வருவாயாக என்று அருளியபின் பெருமான் மறையவே, பிரிவால் துன்துற்றார் மணிவாசகர். இதனைத் தொடர்ந்து திருவண்ணாமலையை அடைந்து திருவெம்பாவைப் பாடல்களை அருளினார். தில்லையில் பொன்னம்பலக்கூத்தரைத் தரிசித்து பல பாடல்களை பாடியருளினார் அடிகள். அப்போது ஈழநாட்டரசனது பெண்ணின் ஊமைத்தன்மை நீங்குமாறு திருச்சாழல் பாடினார்.

இவ்வாறு பலதலங்களும் சென்று பல பதிகங்களையும் பாடிவரும் வேளையில், இறைவனே அந்தணனாக எழுந்தருளி அவர் பாடிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் தனது திருக்கரங்களால் எழுதிக் கையொப்பமிட்டு, தில்லைச்சிற்றம்பலத்தின் பஞ்சாக்ஷரப் படியில் வைத்து மறைந்தான். மறுநாள் காலை அவ்வோலைச்சுவடிகளைக் கண்ட தில்லைவாழந்தணர்கள், இறைவனது கட்டளைப்படி மாணிக்கவாசகரைத் தில்லை அம்பலவனின் திருச்சன்னதிக்கு அழைத்து வந்து அத் தெய்வீக நூல்களின் பொருளை விளக்கியருளுமாறு வேண்ட, அடிகளும் எல்லோரும் காணுமாறு அதன் பொருள் அம்பலவனே என்று கூறி, குஞ்சித பாத கமலங்களில் இரண்டறக் கலக்கும் பேரின்பப் பேற்றைப் பெற்றார்.

மாணிக்கவாசகரால் எழுதப்பட்ட பெரும் நூல்கள் இரண்டு. 1. திருவாசகம் 2. திருக்கோவையார். இவற்றுள் திருவாசகம் என்பது ஒரு பெரிய தொகுப்பு நூல். இதில் மொத்தம் 51 பாடல் நூல்கள் உள்ளன. அவற்றுள் பத்துப் பத்துப் பாடல்களாகப் பாடிய பதிகநூல்களே அதிகம். நீண்ட பாடல்களாக விளங்குபவை சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம் ஆகியவை. இவற்றில் பல பாடல்கள் புகழ்பெற்றவையாய் விளங்கிடினும், மிக அதிகமாக வழங்கப்படுபவை, சிவபுராணம், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஆகியவையாகும். மாணிக்கவாசகப்பெருமான் எமக்களித்த இவ்வரிய பொக்கிசங்கள் மார்கழி மாதத்திற்கு மேலும் சிறப்பினைத் தருகின்றது.

## நவக்கிரகப் பாடல்கள்

1. சூரியன்

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புரியும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

2. சந்திரன்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குரு போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சதுரா போற்றி.

3. செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறையிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு.

3. புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே அருளும் உத்தமா போற்றி.

5. வியாழன்

குணமிகு வியாழக் குரு பகவானே
மனமுடன் வாழு மகிழ்வுடன் அருள்வாய்
பிருகஸ்பதி வியாழப் பரத குரு நேசா
கிரகதோஷ மின்றி கடாட்சித் தருள்வாய்.

6. சுக்கிரன்

சுக்கிர மூர்த்தி சுபமிக ஈவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே.

7. சனி

சங்கடந் தீர்ப்பாய் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத் தருள்வாய்
சச்சரவின்றி சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தா தா.

8. ராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள் புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

9. கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரட்ஷி.

# சனி பகவான் ஸ்தோத்திரம்

தேவர் இரண்டிசைக் கதிபர் சித்தரோடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை மேவியிறுந்
தாரணிந்த மார்பன் சனி பகவான் கதை புகலக்
காரணிந்த யானை முகன் காப்பு.

ஆதிவேதாந்த முதலரிய ஞான
ஐந்தெழுத்தினுட் பொருளயன் மாலொடும்
சோதி சிற்றம் பலத்திலாடி நின்ற
சுடரொளியை நீ பிடித்த தோஷத்தாலே.
பாதிமதிச் சடைக் கணிய அரவ பூணப்
பதியிழக்கச் சுடலைதனிற் பாடி ஆடச்
சாதியில்லா வேடனிற் சிற்றின்ன வைத்தாய்
சனியனே காகமேறும் தம்பிரானே.

வேலவனை வேங்கை மரமாக்கி வைத்தாய்
விறகுகட்டச் சொக்கர் தமை விற்க வைத்தாய்
மாவியை உரலோடு கட்டி வைத்தாய்
வள்ளிதனைக் குறவரது மனத்தில் வைத்தாய்
பாலனை மார்க் கண்டனுக்காக ஹரனுதைத்த
காரணமும் நீ பிடித்த கருமத்தாலே
சாலவுனை யானை தொழுதேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே.

மஞ்சு தவழ் அயோத்தியில் வாழ்தசரதன் தன்
மக்களையும் வனவாச மாக்கி வைத்தாய்
பஞ்சவர்கள் சூதினால் பதியிழந்து
பஞ்சு படும் பாடை அவர்படச் செய்வித்தாய்
எஞ்சலா அரிசந்திரன் பெண்டை விற்றே
இழிகுலத்தில் அடிமையுற இசைய வைத்தாய்
தஞ்சமென உனைப் பணிந்தேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே.

அண்டமாயிரத் தெட்டு அரசு செய்த
அடல் சூரபத்மனையும் அடக்கி வைத்தாய்
மண்டலத்தை ஆண்ட நளச் சக்கரவர்த்தி
மனைவியோடு வனமதனில் அலையச் செய்தாய்
விண்டலத்தை பானு கோபன் தன்னாலே
வெந் தணலாய்ச் சூரரையும் வெருவச் செய்தாய்
தெண்டனிட்டேன் எந்நாளும் எனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே.

அண்டர்கோன் மேனியிற் கண்ணாக்கி வைத்தாய்
அயன் சிரத்தை வயிரவனால் அறுக்க வைத்தாய்
திண்டிறல் கொள் கௌதமன் அகலிகைதான்
சிலையாகவே சாபமுறவே செய்தாய்
திண்டரள நகையிரதி மாரன்தன்னைச்
சங்கரனார் நுதல் விழியில் தணல் செய்வித்தாய்
சண்டமிலா உனைத் தொழுதேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே.

பாருலவு பரிதியைப் பல்உதிர வைத்தாய்
பஞ்சவர்க்குத் தூது பீதாம்பரனை வைத்தாய்
தாருலவு வாலி சுக்ரீவன் தம்மைத்
தாரை யினால் தீராத சமர் செய்வித்தாய்
சூரனெனும் இலங்கை ராவணன் தன் தங்கை
சூர்ப்பனகி மூக்குமலை துண்டு செய்வித்தாய்
தாரணியும் மணிமார்பா எனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே.

சுக்கிரன் தன் கண்ணிழந்தான் இலங்கை யாண்டு
துலங்கு ராவணன் சிரங் கண்டிக்க வீழ்ந்தான்
மிக்கபுகழ் இரணியன்தான் வீறழிந்தான்
விளங்கு திரிபுராதி களும் வெந்து மாண்டார்
சக்கரத்தால் உடலருந்தான் சலந்தரன்றான்
தாருகா சூரனுமே சமரில் மாண்டான்
தக்கன் மிகச் சிரமிழந்தானின் தோஷத்தால்
சனியனே காகமேறும் தம்பிரானே.

அந்த முள ஐங்கரன் கொம்புறவே செய்தாய்
அறு முனிவர் மனைவிகள் கற்பழியச் செய்தாய்
சந்திரன் தன்கலையளிந்து தழைக்கச் செய்தாய்
சங்கரனைப் பிச்சை தானெடுக்கச் செய்தாய்
தந்திமுகச் சூரன் உயிர் தளரச் செய்தாய்
சாரங்கதாரன் கரத்தைத் தறிக்கச் செய்வாய்
சந்ததமும் உனைப் பணிவேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே.

சீதைதனை இராவணனால் சிறை செய்வித்தாய்
தேவர்களைச் சூரனால் சிறை செய்வித்தாய்
மாது திரௌபதை துயிலை வாங்கு வத்தாய்
மகேஸ்வரனை உமை பிரியும் வகை செய்வித்தாய்
போதிலயந் றாளிற்றளை புட்டுவித்தாய்
போதிகையினால் அகத்தியனைப் பொருந்தச் செய்வாய்
தாதுசேர் மலர் மார்பா எனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே.

அப்பர்தமை கருங்கல்லோடு அலையிற் சேர்த்தாய்
அரனடியின் முயலகனை அடங்கச் செய்தாய்
செப்பு மாணிக்கர் தமைச் சிறையிலிட்டாய்
ஸ்ரீராமனை மச்ச உருஎடுக்கச் செய்தாய்
ஒப்பிலா அனுமான் வாலில் ஒளி தீயிலிட்டாய்
ஒலிகடலின் நஞ்சை அரன் உண்ணவைத்தாய்
தப்பிலா உனைத் தொழுதேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே.

நீரினையுண்டெழு மேக வண்ணா போற்றி
நெடுந்த பத்திலுறு கமலக் கண்ணா போற்றி
சூரியன் தன் தவத்தில் வந்த பாலா போற்றி
துலங்கு நவக்கிரகத்தின் மேலா போற்றி
காரியென் பவர்களு பகாரா போற்றி
காசினியிற் கீர்த்தி பெற்ற தீரா போற்றி
மூரி கொளு நோய் மகமா முடவா போற்றி
முதுமகளின் முண்டகத்தாள் போற்றி போற்றி.

சூரியன் சோமன் செவ்வாய்
சொற் புதன் வியாழன் வெள்ளி
காரியனி இராகு கேது
கடவுளர் ஒன்பது நாமத்
தாருயச் சக்கரத்தை
தரித்திரர் பூசித்தாலும்
பாரினில் புத்திரர் உண்டாம்
பாக்கியம் நல்குந் தானே.

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட பரநளவ
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

மெய்தான் அரும்பி விதிர்விதித்துஉன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றிசயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணு டையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனேன் இயம்புமா றிசையே

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே

ஏகநாயகனை இயமையவர்க் கரசை
என்உயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா லூர்ந்த
மேகநாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை அன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே

இடர்கெடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட்பிழம்பற வெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கினுள் ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப்பாகா அம்பலக்கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன்வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை யாதிரை நாள்
நாராயணனொடு நான்முக னங்கி
யிரவியும் இந்திரனும்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திரையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் மாடியும்
பல்லாண்டு கூறுதுமே

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்தது தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள்மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழி வழி
யாளாய் மணஞ் செய் குடிப்பிறந்த
பழஅடியாரொடும் கூடி எம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தான் உதித்தனன் உலகமுய்ய

## கோளறு பதிகம்

வேயுறு தோளி பங்கன் விட முண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்து
என் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

### வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !

தேவி துணை

ஓம் சக்தி

## கௌரிக் காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொரு பொருட் குற்றம் சோர்வு தரும்
எக் குற்றமும் வராமற்கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்னுள் இருந்தே என்னைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகாதேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனே எண்ணியல்லோ சங்கரி நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றும் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா

பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா

பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுனக்குத் தாரேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியலே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினையாவும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே

காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டு விட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா

காப்பு கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்

ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளை செய்திடுவேன்
ஏயப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாமல் செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி

சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனத்துடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாம் தந்தருள்வாள் சீர்பெருகு கௌரியவள்
முக்திக்கு வழியுமுண்டு முக்கால் உணர்வுமுண்டு

எச்ச சக்திலுள்ளோரெல்லாம் ஏற்றியெமை போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அகச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர

ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்

## பஞ்சபுராணம்

ஞாயிற்றுக்கிழமை

### தேவாரம்

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வ வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வஞ் செல்வமே.

### திருவாசகம்

ஆடுகின்றலை கூத்து யான் கழற் (கு)
அன்பிலை என்புருகிப்
பாடுகின்றலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றலை சூட்டுகின்றதுமிலை:
துணையிலி பிணநெஞ்சே!
தேடுகின்றலை தெருவுதோ றலறிறை:
செய்வ தொன்ற றியேனே.

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

### பெரிய புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்

நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்

### திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே

திங்கட்கிழமை

## தேவாரம்

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலாட மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

## திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடி யேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடவு ளிருக்கும்
அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடிஎம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே!

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## செவ்வாய்க்கிழமை

### தேவாரம்

கானருகும் வயலருகுங் கழியருகுங் கடலருகும்
மீனரிய வருபுனலில் இரைதேர்வெண் மடநாராய்
தேனமர் தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வானமருஞ் சடையார்க்கென் வருத்தம் சென்று உரையாயே.

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

### திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை, எதிர்இல்
போகநாயகனைப், புயல்வனற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேகநா யகனை, மிகு திருவீழி
மிழலை விண் ணிழி செழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

### திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்வீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

### பெரியபுராணம்

திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழுதார்:
பரிவரிய தொண்டர்களும் பணிந்துமனம் களிபயின்றார்:
அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாரம் மறைமுனிவர்.

### திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றன் உயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைத் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

## புதன்கிழமை

### தேவாரம்

ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்
என்றுவந் தாயென்னும் எம்பெருமான் தன்திருக்குறிப்பே.

### திருவாசகம்

சிரிப்பாய் களிப்பார் தொனிப்பார்
திரண்டு திரண்டுன் வார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெள்வே றிருந்துன் திருநாமத்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே.

### திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ! உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதுஅருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

### திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்
பெற்ற தார்பெறு வார் உலகில்
ஊரு முலகுங் கழற உழறி
உமை மணவாளனுக்கட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

### பெரியபுராணம்

செங்கண் விடையார் திருமலர்க்கை
தீண்டப் பெற்ற சிறுவனார்
அங்கண் மாயை யாக்கையின்மேல்
அளவின்று உயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளின்
மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்கவமரர் துதி செய்யச்
சூழ்ந்த ஒளியில் தோன்றினார்.

### திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள் புய மதயானை
மத்தள வயிறனை யுத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட வெழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வியாழக்கிழமை

### தேவாரம்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங் குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

### திருவாசகம்

மாய னேமறி கடல்விடம் உண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயினேன் உனை நினையவும் மாட்டேன்
நமச்சிய வாயஎன் றன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞகனேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

### திருவிசைப்பா

மின்னார் உருவம் மேல்வி ளங்க
வெண்கொடி மாளிகை சூழல்
பொன்னார் குன்றும் ஒன்று வந்து
நின்றது போலும் என்னாத்
தென்னா என்று வண்டு பாடும்
தென்தில்லை யம்பலத்துள்
என்னா ரமுதை எங்கள் கோவை
என்று கொல் எய்துவதே!

### திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்புஎன்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவுஎன்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்குஇனிய வாம்என்றும்
அவனுடைய நிலைஇவ்வாறு; அறிநீ என்று அருள் செய்தார்.

### திருப்புகழ்

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முற அருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுன திரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரும் இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே

## வெள்ளிக்கிழமை

### தேவாரம்

திருவேயென் செல்வமே தேனே வானோர் செழுஞ்
சுடரே செழுஞ்சுடர் நற்சோமிமிக்க
உருவேயென் உறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தினுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோய் அடையாவண்ணம்
ஆடுவடு தண்துறை உறையும் அமர ரேறே.

### திருவாசகம்

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

### திருவிசைப்பா

அல்லாய் பகலாய் அருவாய் உருவாய்
ஆரா அமுதாய்க்
கல்லால் நிழலாய்! கயிலை மலையாய்!
காண அருள் என்று
பல்லா யிரம்பேர் பதஞ்ச லிகள்
பரவ வெளிப்பட்டுச்
செல்வாய்மதிலின் தில்லைக் கருளித்
தேவன் ஆடுமே.

### திருப்பல்லாண்டு

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்க(கு)இவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனக மும்அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

### பெரியபுராணம்

திரிபுரம் எரித்தவாறும்
தேர்மிசை நின்றவாறும்
கரியினை உரித்தவாறும்
காமனைக் காய்ந்தவாறும்
அரி அயற்கு அரியவாறும்
அடியவர்க்கு எளியவாறும்
பிரிவினர் பாடக் கேட்டுப்
பரமனார் அருளினாலே.

### திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடுநீலக் கடலாலே
மெல்லவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

## சனிக்கிழமை

### தேவாரம்

பொன்னார் மேனியனே புலித்தோலையரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே

### திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

### திருவிசைப்பா

எழுந்தருளாய் எங்கள் வீதி யூடே
ஏதமில் முனவரோ டெழுந்த ஞானக்
கொழுந்தது வாகிய கூத்த னேநின்
குழையணி காதினின மாத்தி ரையும்
செழுந்தட மலர்புரை கண்கள் மூன்றும்
செங்கணி வாயும் என் சிந்தை வெளவ
அழுந்தும் என் ஆருயிர்க் கென்செய் கேனோ
அரும்புனல் அலமரும் சடையினானே!

### திருப்பல்லாண்டு

எந்தைஎன் தாய்சுற்றம் முற்றும் எமக்கும்
தாம்எம் பிரான்என் றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
அடிநாய் செப்புரை அந்தமில்
ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்(து)
ஆண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேஎன்று
பல்லாண்டு கூறுதுமே.

### பெரிய புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று உளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது: எங்கும் நிலவி உலகெலாம்.

### திருப்புகழ்

அற்றைக் கிரைதேட அத்தத்திலு மாசை
பற்றித் தவியாத பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் தொலைசீலா
கற்றுற் றுணர்போதா கச்சிப் பெருமாளே

ஓம் சரவண பவ

# கந்தர் சஷ்டி கவசம்



காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர்அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரன்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியுங்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்றேன் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்

குண்டலியாஞ் சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணி முடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்

இருதொடையழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்(து) உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா விநோதன் என்(று)
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில் வேல் காக்க

பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணை வேல் காக்க
முன்கை இரண்டும் முரண் வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனைய வேல் காக்க
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இதுன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரும் மிகு பல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர்கள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலற மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக

சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட வி ங்கள் கடித்துயரங்கள்
ஏறிய வி ங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைதாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே முலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திக ழொளி பவனே
பரிபுர பவனே பவம் ஒழிபவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துக் தேவர்கள் கடுஞ் சிறைவிடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடுப்பனை அழித்த, இனிய வேல்முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவின் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரி வாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறு உருக்கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அட்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலார் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலான் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்த முதளித்த
குபேரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக்குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத்தாட் கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



## திருவெம்பாவை

திருவண்ணாமலையில் அருளியது

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோவன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய். 01

பாசம் பர' சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கன்பார்யாம் ஆர் ஏலோர் எம்பாவாய் 02

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம்புன்மை தீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமையெல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 03

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியார் எல்லாரும்வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருகயாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக்குறையில் துயில் ஏலோர் எம்பாவாய். 04

மால் அறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீகடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியாள்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 06

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உனற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரை யனின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னேங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 07

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 08

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய். 09

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர்உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைத்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கச் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழா மாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடி சூர்கொன்றை தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவாநெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
,ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னைச் சிலைகுலவி நந்தம்பை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
யென்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்ப
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள்சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல்பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
பொற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய் 20

திருச்சிற்றம்பலம்

நாத விந்துக ளாதீ நமோ நம
வேத மந்த்ரசொ ரூபா நமோ நம
ஞான பண்டித சாமீ நமோ நம - வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்தம யூரா நமோ நம - பரசூரர்
சேத தண்டவி நோதா நமோ நம
கீத கிண்கிணி பாதா நமோ நம
தீரசம்ப்ரம வீரா நமோ நம – கிரிராஜ
தீப மங்கள சோதீ நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம - அருள்தாராய்
ஈதலும்பல கோலால பூசையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மநோ கர
ராச கெம்பீர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி - லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் - பெருமாளே.

## மங்களம்

அன்னை அன்னை அன்னை அன்னை
அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சிற்சிவைக்கு மங்களம்

தாழ்வில்லாத தன்மையும் தளர்ச்சியற்ற வன்மையும்
வாழ்வினால் பயன்களும் என் வாக்கிலே வரங்களும்
பக்தியிற் கசிந்தலைந்து பாடுகின்ற பான்மையும்
பாடுவோர்க் கனேகபோக பாக்கியங்கள் மேன்மையும்
என்றுமோங்க என்கரத் தியற்கையான சித்தியைத்
தந்துஞான மூர்த்தியாய்த் தனித்துவைத்த சக்தியாம்
நாமகீர்த் தனம்பரந்து நாடெல்லாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம்பொங்கி வீடெல்லாம் விளங்கவும்
ஞானதீப மேற்றியென்றும் நாமகீதம் பாடுவோம்
தர்மசக்தி வாழ்கவென்று சந்ததம்கொண் டாடுவோம்.

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
சாந்தி சக்தி மங்களம் சர்வ சக்தி மங்களம்
சீதா ராமா மங்களம் ராதாக்ருஷ்ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுபமங்களம்.

நமப் பார்வதீ பதயே
அரஹர மகா தேவா

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க.

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## ஆலயம் திறந்திருக்கும் நேரமும் பூசை நேரமும்

ஆலயத்தில் தினமும் மூன்று காலப்பூஜை நடைபெறுகிறது.

திங்கட்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 08.00 மணியிலிருந்து 10.00 மணி வரையும், காலை 11.30 மணியிலிருந்து பிற்பகல் 13.30 மணி வரையும், திங்கட்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரையும் சனிக்கிழமையும் மாலை 18.00 மணியிலிருந்து இரவு 20.30 மணி வரையும், வெள்ளிக்கிழமை மாலை 18.00 மணியிலிருந்து 22.00 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமை மாலை 16.30 மணியிலிருந்து 19.30 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும்.

திங்கட்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 09.00 மணிக்கும் மதியம் 12.00 மணிக்கும், திங்கட்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரையும் சனிக்கிழமையும் இரவு 19.00 மணிக்கும், வெள்ளிக்கிழமை இரவு 20.00 மணிக்கும், ஞாயிற்றுக்கிழமை மாலை 18.00 மணிக்கும் பூஜைகள் நடைபெறும்.

அபிஷேகம் பூஜை நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் முன்னதாக ஆரம்பிக்கும், விசேட தினங்களில் பூஜை நேரம் மாறுபடலாம். ஆலயத்திடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளவும்.

# OPENING TIJDEN EN PUJA TIJDEN

Opening tijden van de temple zijn maandag tot en met Zonday vanaf 08:00 tot 10:00 uur, 11:30 tot 13:30 uur, Maandag tot en met Donderdag en Zaterdag vanaf 18:00 tot 20:30 uur, Vrijdag 18:00 tot 22:00 uur en Zonday 16:30 tot 19:30 uur.

Puja tijden van de temple zijn maandag tot en met Zonday om 09:00 uur en 12:00 uur, Maandag tot en met Donderdag en Zaterdag om 19:00 uur, Vrijdag om 20:00 uur en Zonday om 18:00 uur.

Tijdens de feestdagen zou de puja tijden anders zijn. Voor meer informative neem contact op met de aangegeven telefoon nummers.


| | | | |
|---|---|---|---|
| Bezoek adres: | Annie Romein Verschoor Laan – 32, 1784 NZ Den Helder | | |
| Post adres: | Postbus 2104, 1780 BD Den Helder | | |
| Telefoon: | (+31) 0223 620313 / 0223 618110 / 0223 683450 | | |
| Fax: | (+31) 0223 683453 | | |
| E-mail: | svs.vinayagar@live.nl | web: | www.hindutemple.nl |
| ABN-AMRO: | NL08abana0587318538 | ING: | NL30INGB0005704050 |
| BIC (SWIFT): | ABNANL2A | K.v.K: | 40 637200 |



ஸ்ரீ வரதராஜ செல்வவிநாயகர் சபை

**VERENIGING SRI VARATHARAJA SELVAVINAYAGAR**

Annie Romein Verschoor laan32, 1784 NZ Den Helder, Nederland
Postbus 2104, 1780BD Den Helder, Nederland (Holland)
ABN-AMRO Bank: NL08ABNA0587318538. ING: NL30INGB0005704050
Geregistreerd bij K.V.K. 40 637200
Tel: (+31) 0223- 620313 / 618110. e-mail: svs.vinayagar@live.nl. www.hindutemple.nl

Designed & Printed @ JR Print, Tel: 0044 208 503 6643, www.jrdigitals.com